சேகர் பதிப்பகம்

14084

# வரலாற்றில் வில்லியனூர்

புலவர் ந. வேங்கடேசன்

(1979)

முன்னம் இருந்த பெருங்கலைகள் நெஞ்சில்
மூண்டு எழுந்ததடா - அதை
என்னரும் நாட்டினர் யாவரும் ஏற்றிட
ஏட்டில் பதிந்தேனடா!

மண்ணில் புதைந்தநம் மாபெரும் வாழ்வினை
கண்முன் கொணர்ந்தனராம் - அவர்
எண்ணியே சிந்தனை ஏடுகள் தந்ததைக்
கண்ணெனப் போற்றிடுவோம்!

# வரலாற்றில்
# வில்லியனூர்

புலவர்
ந. வேங்கடேசன்

## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | VARALATRIL VILLIYANUR |
| Author | PULAVAR N. VENKATESAN |
| Language | Tamil |
| Edition | First., June, 1979 |
| Copyright holder | Sekar Pathippagam |
| Paper used | Double Crown White Printing |
| Size of the book | 18×1.25 c.m. |
| Printing Points used | 11pt & 10pt |
| No. of Pages | 200 |
| No. of Copies | 1200 |
| Printer | Vettri Achagam, Madras-5 |
| Binding | Card Board Binding |

---

| | |
|---|---|
| Price | Rs. 12 - 00 |

---

| | |
|---|---|
| Publisher | SEKAR PATHIPPAGAM<br>Madras - 600 083 |
| Subject | History - Inscriptions |
| Call Number | V 441 : 82. M1<br>N 79 |

# வரலாற்றில் வில்லியனூர்

புலவர் ந. வேங்கடேசன்

**சேகர் பதிப்பகம்**

புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்

66, பெரியார் தெரு,

எம். ஜி. ஆர். நகர், சென்னை-600 083

முதற்பதிப்பு
ஜூன், 1979

உரிமை
பதிப்பகத்தாருக்கு

விலை
ரூ 12.00

அச்சிட்டோர்
வெற்றி அச்சகம்
கஜபதி லாலா சந்து
சென்னை-5

# நூல் உருவாக்கியோர்


| | |
|---|---|
| ஆசிரியர் | புலவர் ந. வேங்கடேசன் |
| முகப்பு ஓவியம் | கவிஞர் அமுதோன் |
| பிளாக் | தணிகாசலம் |
| அச்சுக் கோப்பாளர் | சங்கரன், தங்கம், ராஜேஸ்வரி, ஆஷா, கன்னிகா |
| அச்சகத்தார் நூல் | எஸ். குப்புசாமி வெற்றி அச்சகம் |
| அச்சகத்தார் உட்புறப் படங்கள் | ஜீவன் பிரஸ், சென்னை-5 |
| அச்சகத்தார் முகப்பு வண்ணம் | சோல்டன் அச்சகம் சென்னை-5 |
| கட்டுக்கோப்பு | பெருமாள் |
| பிழை திருத்தியோர் | மா. ரா. இளங்கோவன் புலவர் சு. குப்புசாமி |
| பதிப்பாளர் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் சேகர் பதிப்பகம் |



வரலாற்றுத் துறையில் எனக்கு ஆசானாக இருந்து வழி நடத்தும் புதுவை வரலாற்றுச் சங்கத் தலைவர்

**திரு. திருமுடி ந. சேதுராமன் Ex. M.P.**

அவர்களுக்கு இந்நூலை உரிமையாக்குவதில் நான் பெருமையடைகிறேன்.

ஆசிரியன்

# அணிந்துரை

**டாக்டர் இரா. நாகசாமி** அவர்கள்
இயக்குநர், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை

இது ஓர் அருமையான நூல். வில்லியனூரின் வரலாற்றை அழகாக விரித்துரைக்கும் நல்ல நூல். இதை இயற்றிய நண்பர் ந. வேங்கடேசன் நம் அனைவரது பாராட்டுக்கும் உரியவர். அவருக்கு உறுதுணையாக பாகூர்ப் புலவர் சு. குப்புசாமி விளங்கியிருக்கிறார். இருவரும் பல இடங்களுக்கு நேராகச் சென்று கல்வெட்டுகளைப் படி எடுத்துள்ளனர். இதுவரை அச்சில் வராத பல கல்வெட்டுகள் இதில் இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் வில்லியநல்லூரின் பழம்பெயர் என்ன, அது காலந்தோறும் எப்படி யெல்லாம் மாறியது, அங்குள்ள கோயிலின் பணி, பங்கு எவை என்பதை எல்லாம் விரிவாகவும் தெளிவாகவும் காணலாம். நல்ல தெளிவான நடை; வரலாற்றைச் சுவையாகச் சொல்லும் பாங்கு. அதோடு வில்லிய னூரைச் சுற்றியுள்ள புத்துழான்பட்டு, பிறையூர், பாக்கமுடை யான்பட்டு, பிரம்பை, பள்ளற்றூர் முதலிய பல சிற்றூர்களின் பழம்வரலாறுகள் இதில் ஆராயப்பட்டுள்ளதும் ஒரு சிறப்பாகும். நம்நாட்டில் எவ்வளவு சிற்றூர்கள் இருக்கின்றன? இவற்றைப் பற்றி நமக்கு ஏதும் தெரியாது. இந்த நூலைப் படியுங்கள். 'ஒழுகரை, பள்ளற்றூர், பிரம்பை போன்ற சிற்றூர்கள் எல்லாம் இவ்வளவு பழமையானவையா? ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பிருந்தே மக்கள் வாழ்ந்து சிறந்த பகுதியாக இவை திகழ்ந்திருக்கின்றனவே!' என நம்மை வியப்பில் ஆழ்த்தும்.

'அருமைத் தமிழ் மகனே! நீ பழம்பெரும் வரலாறு படைத்தவன்! பண்பாட்டில் திளைத்தவன்! இதை உன் ஒவ்வொரு சிற்றூரும் கூறும்! இதை நீ அறிய வேண்டாமா? அறிந்த அன்றல்லவோ உனது முழு வரலாற்றை. பண் பாட்டை நீ உணர்ந்தவனாவாய்?'

என்று இவை கூறுவது போலத்தோன்றுகிறது.

'செந்தமிழ் நாட்டின் ஒவ்வோர் ஊரின் வரலாறும் இவ்வாறு கல்வெட்டுச் சான்றுகளுடன் வெளிவர வேண்டும்; எல்லா மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் இந்த நூல் போல் அமைய வேண்டும்! என்ற ஒன்றேதான் எமது வாழ்க் கைக் குறிக்கோள்'எனக்கொள்ளும் இளைஞர்கள், இந்நூலைப் ஆக்கியோர் போல ஓராயிரவர் வேண்டும். அந்தந்த ஊர்ப் புற மக்கள் அன்புக் கரம் நீட்டி வரவேற்று உபசரித்து வாழ்த்துவார்கள்,

இந்த நூலில் உள்ள வரலாற்றுச் செய்திகளை யெல்லாம் தொகுத்து வில்லியனூரும், ஒழுகரையும், பள்ளத்தூரும் பிற ஊர்களும் தம்மூரில் வரலாற்றுச் செய்திப் பலகை அமைப்பர் என்பது திண்ணம். அதுபோல் தமிழகத்தில் ஒவ்வொரு ஊரி லும் "வரலாற்றுச் செய்தி"ப் பலகைகள் அமைக்க வேண்டும்.

ஊர்களைப்பற்றி மட்டும்தானா அறிந்து கொள்கிறோம். அன்றிருந்த வரிவகைகள், ஆடு மாடுகளுக்கு இடப்பட்ட 'வால்வரி' என்பதைப்பற்றியும் இந்நூலாசிரியர் கல்வெட்டுக் கொண்டு தெளிவாக்கியுள்ளார். இதுபோல் அன்றிருந்த வரி நிலைமை மக்களிடையே ஏற்பட்ட இணக்கமும் பிணக்கமும்- பல ஊர்மக்கள் ஒன்றாயிருந்து வில்லியனூரில் விழா எடுத்திருக் கிறார்கள்; சமுதாய நிலைபற்றிப் பிணங்கியிருக்கிறார்கள்- இவை எல்லாம் சில நூறு ஆண்டுகளுக்கும் முன்னர் நிகழ்ந் தவை.

இவற்றை எடுத்துக் கூறுகின்ற தக்க சான்றுகள் கல்வெட்டுகளே. இந்த நூலில் உள்ள கல்வெட்டுகளைப் படியுங்கள். அவை இல்லை என்றால் வில்லியநல்லூரைப் பற்றி நமக்கு என்ன தெரியும்?

"இளைஞர்களே! உங்கள் ஊர் கல்வெட்டுகளைக் காப்பாற்றுங்கள்! படியுங்கள்!" என்று வேண்டிக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊரிலும் வரலாற்று விழா எடுக்கப்பட வேண்டும். வரலாற்று அவைகள் அமைத்து அவ்வப்பகுதியின் வரலாறு, பட்டிதொட்டிகளின் வரலாறுகள் எல்லாம் வெளிக் கொணர வேண்டும். இந்நூலைப் படிப்போருக்கு அவ்வூக்கம் வரும் என்பதில் எமக்கு ஐயமே இல்லை. அவ்வளவு அழகாக இந்நூலை வடித்துத் தந்துள்ள அன்பர் புலவர் ந. வேங்கடேசனுக்கு எமது உளமார்ந்த வாழ்த்துகள்.

வரலாற்றை ஏரெடுத்துப் பார்க்கத் தயங்கும் சூழ்நிலையில், இடர் பல கடந்தும் வரலாற்று நூல்களை வெளிக்கொண்டு வருவதையே ஒரு வெறியாக, நல்ல நெறியாகக் கொண்டு இதுவரை பதின்மூன்று வரலாற்று நூல்களை வெளியிட்டுள்ள நண்பர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் வரலாறு படைக்கிறார். அவரது ஆர்வத்தை மெச்சுகிறேன்; ஆற்றலைப் போற்றுகிறேன். அவர் இந்நூலைச் சிறப்பாகக் கொண்டு வருவது உவகை அளிக்கிறது. ஆயிரம் நூல்கள் படைக்க அவருக்கு இறை அருள் கிட்ட இறைஞ்சும்,

அன்பன்

இரா. நாகசாமி

(1979)

# வாழ்த்துரை

## வரலாறு படைக்கும் திறலோய் வாழ்க!

சிரித்த முகமும் சிந்தனை அகமும்
படிக்கும் காலமே பண்புக ளாயின!
கவிதை நடையயில் கன்னித் தமிழ்மகள்
புவியில் பலரும் போற்ற வாழ்ந்ததை,
மல்லையும், மதுரையும் மட்டு மல்ல
வில்லிய னூரிலும் காணலாம் என்றே
தெள்ளு தமிழில் தீட்டிக் காட்டும்
ஓவிய ராகிறார் வேங்க டேசனார்!
வயிற்றுப் போரே வாழ்வுப் போராய்
அலைந்து திரியும் அவல மாந்தர்கள்
வாழுமிக் காலம்; வாழும் ஊரின்
சுற்றுப் புறத்தைக் கற்றுத் தெளிந்து
கல்வெட் டுக்களால் காலத்தைக் கணித்துப்
பதிவு செய்து பழம்பெரு மைகளை
விடிய வைக்கிறார் வேங்க டேசனார்!

❀

பிரெஞ்சுக் காரரின் காவற் கூடமாய்
சிவனார் கோயிலின் தெற்குக் கோபுரம்
விளங்கிய நிலையும் வில்லைப் புராணம்
ஜூலியன் வின்சன்ட் மூலமாய் வந்ததும்
ஆனந்த ரங்கம் அன்றாடம் எழுதிய
நாட்கு றிப்புகள் நவிலும் செய்தியும்
நூற்றாண் டென்னும் சொல்லைச் சோழன்
குலோத்துங்க னன்றே குறித்துவைத் ததுவும்

உளுந்தூர்ப் பேட்டையும் ஒருகா லத்தினில்
கோப்பெருஞ் சிங்கன் ஆட்சியில் அமைந்ததும்
நல்லியக் கோடன் வழியின ராகச்
சம்புவ ராயர் செங்கோல் மாட்சியும்
விசய நகரம் வீழ்ந்ததும் அன்னவர்
தமிழ்மா நிலத்தை ஆண்டதும், தாழ்ந்ததும்,
இன்றுபோ லன்றும் இனக்கல வரங்கள்
தின்று தீய்த்ததும் செப்பும் இந்நூல்!
அண்ணா நாடென அன்றே இருந்தது
என்னும் செய்தி இனிப்ப தாகுமே!
சங்க காலத்து வில்லிய யாதன்
இங்குவாழ்ந் தனனோ என்பதும் இவரின்
ஆய்வுப் போக்கை அளப்ப தாகுமே!
அழகிய செழுந்தமிழ்ப் பெயர்களைக் குறிப்பிடும்
கல்வெட் டுக்களைக் காட்டும் புலவர்
வேங்க டேசனார் ஓங்கு புகழுடன்
மேலும் தாயகம் சாலச் சிறந்திடப்
பாங்குடன் எழுதிப் பல்லாண்டு வாழ்ந்து
தனிப்புகழ் பெறுக! தரணி போற்றுக!
வேங்க டேசனார் வியத்தகு புலவரே!
வெள்ளையாம் பட்டார் போற்றுதற் குரியரே!
வரலாறு படைக்கும் புலவர்
என்பிள்ளை என்பதில் இறுமாந் துளனே!

**டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்**
இயக்குநர்
தமிழ்ப்பண்பாட்டுமையம்
தமிழ்நாடு அரசு

சென்னை
13. 6. 79

# முன்னுரை

தனியூர்களின் வரலாற்று வரிசையில் வில்லிய நல்லூர் வரலாறும் ஒன்றாகச் சேர்கிறது இத்தகையச் சிற்றூர்களின் வரலாறுகளே ஒரு நாட்டின் பொதுவரலாற்றுக்குத் துணை நிற்பவை என்பதில் ஐயமில்லை.

நம் நாட்டில் பேரூர்களைவிடச் சிற்றூர்களிலே தாம் வரலாற்றுச் சான்றுகள் பெருமளவு உள்ளன. அத்தகையச் சிற்றூர்களில் ஒன்றுதான் புதுவை வில்லியநல்லூர்.

ஓங்கி உயர்ந்துள்ள கோபுரங்கள் நாள்தோறும் கண்களில் பட்டு என் நெஞ்சில் ஓர் இன்பத்தையும் வரலாற்று ஆர்வத்தையும் பொங்கச் செய்து வந்தன. 'நாம் பிறந்த ஊரின் பெருமையை மற்றவர்க்கும் அறிவிக்க வேண்டும்' என்று பேராவல் கொண்டேன். அந்த ஆவலின் செயலாக்கமே இந்நூல்

வரலாற்று அடிப்படையில் இவ்வூர் பற்றிய அனைத்துச் செய்திகளையும் இந்நூலுள் தொகுத்தளித்துள்ளேன். இது காறும் வெளிவராத கல்வெட்டுகளின் வாசகங்களை இரண்டாம் பகுதியாகத் தந்துள்ளேன். ஆராய்ச்சியாளர்களுக்கு அவை பயன்படும்.

எனக்கு ஞானத் தந்தையாகத் திகழும் புதுச்சேரி வரலாற்றுச் சங்கத் தலைவர் திரு. **திருமுடி ந. சேதுராமன் Ex. M.P.** அவர்கள், வரலாற்றுத் துறையில் என்னை ஈடுபடுத்தி, இந்நூலின் உருவாக்கத்திற்குப் பெரிதும் துணை

தின்று எண்ணற்ற பல கருத்துரைகள் வழங்கினார்கள். அன்னார்க்கு என் உளம் நிறைந்த நன்றியுடையேன்.

வில்லியனூர்க் கல்வெட்டுகளை மைப்பதிவு செய்யும் பொழுதும், அவற்றின் வாசகங்களைப் படிக்கும் பொழுதும் எனக்கு உடனிருந்து பேருதவி செய்த என் கெழுதகை நண்பரும், ஒருசாலை மாணாக்கரும், கல்வெட்டுத் துறையில் எனக்கு நல்லாசனாக விளங்குபவருமான **பாகூர் புலவர் திரு கு. குப்புசாமி** அவர்களுக்கு என் உள நிறைவான நன்றியை உரித்தாக்குகிறேன்.

கல்வெட்டுகளைப் பதிவு செய்யுங்காலத்து வேண்டும் உதவிகளைச் செய்தும், வாழ்த்துரை நல்கியும் உதவிய திருக் கோயில் தனி அலுவலர் **திரு சு. இலட்சுமி நாராயணன்** அவர்களுக்கும், மற்றும் நகரமன்றப் பணியாளர், கோயிற் சிவாச்சாரியர்கள், ஏவலர், காவலர் உள்ளிட்ட அனைவர்க்கும் என் நன்றி உரியது. நூல் உருவாக்கத்திற்கு உடனிருந்து உதவிய **புலவர் திரு அரு. அப்பாசாமி** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

எனது ஆராய்ச்சிக்குத் தேவையான கல்வெட்டுகளின் தொகுதிகள், ஆண்டறிக்கைகள் உள்ளிட்ட பல நூல்களைக் கொடுத்துதவிய புதுச்சேரி **பிரஞ்சு இந்திய பண்பாட்டுக் கழகத்தார்க்கும்,** அதன் இயக்குநர் **டாக்டர் திரு F. குரோ (Francois Gros)** அவர்களுக்கும் சமஸ்கிருதத் துறைத் தலைவர் திருமிகு டாக்டர் என். ஆர். பட் அவர்களுக்கும் என் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் முதல் முயற்சியின் விளைவாக வெளிவந்துள்ள இந்நூலினை முழுமையும் படித்து, இத்துறையில் எனக்குள்ள ஈடுபாட்டை வளர்த்திடும் வகையில், தமது மதிப்பீடுகளைச் சிறந்ததொரு அணிந்துரையாக நல்கி உதவிய தமிழ்நாடு

தொல்லியல் ஆய்வுத்துறை இயக்குநர் **டாக்டர் திரு. இரா. நாகசாமி M. A., Ph. D.,** அவர்களுக்கும், அன்புடன் வாழ்த்துரை வழங்கிய என் மதிப்பிற்குமுரிய ஆசிரியரும் கவிக் கொண்டலும் தமிழ் பண்பாட்டு மைய இயக்குநரும் ஆன **டாக்டர் திரு. உளுந்தூர்ப் பேட்டை சண்முகம்** அவர் களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது முயற்சி நூலாக உருப்பெற்று வெளிவருவதற்குப் பெரிதும் காரணமாக விளங்கியவர் என் இனிய நண்பர் **திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம்** அவர்களே யாவார். அவர்கள் தந்த ஊக்கத்தின் விளைவே இந்நூல் எனின் அது மிகையாகாது. அவரும், வரலாற்று ஆர்வலர், நூலாசிரியர். வரலாற்று நூல்களைப் புதுமையான முறையில், எழிற் கோலத்தோடு வெளியிடுவதில் அவருக்கு நிகர் அவரே. தமிழ்நூல் பதிப்பாளர்களில் இவர் துணிச்சல் மிக்கவர் அன்னார்க்கு என் மனம் கனிந்த நன்றியை உரித்தாக்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வியுலகமும் பெரியோர்களும் இந் நூலுக்கு ஆதரவு தந்து ஆசி நல்குவர் என்று நம்புகிறேன்;

3/16, சேடர்வீதி
வில்லிய நல்லூர் அஞ்சல்
புதுவை மாநிலம் 600110

அன்பன்
**ந. வேங்கடேசன்**

# வரலாறு ஒளிபெற

நாடு, வரலாறு, மொழி ஆகியவை பற்றியெல்லாம் நாள் தோறும் பேசப்படுகின்றது; ஆர்வக் குரல்கள் ஆங்காங்கே முழக்கமிடப்படுகின்றன. ஆனால் அவற்றுக்கான அடிப்படை உணர்வுகள், செயல்கள், உண்மையான ஆக்கப் பணிகள் காணப்படுகின்றனவா என்று பார்த்தால் ஒன்றும் காணப் படவில்லை.

நமது நாட்டின் பழம்பெரும் வரலாறுகள், கலைகள், பண்பாட்டுச் சின்னங்கள் முதலியவை மண்ணிலும் கல்லிலும் மறைந்து கிடக்கின்றன, அவற்றை முறையாகத் தேடித் தொகுத்து அளித்திட, ஆய்ந்து பார்த்திட என்னென்ன முயற்சிகள் நடைமுறையில் உள்ளன?

இவைபற்றியெல்லாம் மேற்கண்ட ஆர்வலர்கள் சிந்திப் பதுண்டா? அவற்றுக்கான அடையாளங்கள் உள்ளனவா?

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் நாகசாமி அவர்கள் ஆர்வம் மிகக் கொண்டு அயராது பாடுபடுகிறார். அவர்களது அரிய புதிய நோக்கும் செயலும் பாராட்டத்தக்கவை. அவரது சீரிய பணிகளால் கல்லூரி-உயர்நிலைப்பள்ளி, ஆசிரியர் - மாணவர் முதலாக, பொது மக்கள் வரையிலும் ஒரு புதிய ஆர்வமும் எழுச்சியும், செயல் ஊக்கமும் ஏற்பட்டுள்ளது. இது ஒரு மகத்தான சாதனை.

அண்மைக் காலத்தில் ஒருசிலர் வரலாற்றுக்குரிய வாய்ப் பாய் அமைந்துள்ள கல்வெட்டுகளை, புதைபொருட்களை, கலைப்பொருட்களைக் கண்டெடுத்து ஆய்ந்து பார்க்க முன் வந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் இளைஞர் பாகூர் புலவர் திரு சு. குப்புசாமி. அவரது ஆய்வுகளப் பணிகளில் இதுவரை நான் 3 நூல்களை வெளியிட்டுள்ளேன். அடுத்து 3 நூல்கள் வெளியிடவுள்ளேன். அவரை யடுத்து வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன் வருகிறார். அவரது கட்டுரைகளை முதல் நூலாக வெளியிட்ட பின்னர், இந்த வரலாற்று நூலினை இரண்டாவது படைப்பாக ஆக்கியளித்துள்ளார். தாம் பிறந்த ஊரின் பழம்பெரும் வரலாற்றை ஆர்வமுடன் எழுதித் தந்த நண்பர் பாராட்டுக்குரியவர்.

தொடக்கத்தில் கூறியதே போல் ஆர்வ முழக்கம் செய்வோர், ஏன் ஆசிரியர்களே கூட இத்தகைய வரலாற்று நூல்களை வாங்கிட முன் வருவதில்லை. இது கசப்பான நடைமுறை உண்மை. மேலும் நமது கல்வி இயக்குநர் அலுவலகம் கூட இத்தகைய புதிய படைப்புகளுக்கு ஆதரவு காட்டிடவில்லை என்பதைப் பல்லாண்டு அநுபவத்துடன் சொல்லிக் கொள்கிறேன். இனி நல்லாதரவு கிடைக்குமென்று நம்புகின்றேன்.

ஆசிரியர்களாக யிருந்து கொண்டு இத்தகைய கடினமான கல்வெட்டு ஆய்வுகளப் பணிகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு உள்ள தொல்லைகள் பலவாகும். அரசினர், கல்வித்துறையினர் புதிய நோக்கோடு, தனியார்வம் கொண்டு உழைக்கின்ற ஆசிரியர்களுக்கு ஊக்கம் தந்து பாராட்டி, உதவி செய்யவும் வேண்டும்.

பணியாற்றும் ஆசிரியர்கள் அதிலேயே அடங்கி, முடங்கி விடாமல், வெளிப்பட்டு, விரிந்த வரலாற்றுத் துறையின் தேவைகளுக்கும், பாடுபட்டு ஈடு செய்ய வேண்டுகிறேன். கற்றவர்களின் கல்விப் பயன் வளர்வதாக.

புகழ்மிக்க நமது வரலாற்றுலகுக்கு மற்றுமொரு விளக்கை ஏற்றி வைக்கிறேன். ஒளி பரவட்டும்!

அன்பன்

**வெள்ளையாம்பட்டு சுந்தரம்**

சேகர் பதிப்பகம்

# கல்வெட்டுகளின் பட்டியல்
## புதிதாகக் கண்டுபிடிக்கப்பெற்ற கல்வெட்டுகள்

| வரிசை எண் | அரசன் | ஆண்டு | பகுதி 2 இல் எண் |
|---|---|---|---|
| 1 | குலோத்துங்க சோழன் I | கி.பி. 1080 | 1 |
| 2 | ,, | 1110 | 2 |
| 3 | ,, | 1070—1120 | 3 |
| 4 | — | 12 ஆம் நூற். | 4 |
| 5 | கோப்பெருஞ்சிங்கன் II | கி. பி. 1249 | 7 |
| 6 | — | 14ஆம் நூற். | 16 |
| 7 | — | ,, | 17 |
| 8 | — | ,, | 18 |
| 9 | — | ,, | 19 |
| 10 | வேங்கட தேவராயர் | 1697 | 32 |
| 11 | — | 1880 | 37 |
| 12 | — | 1887 | 38 |
| 13 | — | 19 ஆம் நூற். | 41 |
| 14 | — | 1868 | 42 |
| 15 | — | 1794 | 43 |
| 16 | — | 1794 | 44 |

# இந்தியக் கல்வெட்டுத் துறையின் ஆண்டறிக்கையில் குறிக்கப் பெற்றவை. ஆனால் வாசகங்கள் வெளி வராதவை

| வரிசை எண் | அரசன் | ஆண்டறிக்கை 1936—37 எண்கள் | பகுதி II இல் எண்கள் |
|---|---|---|---|
| 1 | கோப்பெருஞ் சிங்கன் | 199 | 6 |
| 2 | ,, | 186 | 8 |
| 3 | ,, | 185 | 9 |
| 4 | பராக்கிரம பாண்டியன் | 189 | 10 |
| 5 | ,, | 187 | 11 |
| 6 | இராசநாரயணச் சம்புவராயன் | 190 | 12 |
| 7 | ,, | 188 | 13 |
| 8 | ,, | 192 | 14 |
| 9 | — | 200 | 15 |
| 10 | சாளுவ மங்கு தேவர் | 191 | 20 |
| 11 | அரியண உடையார் II | 183 | 21 |
| 12 | ,, | 184 | 22 |
| 13 | ,, | 194 | 23 |
| 14 | சாவன தேவர் | 195 | 24 |
| 15 | ,, | 196 | 25 |

| வரிசை எண் | அரசன் | ஆண்டறிக்கை 1936 - 37 எண்கள் | பகுதி II இல் எண்கள் |
|---|---|---|---|
| 16 | அச்சுத தேவராயர் | 182 | 27 |
| 17 | ,, | 181 | 28 |
| 18 | ,, | 201 | 29 |
| 19 | சதாசிவ தேவராயர் | 193 | 30 |
| 20 | ஸ்ரீரங்க தேவர் | 198 | 31 |
| 21 | — | 202 | 33 |
| 22 | — | 197 | 34 |
| 23 | — | 205 | 35 |
| 24 | — | 203 | 36 |
| 25 | — | 207 | 39 |
| 26 | — | 206 | 40 |

## இந்தியக் கல்வெட்டுத் துறையினரால் வாசகங்கள் வெளியிடப்பெற்ற கல்வெட்டுகள்

| வரிசை எண் | அரசன் | ஆண்டு | நூலும் கல்வெட்டு எண்ணும் | பகுதி II இல் எண்கள் |
|---|---|---|---|---|
| 1 | குலோத்துங்க சோழன் III | கி.பி. 1191 | S. I. I., Vol. VII, No. 816 | 5 |
| 2 | விருபாட்ச தேவராயர் | கி.பி. 1472 | S. I. I., Vol. VII, No. 815 | 26 |

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | 9 |
| வாழ்த்துரை | 12 |
| முன்னுரை | 14 |
| வரலாறு ஒளிபெற | 17 |
| கல்வெட்டுகளின் பட்டியல் | 19 |
| படங்கள் (Plates) 8 | 25 - 32 |


## முதற் பகுதி


| | |
|---|---|
| வரலாற்றுச் சான்றுகள் | 33 |
| கல்வெட்டுகளும் அரசர்களும் | 43 |
| ஊரும் பெயரும் | 59 |
| நிலங்களும் அளவைகளும் | 82 |
| வரிகளும் வகைகளும் | 89 |
| திருக்காமீச்சுரர்த் திருக்கோயில் | 95 |
| கவினுறு கட்டடக்கலை | 108 |
| சுவைமிகு செய்திகள் | 119 |


## இரண்டாம் பகுதி


| | |
|---|---|
| கல்வெட்டுகள் - வாசகங்கள் (44) | 129 - 189 |
| எடுத்தாண்ட நூல்கள் | 190 |
| அரும்பெயர்ப் பட்டியல் | 193 |

# முதற் பகுதி

# வரலாற்று விளக்கம்









முதலாம் குலோத்துங்க சோழன்
கல்வெட்டுகள்



**துவாரபாலகர்**

*பிற்காலச் சோழர் சிற்பம்*



துவார பாலகி

*பிற்காலச் சோழர் சிற்பம்*



திருக்காமீச்சுரம்

இராச கோபுரம் (தெற்கு)



திருக்காமீச்சுரம்

கிழக்குக் கோபுரம்



நாயக்க அரசரும் அரசியும்



பிரதோஷ மூர்த்தி

*பிற்காலச் சோழர் செப்புத் திருமேனி*



**இருதலைப் புள்**

(கண்ட பேரண்டப் பறவை)

தெற்குக் கோபுரம்

# வரலாற்றுச் சான்றுகள்

## வளரும் வரலாறு

உலகின் வரலாறு என்பதே இயற்கை வளர்ச்சியின் படிமுறையே அன்றோ!

உலகிலுள்ள அசையாப் பொருள்களும் மாறிமாறி வளர்ச்சி கண்டு வருவது ஒருவகை. உயிர்கொண்டு அசைந்து இயங்கி வாழும் உயிரினங்களும் காலங்காலமாகப் பல்வேறு மாற்றங்கள் கண்டு புதிய புதிய வளர்ச்சிகளோடு தொடர்ந்து வாழ்ந்து வந்திருப்பது இன்னொரு வகை.

அனைத்தின் வளர்ச்சிகளும் வரலாறுகளாகி விடுகின்றன. ஐயறிவுயிர்களுக்கு வரலாறு பற்றிய கவலை இல்லை.

ஆறறிவு படைத்த சிந்திக்கும் மனிதர்கள் வரலாற்று உணர்வுடையவர்களாக உள்ளனர். கடந்த கால நிலைகளை நிகழ் காலத்தோடு ஒப்பிடுவதும், அவற்றையொட்டி வருங்காலம் பற்றித் திட்டமிடுதலும் செயல்படுதலும் மனிதர்களுக்குத் தேவையானவை.

வாழ்ந்து முடிந்த காலத்தின் அடிச்சுவடுகளைப் பிற்காலத்தவர் கண்டு எடுத்துக்கொள்ளும் நெறியை வரலாற்றுத் தடம் என்கிறோம்.

அத்தகைய வரலாறுகள் தாம் எத்துணை! எத்துணை!

அவ்வரலாறுகளில் அறியக் கிடக்கும் செய்திகள் தாம் எத்துணை, எத்துணை!

அச்செய்திகளால் பெறுகின்ற உண்மைகள், முடிவுகள், இன்பங்கள் தாம் எத்துணை, எத்துணை!

நம்மை ஈன்ற முன்னோர் தம் காலங் கடந்த புகழ் வாழ்வை நாம் அறியும்போது அடையும் இன்பத்திற்கும், பெறுகின்ற பெருமிதத்திற்கும் ஓர் அளவும் உண்டோ? எல்லையும் உண்டோ? நெஞ்சு நிமிர்ந்து வீறுகொண்டு ஏறுபோல் பீடுநடை போடுகின்றோம்!

அங்கும் இங்குமாக - ஆனால் நாடு எங்கணும் மறைந்தும், சிதைந்தும் - எழுத்துருவில், சிலையுருவில், கட்டடங்கள், பொருள்கள் போன்ற நிலைகளில் நமது பழம்பெரும் வரலாற்று உண்மைகள் புன்னகை புரிந்து தம்மைப் புலப்படுத்துகின்றன.

வரலாற்றுக் கண்கொண்டோர் - ஆழமான வரலாற்றுப் பார்வையுடையோர் அப் பழஞ் சின்னங்களை, சிதறல்களை உற்று நோக்கி, ஓடித் தேடிச் சேர்த்து,

ஆய்ந்தும் ஒப்பு நோக்கியும் அவற்றின் மூலங்களை, முன் தடங்களை, முன் நிலைகளை உற்றறிந்து உவகை கொள்கின்றனர்.

அத்தகைய ஆர்வமிக்க திறமையாளர்களால் முற்காலம் நம் கண்முன் படம் விரித்துப் பல எழிற் காட்சிகளைக் காட்டுகின்றது!

## வரலாற்றுக் கோலம்

கவினுறு கலைக்கோயில் பல பெற்ற காஞ்சிமாநகர், மாண்புறு மாமல்லை, பல்லவன் கண்ட பனைமலை, காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய இராசராச சோழனின் புகழ் பரப்பும் தஞ்சைப் பெருநகர், அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்திய இராசேந்திர சோழனின் கங்கை கொண்ட சோழபுரம், மணிவிளங்கு மாட மாமதுரை, புகழ் வளர்த்த பூம்புகார், அணிதிகழ் ஐயாறு - இப்படி வரலாற்றால் ஒளி கூட்டும் எத்தனையோ ஊர்களின் சிறப்புகள் வெளிப்பட்டு உலா வரும் காலம் இது! ஆம்! பழைய கோலங்களைத் தீட்டிக் காட்டும் புதிய காலம் இது!

தனித் தனி ஊர்களின் ஒட்டுமொத்தமான வரலாறுகளே ஒரு நாட்டின் அரசியல் சமுதாய பொருளாதார வரலாறுகளை அறிந்து கொள்ள உதவுகின்றன. நம் நாட்டில் பேரூர்களைவிட சிற்றூர்களிலேதாம் மிகுதியான வரலாற்று மூலங்கள் அடங்கிக் கிடக்கின்றன. இவற்றுள் வரலாற்று ஆர்வலர்களின் கருத்தைக் கவர்ந்தவை மிகச் சிலவே.

கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள், வெளிநாட்டார்க் குறிப்புகள், கோயில்கள், குளங்கள், சிற்பங்கள், திருமேனிகள், ஓவியங்கள் முதலியவை எல்

லாம் இவ்வாறு உதவும் பெருமதிப்புடைய கருவூலங்களாகும். இவைகளே நம்முன்னோரின் வாழ்க்கை முறையை, கலை மேம்பாட்டை, வீரத்தின் செறிவை, தொழில் நுட்பத் திறத்தைக் காட்ட வல்லவை. இத்தகைய கருவூலங்களைக் கொண்ட எண்ணிறைந்த சிற்றூர்களில் ஒன்றுதான் வில்லியநல்லூர் என்பதும்.

## அமைவிடம்

இது புதுவைக்குத் தென்மேற்கே பத்து கி. மீ. தொலைவில் விழுப்புரம் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

இங்குள்ள கோயில்கள், அக்கோயில்களிலே வரையப் பெற்றுள்ள கல்வெட்டுகள், சைவமா மடங்கள் ஆகியவை இவ்வூரின் பழமை வரலாற்றைப் பறைசாற்றுகின்றன. அவற்றோடு செவி வழிச் செய்திகள், தல புராணங்கள், பிள்ளைத் தமிழ் நூல், தனிப்பாடல், ஆனந்தரங்கப் பிள்ளை நாட்குறிப்பு ஆகியவையும் இணைந்து, இவ்வூரின் பழமைச் சிறப்பை, இப்பகுதியின் அரசியல் வரலாற்றை விளங்கச் செய்கின்றன. இவற்றின் துணை கொண்டு, இவ்வூரில் உள்ள வரலாற்றுச் சுவடுகளை இப்பகுதியில் சுருக்கமாக அறிந்து கொள்வது பயனுடையதாகும்.

## கல்வெட்டுகள்

வில்லியனூரில் உள்ள திருக்காமீச்சுரம் என்னும் சிவன் கோயிலிலும், அக்கோயிலுக்குத் தெற்கேயுள்ள கல்வி மடத்திலும் இதுவரை 44 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

இக்கல்வெட்டுகள் சோழர், கோப்பெருஞ் சிங்கன், பாண்டியன், சம்புவராயன், விசயநகர வேந்தர் ஆகி

யோர் காலங்களில் வரையப் பெற்றவையாகும். கி. பி. 1080 முதல் 1599 வரையில் 32 கல்வெட்டுகளும், 17, 18ஆம் நூற்றாண்டுகளில் வரையப் பெற்ற 12 கல் வெட்டுகளும் இவற்றில் அடங்கியுள்ளன.

இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையின் கல் வெட்டுப் பிரிவினர், இவற்றுள் 28 கல்வெட்டுகளைப் பதிவு செய்து, 2 கல்வெட்டுகளின் வாசகங்களை வெளி யிட்டு, 26 கல்வெட்டுகளைப் பற்றி ஆண்டறிக்கையில் குறிப்பிட்டதோடு அமைந்தனர்.[1]

ஆனால், மேற்படி துறையினர் பதிவு செய்த— செய்யாமல் விட்ட எல்லாக் கல்வெட்டுகளின் முழுமை யான வாசகங்களும், இவ்வூர் பற்றிய ஆராய்ச்சிக்கு இன்றியமையாத சான்றுகளாக விளங்குவதால், இங் குள்ள 44 கல்வெட்டுகளையும் புதிதாக மைப் பதிவு செய்து அவற்றின் வாசகங்களை முதன் முதலாக வெளிப் படுத்துகிறேன். அவை இந்நூலின் இரண்டாம் பகுதி யாக அமைந்துள்ளன.

### தொல்பொருள் சின்னங்கள்

பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் நடைபெற்ற போர்களில், இவ்வூர் முக்கிய இடமாகக் கருதப் பெற்றது. புதுச்சேரியில் அமைந்திருந்த பிரெஞ்சுக்காரர் கோட்டையின் வாயில்களில் ஒன்று, அக்காலத்தில் **வில்லியனூர் வாயில்** என்ற பெயரால் அழைக்கப் பெற்றுள்ளது.

---

1. Annual Report on South Indian Epigraphy for the year 1936 - 37, Nos. 181 - 207 & South Indian Inscriptions, Vol. VII, Nos. 815 & 816.

## வில்லியநல்லூர்க் கோட்டை

பகைவர் நடமாட்டத்தை அறிந்துகொள்ள வில்லிய நல்லூர்ச் சிவன் கோயிலின் தெற்கு இராச கோபுரத்தைப் பிரெஞ்சுக்காரர்கள் கண்காணிப்பு நிலையமாகப் பயன் படுத்தி வந்தனர்.

வில்லிய நல்லூரின் தென்மேற்குப் பகுதியில் பிரெஞ்சுக்காரர்களால் கோட்டை ஒன்று உருவாக்கப் பட்டது. அக் கோட்டை இக்காலத்தில் அழிந்துவிட்ட தாயினும், அவ்விடம் இன்றும் **கோட்டை மேடு** என்னும் பெயருடன் திகழ்கிறது. அன்றியும், நிலத்துக்கடியில் அதன் இடிபாடுகளை இன்னமும் காணமுடியும். ஆங்காங்கே கருங்கற்களால் ஆன பீரங்கிக் குண்டுகளும் கிடைக்கின்றன.

தில்லை மேஸ்திரி என்பவர் இக் கோட்டையைக் கட்டினார். இவருடைய நினைவாகப் புதுச் சேரியில் **தில்லை மேஸ்திரி வீதி** என்னும் பெயருடன் வீதி யொன்றும் இருந்து வருகிறது.

வில்லியனூரில் வாழ்ந்த கைக்கோளர்களின் உரிமை பற்றிக் குறிப்பிடும் செப்பேடு ஒன்று, காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலில் இருந்துள்ளது.[1] இச் செப்பேடு இக்காலத்தில் கிடைக்காமல் போனது வருந்தத் தக்கது.

## சைவ மா மடங்கள்

மெய்கண்டார் கணத்தைச் சேர்ந்த திருவக்கரை மெய்ஞ்ஞான மாமுனியின் மடம் ஒன்று, வில்லிய

---

1. A. R. E. 1936 - 37, Part. II, Para 61.

நல்லூர்ச்சிவன் கோயிலின் திருக்குளத்திற்கு வடக்கே அமைந்திருந்தது. 15 ஆம் நூற்றாண்டில், இம் மடத்துக்கு மானியமாக நிலங்கள் வழங்கப்பட்டன. வில்லிய நல்லூரில் இருந்த மடங்களைப்பற்றி வில்லைப் புராணமும் குறிப்பிடுகின்றது. இம் மடங்களைப் பற்றிய கல்வெட்டுச் சான்றுகளும் உள்ளன. இவைபற்றி இந் நூலின் இறுதிப் பகுதியில் விரிவாகக் காண்போம்.

## இலக்கியங்கள்

### 1. வில்லைப்புராணம்

இந்நூல் வில்லியநல்லூர் சிவபெருமான் மீது பாடப்பெற்ற தலபுராணமாகும். இது **வீரராகவ கவி** என்பவரால் இயற்றப் பெற்றது. இக் கவிராயர், கார்காத்த வேளாளர் மரபைச் சேர்ந்த விசயராயரின் ஆதரவு பெற்றவர்.

இந்நூல், பாரீஸ் நகரத்தில் வாழ்ந்த கீழை நாட்டுக் கலைவல்லுநரான பேராசிரியர் **ழூலியன் வேன்ஸான்** (Julien Vincent) என்பவர், டாக்டர் உ. வே. சுவாமி நாதய்யர் அவர்களுக்கு அதன் நகலை அனுப்பி வைத்தார்.

ஐயர் அவர்கள் 1940வது ஆண்டில் இதனை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

வில்லைப் புராணத்தின் பழைய கையேட்டுப் பிரதியொன்று பாரீஸ் நகரத்து தேசிய நூலகத்திலும் (Publio-teque Nationale a Paris - France) உள்ளது.

அந் நூலகத்தில் உள்ள இப் பிரதியைப் புதுவைக்கு அண்மையிலுள்ள சாரம் என்னும் ஊரைச் சேர்ந்த

தம்பியாண்டி முதலியார் குமாரர் **அருணாசலம்** என்பவர், **27-2-1825** ஆம் ஆண்டில் பிரதி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வில்லைப்புராணம் கி.பி. **15** ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றதாகக் கருதப் பெறுகிறது.[1]

இது பாயிரச் சருக்கம் முதல் மன்மதச் சருக்கம் ஈறாக ஒன்பது சருக்கங்களையும் **495** செய்யுட்களையும் உடையது.

தமிழ் மொழியால் இயன்ற இப்புராணத்திற்கு மூதல் நூலாக விளங்கியது, சமஸ்கிருதமொழிப் புராணமாகும். கி. பி. **1877** ஆம் ஆண்டில் வில்லியநல்லூர்ச் சிவன் கோயிலில் சிவத் தொண்டு செய்து வந்த அ. குருசாமிக் குருக்கள் என்பவராலும், கோ. வரதாச்சாரியார் என்பவராலும் இது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப் பெற்றது.

## 2. வில்லை முத்துக்குமாரர் பிள்ளைத் தமிழ்

சிவன் கோயிலின் முதல் பிரகாரத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானின் திருநாமம், **முத்துக்குமார சுவாமி** என்பதாகும். இப்பெருமான்மீது **அருணாசலக் கவிராயர்** பாடிய **வில்லை முத்துக்குமாரர் பிள்ளைத் தமிழ்** என்றொரு பிரபந்தமும் உண்டு. இப்பிள்ளைத் தமிழ் நூல் வில்லைப் புரணத்திற்குக் காலத்தால் பிற்பட்டதாகும்.

---

1. கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள் (1974), பக்கம், 123 - புலவர் சு. குப்புசாமி.

## 3. வில்வநல்லூர்க் குயிலம்மை மாலை

காஞ்சிபுரம் **சபாபதி முதலியார்** என்பவர், **சந்திர சேகரர் இரட்டை மணிமாலை, வில்வவனநல்லூர்க் குயிலம்மை மாலை,** கல்விமடம் மெய்ஞ்ஞான மாமுனித் தேசிகர் பேரில் **பஞ்சரத்தினம்** என்னும் மூன்று நூல்களை இயற்றியுள்ளார்.[1]

இந்நூல்கள் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் **தாண்டவராயத்தம்பிரானரால்** பார்வையிடப்பெற்று, பூர்பாவை சிங்கார முதலியார், சைதாபுரம் உமாபதி முதலியார் ஆகியோரால், கல்விக் களஞ்சியம் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன. நூல் வெளியான ஆண்டு சார்வரி வருடம், புரட்டாசி மாதம்-1899. இவற்றுள் குலயிம்மை மாலை என்பது வில்லியநல்லூர்த் திருக் காமீச்சுரத்து அம்மன்மீது பாடப்பெற்ற நூலாகும்.

இந்நூலின் தொடக்கத்தில் உள்ள காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவால் இயன்றது. இப்பாடல் நீங்கலாக, இதன்கண் உள்ள 30 பாடல்களும் கலித் துறையினால் அமைந்துள்ளன. வில்லியநல்லூரில் எழுந்தருளியுள்ள குயிலம்மையின் பெருமையை இப் பாடல்கள் பலவாறு புகழ்கின்றன.

"பக்குவ மாகக் கவிநூறு செய்து பரிசுபெற
முக்கர ணமெதிர் பல்காலும் போட்டு முயன்றிடினும்

---

1. புதுச்சேரி பிரஞ்சு இந்தியப் பண்பாட்டுக் கலைக் கழகத்தில் பணியாற்றிவரும் திரு. வி. மு. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், இம்மூன்று நூல்களின் கையெழுத்துப் பிரதி களையும் அவை பற்றிய குறிப்புகளையும் கொடுத்துதவி னார்கள்.

'அக்கட போ'வெனும் லோபரைப் பாடி யலுத்துவந்த
குக்கலை யாண்டருள் வில்வ வனத்துக் குயிலம்மையே"!

என்னும் பாடல், இக் குயிலம்மை மாலையில் அமைந்துள்ள 28ஆவது பாடலாகும். இப்பாடலே டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்களுக்கு, இத்தலத்தை அடையாளம் கண்டு கொள்ள பெரிதும் உதவியது. தனிப்பாடல் திரட்டிலும் இடம் பெற்றது.[1]

குயிலம்மை என்ற தமிழ்ப் பெயர் இன்று வடமொழியில் கோகிலாம்பாள் என்று வழங்குகிறது.

## ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பு

ஆனந்தரங்கப்பிள்ளை, புதுவையில் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியில் ஆளுநராக இருந்த துய்ப்ளேயிடம் தரகராக அலுவல் பார்த்தவர். இவருடைய நாட்குறிப்புகளில் வில்லிய நல்லூரைப் பற்றிய எண்ணற்ற செய்திகள் காணப்பெறுகின்றன. அவரது நாட்குறிப்புகள் **ஆனந்தரங்கப் பிள்ளை தினப்படி சேதிக் குறிப்பு** என்னும் தலைப்பில், இதுவரை புதுவை அரசால் ஏழு தொகுதிகள் வெளி வந்துள்ளன. எஞ்சியுள்ள ஐந்து தொகுதிகள் இன்னமும் வெளிவராதது வருந்தத் தக்கது. இது வரலாற்றுத் துறைக்குப் பேரிழப்பாகும்.

இதுகாறும் கூறிய சான்றுகளை அடியொற்றி, வில்லியநல்லூர் பற்றி வரலாற்று நோக்கோடு ஆராய்ந்தறிய முற்படலாம்.

---

1. தனிப்பாடல் திரட்டு, பாகம். 2, பாடல். 281.

# கல்வெட்டுகளும் அரசர்களும்

## முதலாம் குலோத்துங்க சோழன்
## *1070 - 1125*

கீழைச் சாளுக்கிய மன்னனான இராசராச நரேந்திர னுக்கு முதலாம் இராசேந்திர சோழனின் புதல்வியான அம்மங்கா தேவியிடம் பிறந்தவனே முதலாம் குலோத் துங்க சோழனாவான்.[1]

இம் மன்னன், தந்தை வழியில் சளுக்கியனாகவும், தாய் வழியில் சோழனாகவும் விளங்கினான். நல்லூழின் காரணமாக - இவன் சோழப் பேரரசுக்கு அரசனாக வீற்றிருக்கும் பேறு பெற்றான்.

1. S. I. I., Vol. I, No. 39, Verses 6 - 8.

''சுங்கம் தவிர்த்து
இருள் நீக்கி உலகாண்ட
ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்''

என்று இம்மன்னன் பெரிதும் பாராட்டப் பெறுகிறான்.

வில்லியநல்லூர்ச் சிவன் கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுகளில், இம்மன்னன் காலத்துக் கல்வெட்டுகளே மிகவும் பழமையானவை.

இம் மன்னன் காலத்திய மூன்று கல்வெட்டுகளில் ஒன்று செய்யுள் வடிவில் அமைந்துள்ளது.

ஒன்பதுநூற் றாண்டி னுடனே சகரயாண்
டொன்பதிற்றுப் டத்தின்மே லோரிரண்டிற் -
றன்பெயரா
லானியல் முத்கமைத் தான்குலோத் துங்கன
மானபரர் தென்னொமுகை வைப்பு

'நூற்றாண்டு' என்னும் சொல்லை முதன் முதலில் மேலைநாட்டினரே நமக்கு அறிமுகம் செய்ததாகக் கூறுவர். இற்றைக்குத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இச் சொல்லைத் தமிழர்கள் பயன்படுத்தினார்கள் என்பதற்கு, குலோத்துங்க சோழனின் இக் கல்வெட்டுப் பாடல் சிறந்ததொரு சான்றாக விளங்குகின்றது.

மற்றைய இரண்டு கல்வெட்டுகள் முழுமையாகக் கிடைக்காமல், அவற்றின் துண்டுப் பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. அப் பகுதிகளில் இம் மன்னனின் மெய்க் கீர்த்திகளும் சில செய்திகளும் இடம் பெற்றுள்ளன. நம்மனோரின் கவனக் குறைவினால் பெருமதிப்புடைய இக் கல்வெட்டுகளை நாம் இழந்துவிட்டோம்.

## மூன்றாம் குலோத்துங்க சோழன்
## 1178 - 1218

இம் மன்னன் இரண்டாம் இராசராச சோழனுடைய புதல்வன். சோழப் பேரரசின் முடி மன்னனாகிய இக் குலோத்துங்கனுக்கு, கங்கை கொண்ட சோழபுரம் தலை நகரமாக விளங்கியது. இவனைச் சில கல்வெட்டுகள் "மதுரையும், ஈழமும், பாண்டியன் முடித் தலையும் கொண்ட கோப்பரகேசரிவர்மன்" என்று குறிப்பிடுவது உண்டு.

சோழ மன்னர்கள் தமக்குள் மாறி மாறிப் புனைந்து கொள்ளும் இராசகேசரி, பரகேசரி என்னும் இரு வகையான பட்டப் பெயர்களில் இவன் பரகேசரி என்னும் பட்டம் உடையவன்.

இம் மன்னன் 40 ஆண்டு காலம் சோழப் பேரரசனாக வீற்றிருந்தான். இவன் காலத்திய கல்வெட்டு ஒன்றும் இக் கோயிலில் உள்ளது.[1]

## கோப்பெருஞ்சிங்கன்
## 1232 - 1273

பிற்காலப் பல்லவர்குலத் தோன்றல்களில் வீரமும் எழுச்சியும் மிக்க வேந்தனாக வீற்றிருந்தவன் கோப்பெருஞ்சிங்கன். இவன் நடு நாட்டிலுள்ள சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டவன். இவ்வூர் தென்னார்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப் பேட்டைக்கு அண்மையில் இன்றும் உள்ளது.

---

1. கல்வெட்டு எண் : 5 (S. I. I., Vol. VII, No. 816.)

ஏறத்தாழ 850 ஆண்டு காலம் பெரு மதிப்புடன் விளங்கிய சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கு இவனே காரண மாக இருந்தான். மூன்றாம் இராசராச சோழனைத் தெள்ளாற்றுப் போரில் வென்று, சேந்தமங்கலத்தில் சிறை வைத்தான். இச் சோழ மன்னனைப் போசள வீர நரசிம்மன் சிறைமீட்டானாயினும், இந் நிகழ்ச்சிக்குப் பிறகு சோழப் பேரரசு தலைதூக்கவே இல்லை.

சோழப் பேரரசு நிலைகுலைந்த பிறகு, இக் கோப் பெருஞ்சிங்கன் தனி உரிமை பெற்றுத் தனியாட்சி செலுத்தத் தொடங்கினான். இவன் காலத்துக் கல் வெட்டுகள் வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற் பட்டு ஆகிய மாவட்டங்களில் மிகுதியாகக் கிடைக் கின்றன. வில்லியநல்லூரில் இவன் காலத்தில் வரையப் பெற்ற நான்கு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.[1]

முதலாம் கோப்பெருஞ்சிங்கன், இரண்டாம் கோப் பெருஞ்சிங்கன் எனக் கோப் பெருஞ்சிங்கர் இருவர் இருந்தனர் என்றும், கோப் பெருஞ்சிங்கன் ஒருவனே என்றும் இருவேறு கருத்துகள் உள்ளன.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கி. பி. 1232 முதல் 1243 வரை இருந்தவன் முதலாம் கோப் பெருஞ்சிங்கன் என்றும், 1243 முதல் 1273 வரை இருந்தவன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் என்றும் கூறுவர். இக் கருத்துவேறுபாடுகளை ஆராய்ந்தறிவது இங்குத் தேவையில்லை.

---

1. கல்வெட்டு எண்கள் : 6 - 9.

## பராக்கிரம பாண்டியன்
## 1335 - 1352

சோழப் பேரரசு வீழ்ச்சி அடைந்த பின்னர், இரண்டாவது பாண்டியப் பேரரசு தோன்றியது. இப் பாண்டிய மரபினர் சடையவர்மன், மாறவர்மன் என்னும் பட்டங்களைத் தமக்குள் மாறி மாறிப் புனைந்து கொண்டனர்.

பராக்கிரம பாண்டியன் என்ற பெயரில் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன், மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் என்று இரண்டு மன்னர் இருந்தனர். இவர்களில், சடையவர்மன் என்னும் பட்டமுடைய பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டு எதுவும் தென்னார்க்காடு மாவட்டத்தில் கிடைக்கவில்லை. ஆனால், மாறவர்மன் என்னும் பட்டமுடைய பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

சடையவர்மன், மாறவர்மன் என்னும் பட்டப்பெயர்கள் எதுவும் இன்றி வில்லியநல்லூர்ச் சிவன் கோயிலில் பராக்கிரம பாண்டியனின் காலத்து இரண்டு கல்வெட்டுகள் காணப்பெறுகின்றன.[1] மேற்கூறிய செய்திகளைக் கருத்திற்கொண்டு இக் கல்வெட்டுகள் **மாறவர்மன்** பராக்கிரம பாண்டியன் காலத்தவையாகக் கொள்ளலாம்.

## இராசநாராயணச் சம்புவராயன்
## கி.பி. 1340-1370

பாண்டியர்களுடைய வீழ்ச்சிக்குப் பிறகு விசயநகரப் பேரரசின் தோற்றம் வரை சம்புவராயர்களின் தனி ஆட்சி நிலைத்திருந்தது.

---

1. கல்வெட்டு எண்கள்: 10 & 11.

சம்புவராயர் என்பவர்கள் தமிழகத்தை ஆண்ட குறுநில மன்னர்களில் ஒரு பிரிவினர். வட ஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகள் இவர் களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன.

சம்புவராயர் ஆண்ட பகுதி இராச கம்பீர இராச்சியம் என்று பெயர் பெற்றிருந்தது. விரிஞ்சிபுரம், படைவீடு, காஞ்சிபுரம் முதலான ஊர்கள் இவர்களின் ஆட்சிக் காலத்தில் முக்கிய நகரங்களாகத் திகழ்ந்தன. இவர்கள் சங்க காலத்திலிருந்த ஒய்மா நாட்டு நல்லியக்கோடனின் வழியினரே என்று கருதப் பெறுகின்றார்கள்.[1]

வென்று மண்கொண்ட ஏகாம்பரநாதச் சம்புவ ராயனும், அவருடைய மகனான, இராசநாராயணச் சம்புவராயரும் இப் பகுதியிலிருந்த மகமதியரின் படைகளை வென்று, இராச கம்பீர இராச்சியத்தைத் தோற்றுவித்தனர்.

கி. பி. 1363ஆம் ஆண்டில், முல்பாகல் என்னும் இடத்திலிருந்து பெரும்படையுடன் புறப்பட்ட குமார கம்பணர் என்பவர், விரிஞ்சிபுரத்தைக் கைப்பற்றி, படை வீட்டிலிருந்த இராச நாராயணச் சம்புவராயரின் கோட் டையை முற்றுகை இட்டு, இம்மன்னனை விசயநகர அரசிற்கு அடங்கி ஒழுகி வருமாறு செய்தார்.

பாண்டியப் பேரரசிலிருந்து விடுபட்டுத் தனியாட்சி நடத்தி வந்த இவர்கள், குமார கம்பணரின் படையெடுப் பால் விசயநகரப் பேரரசின் மேலாட்சியை ஒப்புக் கொண்டு திறை செலுத்துவாராயினர்.

1. History of South India from 900 A.D. to 1565 A.D. (1977) Page. 214 — Dr. A. Krishnaswami.

இராச நாராயணச் சம்புவராயனின் மூன்று கல்வெட்டுகள், வில்லியனூர்க் கோயிலில் இடம் பெற்றுள்ளன.[1]

## சாளுவமங்கு தேவர்

சங்கம, சாளுவ, துளுவ, ஆரவீடு என்னும் விசயநகரப் பேரரசின் நால்வகை மரபு வழி அரசர்களில், இம்மன்னன் சாளுவ மரபைச் சார்ந்தவன்.

சாளுவ மங்குவின் முன்னோர் வரலாற்றை **இராம அப்யூதயம், சாளுவ அப்யூதயம்** என்னும் நூல்கள் கூறுகின்றன.

கலியாணபுரத்தில் வாழ்ந்த **குண்டா** என்பவர் சாளுவ வம்சத்தின் முதல்வராக இந்நூல்களில் கூறப்பெற்றுள்ளார். பாமினி சுல்தான்கள் கலியாணபுரத்தைக் கைப்பற்றி, குண்டாவையும், அவர் மகன் மங்குவையும் நாட்டைவிட்டு ஓட்டிவிட்டனர். இம் மங்கு ஹரிஹரன், புக்கன் ஆகிய இருவரிடமும் மானியக்காரராக விளங்கினார்.

குமார கம்பணர் தமிழ் நாட்டின்மீது படையெடுத்த போது அவருக்குத் துணையாக இருந்த படைத் தளபதிகளில் இச் சாளுவ மங்குவும் ஒருவர். இவரே பிற்காலத்தில் விசயநகர மன்னர்களில் சாளுவ மரபினரைத் தோற்றுவித்தார்.

இவருடைய ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1870) வரையப் பெற்ற கல்வெட்டு ஒன்றும் வில்லியனூரில்

1. கல்வெட்டு எண்கள் : 12—14.

காணப் பெறுகிறது.[1] இவரை "சம்புவராய ஸ்தாபனாச் சாரியார், திரிபுவனராய ஸ்தாபனாச்சாரியன்" என வில்லியனூர்க் கல்வெட்டுப் புகழ்ந்து கூறுவது குறிப் பிடத் தக்கது.

## இரண்டாம் அரியன உடையார்
## கி. பி. 1377 - 1404

விசயநகர அரசைத் தோற்று வித்த முதலாம் ஹரிஹரன் முதலாம் புக்கன் ஆகிய இருவரில், இவர் புக்கருடைய மூன்றாவது மகன்; சங்கம வம்சத்து அரசருள் ஒருவர்.

இவ்வரசருடைய ஆட்சிக் காலத்தில் விசய நகர அரசு ஒரு பேரரசாக வளர்ச்சியடைந்தது. குறிப்பாக மதுரைப் பகுதியில் கலகம் விளைவித்துக் கொண்டிருந்த அலாவுதீன் சிக்கந்தர்ஷா என்னும் சுல்தானை கி. பி. 1378ஆவது ஆண்டில் போரிட்டு அடக்கினார். இத் துடன் மதுரைச் சுல்தான்களின் ஆட்சி முற்றிலும் மறைந்தது எனலாம்.

நல்லூர், ஸ்ரீசைலம் ஆகிய இடங்களில் கிடைத்த செப்பேடுகள், இம் மன்னருடைய பல விருதுகளைத் தொகுத்துக் கூறுகின்றன. வில்லியனூரில் இவருடைய ஆட்சிக் காலத்தில் வரையப் பெற்ற மூன்று கல்வெட்டு கள் உள்ளன.[2]

மல்லதேவி என்பாள் அரியனரின் மனைவியாக விளங்கினாள். இவ்வம்மையார் **இராமதேவன்** என்னும்

---

1. கல்வெட்டு எண் : 20.
2. கல்வெட்டு எண்கள் : 21—23.

யாதவ குலத்து அரசனின் மரபினைச் சேர்ந்தவள். அரியனருக்கு விருப்பண்ண உடையார், புக்க உடையார், தேவராயர் என்னும் மூன்று குமாரர்கள் இருந்தனர்.[1]

### சாவனதேவர்

சாவனதேவர் என்பவர் முதலாம் புக்கரின் மகன் என்று தஞ்சை மாவட்டம் திருவையாற்றிலும், கோவை மாவட்டம் புஞ்சைப் புகலூரிலும் கிடைத்த கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆதலின், இவர் புக்கருடைய மூன்று குமாரர்களில் ஒருவராவர்.[2]

இவர் காலத்திய இரண்டு சாசனங்கள் வில்லியனூர்ச் சிவன் கோயிலில் காணப்பெறுகின்றன.[3]

### இரண்டாம் விருபாட்சராயர்

கு.பி. 1465 - 1485

பிரதாப தேவராயருடைய மகனான இவ்விருபாட்சராயர், நேர்மையற்ற முறையில் விசயநகரப் பேரரசின் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிய அரசர் என்று கூறுவர். ஸ்ரீசைலம் செப்பேடு, வாளின் வன்மையால் இவர் ஆட்சி உரிமை பெற்றதாகக் குறிப்பிடுகிறது. பிரபன்னாமிர்தம்

---

1. History of VIjayanagar Empire up to 1565 A.D. Pages 49 - 52 - Dr. A. Krishnaswami.
2. A. R. E. 1894,No. 253, A. R. E. 1928. No 350,A. R. E. 1936-37. Part II, Para 52 - History of Gingee and its Rulers (1942), Page. 49.
3. கல்வெட்டு எண்கள் : 24, 25.

என்னும் சமஸ்கிருத நூல், "விருபாட்சன் தனக்கு எதிராக இருந்த தாயத்தார்களைக் கொன்று, விசயநகரப் பேரரசின் அரியணையைக் கைப்பற்றினான்" என்று குறிப்பிடுகிறது.

சங்கம வம்சத்து அரசர்களில் ஒருவனான இம் மன்னன், தொடக்க காலத்தில் சைவனாக இருந்து, பின்னர் வைணவ சமயத்தைத் தழுவினான். எட்டூர் நரசிம்மாச்சாரியாரைத் தன் குலகுருவாகக் கொண்டான்.

இவன் காலத்தில் விசயநகர அரசுச் சின்னத்தில் "ஸ்ரீ விருபாட்ச" என்று எழுதுவதை விடுத்து, ஸ்ரீ "ராம" என்று எழுதப் பெற்றது.

இம் மன்னன் அரசியல் காரியங்களில் முழுக் கவனம் செலுத்தாமல், மயக்கப் பொருள்களை உண்டு, சிற்றின்பத்தில் காலங் கழித்தான். குடிமக்களின் நலன் களைக் கருதவில்லை. ஆதலால், உள்நாட்டுக் கலகங் களும், வெளிநாட்டுப் படையெடுப்புகளும் ஏற்பட்டன. பாமினி சுல்தான் மூன்றாம் முகமது, கலிங்க நாட்டு கஜபதி, துளுவ கொங்கணத் தலைவர்கள் ஆகியோர் விசயநகரப் பேரரசின் சில பகுதிகளைக் கைப்பற்றினர்.

வாணர்குலத் தலைவன் புவனேக வீரன் சமர கோலாகலன், தன்னைத் தனியரசனாகப் பிரகடனப் படுத்தி, சுதந்தர ஆட்சியை நிறுவினான். இத்தகைய காரணங்களால் விசயநகரப் பேரரசு சீர்குலையும் நிலை ஏற்பட்டது.

எனவே, சாளுவ நரசிம்மர் என்பார், விருபாட்ச ராயருடைய மகன் பெத்தேராயனிடமிருந்து பேரரசைக் கைப்பற்றி, விசயநகர அரசை நிலை நிறுத்தினார்.

விருபாட்சராயர் சைவராக இருந்த காலத்தில் (கி.பி. 1472) வரையப் பெற்ற கல்வெட்டு ஒன்று வில்லியனூரில் உள்ளது.[1]

## அச்சுத தேவராயர்
## கி.பி. 1530 - 1542

அச்சுத தேவராயர் என்பார், கிருஷ்ண தேவராயருக்கு ஒன்றுவிட்ட தம்பி முறையினர். கிருஷ்ண தேவராயருக்குப் பிறகு, 20-12-1529 அன்று அச்சுத தேவராயர் விசயநகரப் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். இதனைத் திருக்காளத்தியிலுள்ள ஒரு கல்வெட்டால் அறிய முடிகிறது.[2]

இவர் காலத்தில் உள்நாட்டுக் கலகங்களும், வெளிநாட்டுப் படையெடுப்புகளும் நிகழ்ந்தன. தமிழ் நாட்டில் மகா மண்டலேசுவரராக இருந்த **சாளுவ வீரநரசிம்ம நாயக்கரும்,** அவருக்குத் துணை நின்ற **பரமக்குடும்பிச்சி நாயக்கரும்** கலகம் செய்தனர்.

விசயநகர அரசுக்குக் கப்பம் கட்டி வந்த தென்காசிப் பாண்டியன் **ஸ்ரீ வல்லபன்** என்பவன், திருவிதாங்கூர் மன்னன் **உதய மார்த்தாண்டவர்மனால்** தோற்கடிக்கப்பட்டான்.

1530இல் விசயபுரி சுல்தான் **இஸ்மாயில் அடில்ஷா** என்பவர், விசய நகரப் பேரரசுக்கு உட்பட்டிருந்த ரேய்ச்சூர் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

---

1. கல்வெட்டு எண்: 26. [S. I. I., Vol. VII, No. 815].
2. A. R. E. 1924, No 157.

இக் கலகங்கள் ஒருவாறு அடக்கப்பட்டாலும், அச்சுததேவராயருடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில், விசயநகரப் பேரரசில் அரசியல் குழப்பங்கள் மலிந்தன. ஆட்சி உரிமைப் போட்டிகள் மிகுந்திருந்தன. குறிப்பாக, அச்சுத தேவராயர் திறமை மிக்க பேரரசர் என்று கூறுதற்கில்லை. இம் மன்னருடைய ஆட்சிக் காலத்தில் வரையப்பெற்ற மூன்று கல்வெட்டுகள், வில்லியநல்லூர்ச் சிவன் கோயிலில் உள்ளன.[1]

### சதாசிவ தேவராயர்
### கி.பி. 1545 - 1570

கிருஷ்ண தேவராயருடைய தம்பியும் அச்சுத தேவராயருடைய அண்ணனுமாகிய 'ரங்கராயர்' என்பவரின் புதல்வரே சதாசிவ தேவராயர்.

அச்சுத தேவராயரால் குத்தி என்னும் இடத்தில் இவர் சிறையில் அடைக்கப் பட்டிருந்தார். 'இராமராயர்' இவரை விடுதலை செய்து விசயநகரப் பேரரசின் அரசராகப் பிரகடனம் செய்தார்.

சதாசிவராயர் இராமராயருடைய கைப்பொம்மையாக, பெயரளவில் அரசராக இருந்தார். ஆட்சி பீடத்தில் இராமராயரே இருந்து அரசியல் காரியங்களைக்கவனித்து வந்தார். இறுதியில் இராமராயர், சதாசிவராயரைக் காவலில் வைத்து, ஆண்டுக்கு ஒருமுறை மக்கள் முன் அரசராகக் காட்டி வரலானார். இராமராயரும் அன்னாரின் தம்பியர் திருமலை வேங்கடாத்திரி ஆகிய மூவரும் ஆட்சிப் பொறுப்பில் பெருஞ் செல்வாக்குடன் விளங்கினர்.

1. கல்வெட்டு எண்கள்: 27 - 29.

சதாசிவராயரின் ஆட்சிக் காலத்தில் வரையப் பெற்ற கல்வெட்டு ஒன்றும் வில்லியனூரில் உள்ளது.[1]

## ஸ்ரீ ரங்கதேவரும் & வேங்கட தேவராயரும்

23-1-1565இல் தலைக்கோட்டைப் போர் நடைபெற்றது. தென்னிந்தியாவின் அரசியல் வரலாற்றில், இப்போர் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படும். ஏனெனில், விசயநகரப் பேரரசு அழிவதற்கு இப்போர் காரணமாயிற்று. பாமினி சுல்தான்கள் விசயநகரத்தை அழித்தனர்.

இந்த அழிப்பு வேலை ஆறு மாதங்கள்வரைத் தொடர்ந்து நடந்தது.[2] இப் போருக்குப் பிறகு தமிழ்நாடு விசய நகரப் பேரரசின் முக்கிய இடமாக விளங்கியது.

விசயநகரப் பேரரசு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. ஆந்திரப் பகுதிக்கு **பெனுகொண்டா** தலைநகரமாக்கப்பட்டு, அங்கு முதலாம் 'ஸ்ரீரங்கதேவர்' ஆளுநராக நியமிக்கப் பெற்றார். கன்னடப் பகுதிக்கு ஸ்ரீரங்கபட்டினம் தலை நகராக்கப்பட்டு, அங்கு இராமன் என்பவர் ஆளுநராக நியமிக்கப்பெற்றார். தமிழ் நாட்டிற்குச் சந்திரகிரி(செஞ்சி) தலைநகராக்கப் பட்டு வேங்கட தேவராயர் ஆளுநராக நியமிக்கப் பெற்றார். இம் மூவரும் திருமலைராயரின் மூன்று குமாரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இத் திருமலை ராயர், சதாசிவ தேவராயரைக் காவலில் வைத்த இராம ராயரின் தம்பி என்பதும் கருதத்தக்கது.

---

1. கல்வெட்டு எண் : :0
2. A Forgatton Empire, Page - 200, R. Sewell.

ஸ்ரீரங்கதேவர், வேங்கட தேவராயர் ஆகியோர் காலத்தில் வரையப்பெற்ற இரண்டு கல்வெட்டுகள் வில்லியனூர்ச் சிவன் கோயிலில் உள்ளன.[1]

## அரசு அலுவலர்

மேற்கூறிய பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் இப் பகுதியில் இருந்த உயர் அலுவலர் பற்றிய சில செய்திகளையும் இங்குள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## புரவு வரியார்

சோழர் காலத்தில் ஊர்தோறும் நிலவரிக் கணக்குகள் ஒழுங்காக வைக்கப் பெற்றுள்ளனவா என்று ஆராய்ந்து, அரசர் அல்லது உயர் அதிகாரியின் கட்டளைக்கு ஏற்ப நிலவரிகளில் மாற்றம் செய்வோர் புரவுவரியார் என்று அழைக்கப் பெற்றனர்.

வில்லியனூர்ப் பகுதியில் இத்தகைய புரவுவரியார் இருந்த நிலைமையை மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டால் அறியலாம்.[2]

## திருமந்திர ஓலை

அரசனருகில் இருக்கும் உயர் அலுவலர்களில் 'திருமந்திர ஓலை' என்னும் அதிகாரியும் ஒருவர். இவர் அரசன் வாய்மொழியாகக் கூறும் உத்தரவுகளையும், செய்திகளையும் கேட்டு, அவ்வப்போது ஓலையில் எழுதிப் பதிவு செய்து கொள்ளும் அதிகாரி.

---

1. கல்வெட்டு எண்கள்: 31 & 32.
2. கல்வெட்டு எண்: 5. [S. I. I., Vol. VII, No 816.]

மூன்றாம் குலோத்துங்க சோழனிடம் குலோத்துங்க சோழ மூவேந்த வேளான் மலைக்கினிய நின்றான் என்னும் பெயருடைய அதிகாரி ஒருவன் இத்தகைய உயர் அலுவலராக இருந்துள்ளான். அச்சோழ மன்னன் காலத்தில், ஒழுகரை என்னும் ஊரினின்றும் வில்லிய நல்லூரைத் தனியாகப் பிரித்து, தேவதானமாக மாற்றப் பட்ட செய்தியை ஓலையில் எழுதிய அதிகாரி இவனே யாவான்.

### காடுவெட்டிகள்

உடைய பெருமாளான காடுவெட்டிகள் என்பவர், கோப்பெருஞ் சிங்கன் காலத்தில் (கி. பி. 1249) இப் பகுதியிலிருந்த தணிக்கை அதிகாரி யாவார். இவர் பெருமங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். வில்லிய நல்லூர்ச் சிவன் கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்து, அக் கோயிலில் பணியாற்றிய ஆதிசைவர்களை நாள்தோறும் இரண்டு நந்தா விளக்குகள் எரிக்கக் கட்டளை இட்டவரும் இவரே யாவார்.[1]

### இராயரும் அய்யரும்

விசயநகர மன்னரான இரண்டாம் விருபாட்சராயர் காலத்தில் (கி. பி. 1472) இப்பகுதியில் விசயராயர் என்பவர் அரசு அதிகாரியாக விளங்கினார். அச்சுத தேவராயர் (கி. பி. 1532) காலத்தில் சறுவப் பையன் என்பவர் அதிகாரியாக இருந்தார்.[2]

---

1. கல்வெட்டு எண்: 8.
2. கல்வெட்டு எண்: 26.

## இராசர் இருவர்

சதாசிவ தேவராயர் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1550) சிம்மராசர் கோவிந்த தேவமகாராசர் ஆகியோர் இப் பகுதியில் அரசப் பிரதிநிதியாக இருந்தனர். இவ்விரு வரும் தமிழ் நாட்டு மகா மண்டலேசுவரர்களில் ஒருவ ரான இம்மடி தோராத்த சித்தய தேவ மகாராசாவின் மக்கள் ஆவர்.[1]

திருமலை மகாராயரின் காலத்தில் விசயராயர் என் பவர், வில்லியனூரில் நடைபெற்ற இனக் கலவரம் பற்றி விசாரணை செய்த அதிகாரி ஆவார். இவரோடு நாட்டு அதிகாரிகளும் இவ்விசாரணையில் பங்கு கொண்டனர்.[2]

## இராகோஜி பண்டிதர்

இவர் 18ஆம் நூற்றாண்டில் தஞ்சை அரசனிடம் அலுவல் பார்த்தவர். பிரஞ்சுக்காரர்களுக்கும் ஆர்க் காட்டு நாவாப்புக்கும் தூதுவராக இருந்தவர்.

ஆர்க்காட்டு நாவாப்பின் சபையில் வழுதாவூர்ச் சீமையைச் சேர்ந்த நாட்டார் அனைவரும் இந்த இராகோஜி பண்டிதரிடம், வில்லியனூர்ச் சிவன் கோயில் அறக் கட்டளைகள் குறையின்றி நடைபெற ஆவன செய்ய வேண்டுமென்று முறையிட்டுக் கொண்டமையை இங்குள்ள கல்வெட்டு ஒன்று புலப்படுத்துகிறது.[3]

---

1 கல்வெட்டு எண்: 30

2 கல்வெட்டு எண்: 29

3 கல்வெட்டு எண்: 36

# ஊரும் பெயரும்

## மண்டலம்

சோழப் பேரரசு நிலவிய காலத்தில் அப்பேரரசுக்கு உட்பட்ட நிலப் பகுதிகள் மண்டலம், வளநாடு, நாடு அல்லது கூற்றம் எனப் பிரிக்கப்பட்டிருந்தன.

இவற்றுள், **மண்டலம்** என்பது பல வளநாடுகளைத் தன்னகத்துக் கொண்ட பெருநிலப் பரப்பாகும். இக் காலத்திய நான்கைந்து மாவட்டங்களைக் கொண்ட நிலப்பரப்பு அக்காலத்திய மண்டலத்துக்குச் சமமாகும்.

## வளநாடு

பல நாடுகளைத் தன்னகத்துக் கொண்ட நிலப் பரப்பு **வளநாடு** என்னும் பெயருடன் திகழ்ந்தது. அக்

காலத்திய வளநாடு, சற்றேறக் குறைய இக்காலத்திய மாவட்டத்திற்கு ஈடாகக் கூறலாம்.

### நாடு

தனி ஊர், சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம், தேவதானம், நகரம் ஆகியவற்றைக் கொண்ட சிறு நிலப்பகுதி நாடு என்று கூறப் பெற்றது. இக்காலத்திய வட்டம் அக்காலத்து நாட்டுக்குச் சமமாகும்.

இம் மண்டலம், வளநாடு, நாடு ஆகியவை பெரும் பாலும் அக்காலத்திய அரசர்களின் பெயர்களைப் பெற்றிருந்தன.

நாட்டுப் பிரிவுகள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஓர் அரசனின் பெயராலும், வேறொரு காலத்தில் மற்றொரு அரசனின் பெயராலும் வழங்கப் பெறுவது உண்டு. ஆயினும், அவற்றின் எல்லையில் பெரிய மாறுதல் ஏதும் நிகழவில்லை.

### செயங்கொண்ட சோழ மண்டலம்

வில்லியநல்லூர் சோழர், பாண்டியர் ஆளுகையின் போது, செயங்கொண்ட சோழ மண்டலத்து இராசராச வளநாட்டு மாத்தூர் நாட்டில் இருந்ததாகக் கல் வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[1]

தென்னார்க்காடு மாவட்டம், வட ஆர்க்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களும், ஆந்திர மாநிலத்து சித்தூர் மாவட்

---

1. கல்வெட்டு எண்: 5 & 10.

டமும், ஒருங்கிணைந்த பெருநிலப்பரப்பு முற்காலத்தில் **தொண்டை மண்டலம்** என்னும் பெயருடன் திகழ்ந்தது.

முதலாம் இராசராச சோழன் இத்தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றி, அதற்குத் தன் சிறப்புப் பெயர்களுள் ஒன்றான செயங்கொண்ட சோழன் என்னும் பெயரை இட்டு வழங்கினான். அது முதல் இம் மண்டலம் செயங்கொண்ட சோழ மண்டலம் என்று பெயர் பெற்றது.[1] வில்லியனூர் இம்மண்டலத்தைச் சார்ந்த ஊராகும்.

## இராசராச வளநாடு

செயங்கொண்ட சோழ மண்டலத்தில் அமைந்திருந்த 24 வளநாடுகளில் இராசராச வளநாடு என்பதும் ஒன்று. இது முதலாம் இராசராச சோழன் பெயரால் அழைக்கப் பெற்ற வளநாடாகும்.

கீழாமூர் நாடு
அண்ணா நாடு
அரசூர் நாடு
ஆற்றூர்க் கூற்றம்
அவியனூர் நாடு
செங்குன்ற நாடு
ஏமப் பேரூர் நாடு
இடையாற்று நாடு
கயற்பாக்கை நாடு
கீழ்க்கொன்றை நாடு

---

1. வரலாற்று வடிவங்கள் (1976), பக்கம். 20, புலவர் சு. குப்புசாமி.

கூடல் இலாடைப்பாடி நாடு
குன்றத்தூர் நாடு
குறுக்கைக் கூற்றம்
குவலைய நாடு
மாத்தூர் நாடு
மேலூர் நாடு
மெய்குன்றா நாடு
பாதூர் நாடு
பனையூர் நாடு
பட்டாம் பாக்கை நாடு
உடைக்காட்டு நாடு
திருவெண்ணெய் நல்லூர் நாடு

என இருபத்திரண்டு நாடுகள் இராசராச வளநாட்டில் அடங்கி இருந்தன.[1]

இவற்றுள் மாத்தூர் நாட்டிற்கு வீரஅவதார வளநாடு என்ற வேறு பெயரும் இருந்துள்ளது.[2]

### மாத்தூர் நாடு

இராசராச வளநாட்டின் உட்பிரிவு நாடுகளில் மாத்தூர் நாடும் ஒன்று. தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டத்தின் ஒரு பகுதியும், புதுச்சேரி மாவட்டத்தின் ஒரு பகுதியும் இணைந்த சிறு நிலப்பரப்பு. அக் காலத்தில் 'மாத்தூர் நாடு' என்னும் பெயருடன் திகழ்ந்தது.

---

1. Political Geography of the Chola Country (1973). Page. III, Y. Subbarayalu.
2. S. I. I., Vol. VII, No. 188.

இந் நாட்டின்கண் அடங்கியிருந்த முக்கிய ஊர்களில்,

ஒழுகரையான குலோத்துங்க சோழ நல்லூர்
பெருவெள்ளேரி
பூங்குன்றம்
இரும்பை
வில்லியநல்லூர்

ஆகியவை குறிப்பிடத்தக்க ஊர்களாகும்.[1]

இம் மாத்தூர் வில்லியநல்லூருக்கு வடமேற்கே, ஏறத்தாழ 20 கி.மீ. தொலைவில் இன்றும் உள்ளது. அபிராமேச்சுரம் என்னும் பெயரில் பழமையான சிவன் கோயில் ஒன்றும் இங்கு உள்ளது.

வில்லியநல்லூரில் காணப்பெறும் கல்வெட்டுகளின் வாயிலாக அக்காலத்தில் இப் பகுதியில் இருந்த - இருக்கின்ற சில ஊர்களின் பெயர்களையும், அவற்றின் பழமையையும் ஒருவாறு அறிந்து கொள்ள முடிகிறது. இனி இப்பகுதியில் அவ்வூர்களைப்பற்றிய சுருக்கமான செய்திகளைக் காண்போம்.

### வில்லியநல்லூர்

வில்லியநல்லூரின் பழமையை அறிந்து கொள்வதற்கு, வில்லிய நல்லூரிலுள்ள கல்வெட்டுகளும், தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டம் திருவாமாத்

---

1. S. I. I., Vol. V, No. 989 & S. I. I., Vol. VII, Nos 816 & 817. கல்வெட்டு எண்: 5. - & கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள் (1975) பக்கம். 159, புலவர் சு. குப்புசாமி.

தூரிலுள்ள அபிராமேச்சுரத்துக் கல்வெட்டொன்றும் துணையாக உள்ளன. இவற்றுள், திருவாமாத்தூர்க் கல்வெட்டு முதலாம் இராசராச சோழனின் பதின் மூன்றாவது (கி.பி. 998) ஆண்டில் வரையப் பெற்ற தாகும்.

அக் கல்வெட்டு, 'விடேல் விடுகுச் சதுர்வேதிமங்கல மாகிய வில்லிய நல்லூரின் ஊரவை உறுப்பினரான அவிசாகை மகாதேவரின் மகன் 'கோவர்த்தனக் கிரம வித்தன்' என்பவன், திருவாமாத்தூர் இறைவனுக்குச் சிறுகாலைச் சந்தியில் பால் வழங்கப் பொற்கொடை நல்கிய செய்தியைக் கூறுகிறது.[1]

இக் கல்வெட்டில் வில்லியநல்லூர் என்றே இவ் ஊரின் பழம் பெயர் குறிக்கப் பெறுகிறது. அன்றியும், விடேல் விடுகுச் சதுர்வேதி மங்கலம் என்ற இன்னொரு பெயரும் இவ் ஊருக்கு உண்டு என்பதை இக் கல்வெட்டால் அறியலாம்.

### விடேல் விடுகுச் சதுர்வேதி மங்கலம்

விடேல்விடுகு என்னும் பெயர், பொதுவாகப் பல்லவ அரசர்களின் பட்டப் பெயர்களில் ஒன்றாகும். ஆதலின், இவ்வூர் பல்லவர் ஆட்சிக் காலத்தில், குறிப் பாக 1200 ஆண்டுகளுக்கு முன்பே இருந்த பழமைச் சிறப்புடைய ஊராகும்.

அக்காலத்தில் வில்லியநல்லூர் என்னும் பெயருடன் திகழ்ந்த இந்த ஊர், விடேல் விடுகுச் சதுர்வேதி மங்கலம் என்று பெயர் மாற்றம் செய்யப்பெற்று, நான்கு

---

1. S.I.I., vol. viii, No. 748.

வேதங்களிலும் வல்ல வேதியர்களுக்கு உரிமையாக்கப் பட்டமையால் திருவாமாத்தூர் கல்வெட்டு இதனை,

'வில்லியநல்லூரான விடேல்விடுகுச்
சதுர்வேதி மங்கலம்'

என்று குறிப்பிடுகிறது.

இதே பெயர்கள் முதலாம் இராசராச சோழன் காலத்திலும் வழக்கத்திலிருந்தமையைத் திருவாமாத்தூர்க் கல்வெட்டால் அறியலாம்.

வில்லியநல்லூர்ச் சிவன் கோயிலில் உள்ள சோழர், கோப்பெருஞ்சிங்கன், பாண்டியன், சம்புவராயன், விசயநகர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுகள் அனைத்தும், இவ்வூரின் பெயரை வில்லியநல்லூர் என்றே குறிப்பிடுகின்றன. இப் பெயரே இதன் பழம் பெயராகும்.

## புராணப் பெயர்கள்

வில்லியநல்லூர் என்பது இக்காலத்தில் வில்லியனூர் என்று மருவி வழங்குகிறது. வில்லைப் புராணத்தில் இவ்வூர் வில்வநல்லூர், காமிசம், வில்லபுரி, வில்லமாநகரம் என்னும் பெயர்களால் குறிக்கப் பெற்றுள்ளது. அப்பெயர்கள் தலபுராண அளவிலேயே நின்றுவிட்டன.

எக்காலத்திலும் வில்வநல்லூர் என்னும் பெயரைப் பொதுமக்கள் வழங்கவில்லை. அவ்வாறு வழங்கியிருப்பின் அப் பெயரே கல்வெட்டுகளிலும் இடம் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு இல்லாமையால் வில்லியநல்லூர் என்னும் பெயரே வழக்கில் இருந்தமை எளிதில் புலனாகும்.

நெடுங் காலத்திற்கு முன்னர் இங்கு வில்லியர்கள்-வில் ஆளுதலில் வல்ல வீரர்கள் நிறைந்திருந்த காரணம் பற்றி, இவ்வூர் வில்லியநல்லூர் என்னும் பெயரைப் பெற்றது. தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் பகுதியில் இருந்த ஒரு குறுநில மன்னன் வில்லியாதன் என்னும் பெயருடன் இருந்தமையைப் புறப் பாடலால் அறியலாம்.[1]

## திருநீற்றுச் சோழ நல்லூர்

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வில்லிய நல்லூருக்குத் திருநீற்றுச் சோழ நல்லூர் என்ற வேறொரு பெயரும் இருந்தமையை அவன் காலத்துக் கல்வெட்டொன்று சுட்டிக் காட்டுகிறது.[2]

முதலாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆகிய இரு குலோத்துங்க சோழ மன்னர்களுக்கும் திருநீற்றுச் சோழன் என்ற சிறப்புப் பெயர் உண்டு.

இவ்விருவருள் முதலாம் குலோத்துங்க சோழன் பெயராலேயே இந்த ஊர் திருநீற்றுச் சோழநல்லூர் என்று பெயர் மாற்றம் செய்யப் பெற்றதாகக் கொள்ளலாம்.

இக் காலக்கட்டத்தில் வில்லியநல்லூர் தனி ஊராகக் குறிக்கப் பெறாமல், ஒழுகரையைச் சேர்ந்த சிற்றூராகவே குறிக்கப் பெறுகிறது. ஆயினும், மூன்றாம் குலோத்துங்க சோழனின் 13ஆவது (கி.பி. 1191) ஆண்டிலிருந்து,

---

1 புறநானூறு - 371

2 S.I.I. Vol. No. 816

இவ்வூர் ஒழுகரையிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டுத் திருநீற்றுச் சோழ நல்லூர் என்னும் புதிய பெயரைப் பெற்றுத் தனித்து விளங்கியது. அதே காலத்தில் ஒழுகரைக்குக் குலோத்துங்க சோழநல்லூர் என்னும் புதிய பெயரும் இடப்பெற்றது.

### திருக்காமி நல்லூர்

வேங்கடதேவராயர் காலத்துக் கல்வெட்டில் (கி.பி 1699) இவ்வூர் திருக்காமிநல்லூர் என்னும் பெயராலும் குறிக்கப்பெற்றதை அறியலாம்.[1] எனினும், இப்பெயர் பெருவழக்காய் இல்லை.

இதுகாறும் கூறியவற்றால்,

விலலியநல்லூர்
விடேல் விடுகுச் சதுர்வேதி மங்கலம்
திருநீற்றுச் சோழ நல்லூர்

முதலான பெயர்கள் இந்த ஊருக்கு இருந்தன என்பதைத் தெளிவாக உணரலாம்.

### அரிஊனர்

அரிஊர் என்பது இக்காலத்தில் அரியூர் என்னும் பெயருடன் வில்லியனூர்க்கு மேற்கே 5 கி.மீ. தொலைவி லுள்ளது.

பராக்கிரம பாண்டியன் காலத்தில் (கி.பி. 1335-1352) வரையப்பெற்ற வில்லியனூர்க் கல்வெட்டு ஒன்றில் இவ்வூர் அரிஊர் என்று குறிக்கப்பெற்றுள்ளது.[2]

1 கல்வெட்டு எண்: 32
2 கல்வெட்டு எண் : 11

திருபுவனையில் காணப்பெறும் முதலாம் இராசாதி ராச சோழன் காலத்துக் (கி.பி. 1051) கல்வெட்டில், இது அருகூர் என்று குறிக்கப் பெற்றுள்ளது.[1]

இங்குள்ள இறைவன் அருகூர் மகாதேவர் என்று அழைக்கப் பெற்றுள்ளார். ஆதலின், அருகூர் என்னும் சோழர் காலத்துப் பெயரே இவ்வூரின் பழமையான பெய ராகும்.

இப் பெயர் பாண்டியர் காலத்தில் அரிஊர் என்று வழங்கி, இக்காலத்தில் அரியூர் என்று மருவியுள்ளது.

அக்காலத்தில் அரியூரில் கல் தச்சர்கள் மிகுதியாக இருந்துள்ளனர். இத் தச்சர்களில் சிலர் கோயில்களிலும் பிற இடங்களிலும் கல்வெட்டுகள் பொறித்துள்ளதைப் பராக்கிரம பாண்டியன் காலத்திய வில்லியனூர்ச் சாசனம் உணர்த்துகின்றது.[2]

### அகரம்

வில்லியனூரிலுள்ள கோப்பெருஞ்சிங்கனின் 6 ஆவது (கி.பி. 1249) ஆண்டுக் கல்வெட்டில் அகரம் என்னும் ஊர் குறிக்கப் பெற்றுள்ளது.[3]

இது வில்லியநல்லூர்க்கு வடமேற்கே 2½ கி.மீ. தொலைவில் உள்ளது. அகரம் என்னும் இச்சிற்றூர் **மட்டைப்பாக்கம்** என்னும் ஊரைச் சார்ந்த பகுதியாக இக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

---

1 திருபுவனை, கல்வெட்டு எண் : 8,
புலவர் சு. குப்புசாமி

2 கல்வெட்டு எண் : 11

3 கல்வெட்டு எண் : 7

ஆதலின், தற்போது அகரத்திற்கு அண்மையிலுள்ள கூடப்பாக்கம் என்னும் ஊரே கல்வெட்டு குறிப்பிடும் மட்டைப்பாக்கம் என்னும் ஊராக இருத்தல் வேண்டும்.

அகரம் என்பது பிராமணர்கள் வாழ்கின்ற அக்ரகாரமாகும். இப் பகுதி அவனியாளப் பிறந்தான் சதுர்வேதி மங்கலம் என்று பெயர் பெற்றிருந்தது. இப் பெயர் கோப்பெருஞ்சிங்கனுடைய பெயராகும்.

ஆதலின், கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் (கி. பி. 1249) மட்டைப்பாக்கத்தின் (கூடப்பாக்கம்) ஒரு பகுதி அவனியாளப் பிறந்தான் சதுர்வேதி மங்கலம் என்னும் பெயருடன் அகரமாக மாற்றப்பட்டு பிராமணர்களுக்கு வழங்கப்பட்டதாகக் கொள்ள வேண்டும்.

## உழந்தை

வில்லியனூருக்குத் தென் கிழக்கே இச் சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூரைப் பற்றி கோப்பெருஞ்சிங்கன் (கி. பி. 1249), இரண்டாம் ஹரிஹரர் (கி. பி. 1379) ஆகியோர் காலத்திய கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[1]

இவ் உழந்தையைத் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள உளுந்தூர்ப் பேட்டை என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.[2] அது பொருத்தமான கருத்தில்லை.

ஹாலந்துக்காரர்கள் இங்கு வந்து தங்கிய காரணத்தால், இது ஒலாந்தே (Holland) என்று பெயர் பெற்று,

1 கல்வெட்டு எண்கள் : 7 & 22.

2 A. R. E. 1936 - 37, Part II, Para. 53.

அப்பெயர் மருவி 'உழுந்தை' என்று ஆனதாக, புதுச்சேரியில் உள்ள சரித்திர ஆசிரியர் ஒருவர் கருதுகிறார்.

ஹாலந்துக்காரர்களின் வருகைக்கு முன்பே, இவ் ஊர் உழுந்தை என்னும் பெயருடன் திகழ்ந்தமையை வில்லியனூர்க் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

அன்றியும், திருவாண்டார்க் கோயிலில் உள்ள சிதைந்த கல்வெட்டொன்றில்,

"உழுந்தையும் கீரைப்பாளையமும்"

என்னும் தொடர் காணப்பெறுவதும் குறிப்பிடத் தக்கது. அக் கல்வெட்டுப் பகுதி 11ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்டது.[1]

எனவே, உழுந்தை என்பது, பழம் பெருமைக்குரிய சிறப்புமிக்க ஊராகும்.

அக் காலத்தில் இங்கு வணிகப் பெருமக்கள் பெரு வாரியாக இருந்தனர். இவர்களில் பலர், வில்லியனூர்ச் சிவன் கோயிலுக்கு அறக் கட்டளைகள் பல நிறுவியுள்ளனர்.

உழுந்தை என்னும் இவ்வூருக்கு உரிய ஏரி, உழுந்தை ஏரி ஆகும். அது இக் காலத்தில் ஒயிண்டேரி என்று மருவி வழங்கும் கொடுமையைக் காண்கிறோம்.

## ஒழுகரை

இது வில்லியனூர்க்கு வடகிழக்கே 4 கி.மீ. தொலைவில் உள்ளது. வில்லியனூரிலுள்ள பெரும்பான்மை

---

1 பாகூர் புலவர் சு. குப்புசாமி அவர்களும் நானும் இக் கல்வெட்டுப் பகுதியைப் பதிவு செய்துள்ளோம்.

யான கல்வெட்டுகள் ஒழுகரையைப் பற்றிக் குறிப்பிடு கின்றன.

திருவாமாத்தூர் அபிராமேச்சுரத்திலுள்ள முதலாம் இராசராச சோழனின் 28ஆவது ஆண்டு (கி.பி. 1013) கல்வெட்டில் இவ்வூரின் பெயர் 'ஒழுக்கை வடகரை' என்று குறிக்கப்பட்டுள்ளது.[1] ஆதலின், இதுவே இதன் பழமையான பெயராகும்.

இடையறாது நீர் ஒழுகும் கரையைப் பெற்றிருந்த காரணம் பற்றி இது ஒழுகரை எனப் பெற்றது.

சோழர் காலத்தில் இவ்வூர் ஒரு பேரூராகத் திகழ்ந் துள்ளது. வில்லியனூர், இப்பேரூரின் ஒரு அங்கமாக, ஒழுகரை ஊர்ச் சபையினரால் ஆளப் பெறும் ஊராக இருந்த செய்தியை, மூன்றாம் குலோத்துங்க சோழனின் சாசனம் புலப்படுத்துகின்றது.[2]

ஒழுகரைக்குக் குலோத்துங்க சோழ நல்லூர் என்ற வேறொரு பெயரும் உண்டு. மூன்றாம் குலோத்துங்கன், கோப்பெருஞ் சிங்கன், பராக்கிரம பாண்டியன் ஆகி யோர் காலத்திய சாசனங்கள் இப்பெயரைக் குறிப்பிடு கின்றன.[3]

குலோத்துங்க சோழ நல்லூர் என்பது, முதலாம் குலோத்துங்க சோழன் பெயரால் ஒழுகரைக்கு இடப் பட்ட பெயராகும். இக்காலத்தார் இதன் பழம் பெயரை மாற்றி, உழவர்கரை என்று புதுப் பெயரிட்டு வழங்குவது வரலாற்று நோக்கில் தவறானதாகும்,

---

1 A. R. E. 1922, No. 4.

2 கல்வெட்டு எண்: 5 (S. I. I, vol, vii. No. 816)

3 கல்வெட்டு எண்கள்: 5, 6, 8, 10.

பராக்கிரம பாண்டியன் காலத்தில் ஒழுகரையில் வாழ்ந்த பனைப்பாங்கிழார்கள், வில்லியனூர்ச் சிவன் கோயிலில் நடைபெறும் வைகாசி ஆண்டுப் பெரு விழாவில், இரண்டாம் நாள் திருவிழாவைத் தமது பொறுப்பில் ஏற்று நடத்தி வந்தமையைப் பாண்டியன் காலத்துக் கல்வெட்டால் அறியலாம்.[1]

## புத்துழான்பட்டு

இவ்வூர், புத்திராம்பட்டு என்னும் பெயருடன் இக் காலத்தும் உள்ளது. இது புத்திரான்பட்டு எனவும், புத்துழான்பட்டு எனவும், வில்லியனூர்க் கல்வெட்டு களில் குறிக்கப் பெறுகிறது. இக்கல்வெட்டுகள் அச்சுத தேவராயர் (கி. பி. 1532), சதாசிவராயர் (கி.பி. 1550) ஆகியோர் ஆட்சிக் காலங்களில் வரையப் பெற்றவை யாகும்.[2]

புத்துழான்பட்டு 1532ஆவது ஆண்டு முதல் வில்லியனூர்ச் சிவன் கோயிலுக்கு கொடையாக வழங்க பெற்ற செய்தியை மேற்காட்டிய கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன.

## பிறையூர்

வில்லியனூர்க்கு வடக்கே 3 கி. மீ. தொலைவி லுள்ள பிறையூரை, இங்குள்ள கல்வெட்டுகளில் 4 கல் வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவற்றில் இதன் பெயர் பிறையூர் என்றும், புறையூர் என்றும் குறிக்கப் பெற் றுள்ளது. இன்று பொறையூர் என்று மருவி வழங்கி வருகிறது.

---

1 கல்வெட்டு எண்: 11.

2 கல்வெட்டு எண்கள்: 27 & 30.

பராக்கிரம பாண்டியன், இராச நாராயணச் சம்பு வராயன் ஆகியோர் ஆட்சிக்காலங்களில், வில்லியனூர்ச் சிவன் கோயிலுக்குப் பிறையூர் நிலங்களில் சில கொடையாக வழங்கப் பெற்றன. ஆனால், அச்சுததேவராயர் ஆட்சியின் போது, கி. பி. 1532ஆவது ஆண்டில் இவ்வூர் முழுதும் மேற்படி கோயிலுக்கு உரிமையாக்கப் பெற்றது.

### பாக்கமுடையான்பட்டு

வில்லியனூரில் உள்ள பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டில் இந்த ஊர் பாக்கமுடையான்பட்டு என்றே குறிக்கப் பெற்றது. இது வில்லியனூர்க்கு வட கிழக்கே 13 கி, மீ. தொலைவில் உள்ளது. வில்லியனூர்ச் சிவன் கோயிலில் வைகாசித் திங்களில் ஆண்டு தோறும் நடைபெறும் ஆண்டுப் பெருவிழாவில் நான்காம் நாள் விழாவினைப் பாக்கமுடையான்பட்டு ஊர்ப் பெருமக்கள் தமது பொறுப்பில் ஏற்று நடத்தி வந்த செய்தியைப் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டுக் கூறுகிறது.[1]

### பிரம்பை

வில்லியனூர்க்கு வடக்கே 2 கி. மீ. தொலைவிலுள்ள பிரம்பை என்னும் சிற்றூர், பராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் இதே பெயருடன் காணப் பெறுகிறது. வில்லியனூர்ச் சிவன் கோயிலில் வைகாசித் திங்கள்தோறும் நடைபெறும் ஆண்டுப் பெருவிழாவில், பிரம்பை ஊர்ப் பெருமக்கள், திருக்கொடித் திருநாளைத் தமது பொறுப்பில் ஏற்று நடத்தி வந்தமையை இப்

1 கல்வெட்டு எண்; 11.

பாண்டியனின் (கி,பி. 1335 - 1352) கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[1]

பிரெஞ்சுப் படைத் தளபதியான புய்சி என்பவர், ஆர்க்காட்டு நவாப்பான முசாபர்ஜங் அவர்களை, ஔரங்காபாத்திரத்திற்குத் தக்க பாதுகாப்போடு அழைத்துச் சென்றார். அப் பிரஞ்சுப் படை பிரம்பையிலிருந்து 15-1-1751இல் புறப்பட்டதாக புய்சி தனது நாட்குறிப்பில் வரைந்துள்ளார்.[2]

## வண்ணத்தான்பட்டு

அச்சுத தேவராயர் ஆட்சியின் பொழுது (28-5-1536இல்) வில்லியநல்லூர்ச் சிவன் கோயிலுக்கு கொடையாக வழங்கப் பெற்ற ஊர்களில் வண்ணத்தான் பட்டு என்னும் ஊரும் ஒன்று. இது வண்ணக்கன்பட்டு என்ற பெயராலும் குறிக்கப் பெற்றுள்ளது. இச் செய்திகளை அச்சுததேவராயர், சதாசிவ தேவராயர் ஆகியோர் காலத்திய சாசனங்கள் உணர்த்துகின்றன.[3]

இவ்வூர் இக் காலத்தில் வில்லியனூர்க்கு வடமேற்கே 12 கி.மீ. தொலைவில் உள்ள வம்பப்பட்டு, வண்ணத்தான்பாளையம் ஆகிய இரண்டு ஊர்களில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்.[4]

---

1 கல்வெட்டு எண்: 11.

2 A History of Gingee and Its rulers, Page 490. Rao Bahadur C. S. Srinivasachari M. A.

3 கல்வெட்டு எண் : 28 & 30

4 கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள் - பக்கம் 142 புலவர் சு. குப்புசாமி

பள்ளற்றூர்

இவ்வூரைக் கோப்பெருஞ் சிங்கன், பராக்கிரம பாண்டியன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுகள் குறிப் பிடுகின்றன.[1]

ஒழுகரையின் ஒரு பகுதி அக்காலத்தில் பள்ளற்றூர் என்னும் பெயருடன் இருந்தமையைக் கோப்பெருஞ் சிங்கனின் 5ஆவது ஆண்டுக் (கி.பி. 1248) கல் வெட்டுத் தெளிவாக்குகிறது.

'பெருமாள் பிள்ளையான சோழகோனார்' என்னும் அதிகாரிக்குச் சில நிலங்களைப் பள்ளற்றூரைச் சேர்ந்த ஊர்ச் சபையினர் விற்ற செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது.

வில்லியனூர்ச் சிவன் கோயில் ஆண்டுப் பெரு விழாவில், ஏழாம் நாள் விழாவினை இப் பள்ளற்றூர்ப் பெருங்குடி மக்கள், தம் பொறுப்பில் ஏற்று நடத்தியதைப் பராக்கிராம பாண்டியன் காலத்துக் கல்வெட்டு காட்டு கிறது.

இவ்வூர் தற்போதுள்ள ஒழுகரைக்கும், அதற்கு வடக்கே உள்ள முத்தரையர் பாளையத்திற்கும் இடைப் பட்ட இடமாக இருத்தல் வேண்டும். முத்தரையர் பாளையம் மேட்டுநிலப் பகுதியாகவும், ஒழுகரை தாழ்வு நிலப் பகுதியாகவும் இருக்கும் அமைப்பினைக் கருத்திற் கொண்டு இம்முடிவுக்கு வருகிறோம். இக் காலத்தில் பள்ளற்றூர் என்னும் பெயரில் ஊர் ஏதும் இல்லை.

---

1 கல்வெட்டுகள் : 6 & 11

**மோசுகுளத்தூர்**

இராச நாராயணச் சம்புவராயன் காலத்தில் இரு கல்வெட்டுகள், மோசுகுளத்தூரைப் பற்றிய குறிப்பினைத் தருகின்றன.

மோசுகுளத்தூரைச் சேர்ந்த **வளவதரையன்** என்பவனும் **பல்லவராயன்** என்பவனும் திருக்காமீசுவரருக்கு நந்தா விளக்கு எரிக்க பரியன்ஏரிப் பகுதியில் முறையே 335 குழியும், 500 குழியும் நிலக்கொடை வழங்கியதைப் பற்றி இச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. இவை கி.பி. 1343, 1351 ஆண்டுகளில் வரையப் பெற்றுள்ள சாசனங்களாகும்.[1]

மோசுகுளத்தூரில் அகத்தீச்சுரம், அனந்தீச்சுரம் என இரு சிவன் கோயில்களும், கருமாணிக்க ஆழ்வார் என்னும் பெயருடைய பெருமாளுக்கு ஒரு கோயிலும் இருந்தனவென்று திருபுவனையில் காணப் பெறும் முதலாம் இராசாதிராசச் சோழனின் 33 ஆவது (கி.பி. 1051) ஆண்டுக் கல்வெட்டுக் குறிக்கிறது.

> "மோசுகுளத்தூர் திருவகத்தீஸ்வரமுடைய மகாதேவர்க்கு நிலம் ஆறு மாவும், மேல்படியூர் திருவநந்தீஸ்வர முடைய மகாதேவர்க்கு கரு மாணிக்க ஆழ்வார்க்கு நிலம் மூன்று மாவும்"

என்பது அக் கல்வெட்டுப் பகுதி.[2]

---

1 கல்வெட்டு எண் : 12; 13

2 திருபுவனை, கல்வெட்டு எண் : 8, புலவர் சு. குப்புசாமி

மோசுகுளத்தூர் இக் காலத்தில் மோட்சகுளம் என்னும் பெயருடன் வில்லியனூர்க்குத் தென்மேற்கே ஏறத்தாழ 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

## மடுகரை

கி.பி. 1765 ஆவது ஆண்டில் வரையப்பெற்ற கல்வெட்டு ஒன்றில், இவ்வூர் மடுக்குறை என்று குறிக்கப் பெறுகிறது. மடுகரையைச் சேர்ந்த இராமு ரெட்டியார் என்பவர் வில்லியனூர்ச் சிவன் கோயிலின் திருக்குளத்தில் மண்டபம் கட்டியதைப் பற்றி இச் சாசனம் கூறுகிறது.[1]

## பூங்குன்றம்

கி.பி. 1251 இல் வரையப்பெற்ற கோப்பெருஞ் சிங்கன் கல்வெட்டிலும், பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1335-1352) காலத்திய கல்வெட்டிலும், பூங்குன்றம் என்னும் ஊர் குறிக்கப் பெற்றுள்ளது.

வில்லியநல்லூர்ச் சிவன் கோயில் ஆண்டுப் பெரு விழாவில், ஒன்பதாம் நாள் விழாவன்று பூங்குன்றமுடையார்கள் இறைவனுக்குத் திருவெழுச்சி நடத்தியதாகப் பாண்டியனின் சாசனம் கூறுகிறது.[2]

பூங்குன்றம் வில்லியனூர்க்கு அண்மையில் இருந்திருத்தல் வேண்டும்.

## தொண்டைமாநத்தம்

இந்தஊரை 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது.

---

1 கல்வெட்டு எண் : 35

2 கல்வெட்டு எண்: 11

சிவன் கோயில் திருக்குளத்திற்கு வடக்கேயுள்ள ஞான தேசிகர் மடத்திற்குத் தொண்டைமாநத்தத்து ஊரவரும், அதிகார மோச்சிய ரெட்டியாரும் இவ்வூரில் அத்திக் கிணற்றுக்கு மேற்கில் 500 குழி நன்செய் நிலத்தையும், 500 குழி புன்செய் நிலத்தையும் கொடையாக வழங்கியதை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[1]

தொண்டைமா நத்தத்தின் மேற்குப் பகுதியில், அத்திக்கிணறு என்னும் நிலப்பகுதி இப்பொழுதும் உண்டு என்று கூறுவர். இவ்வூர், வில்லியனூர்க்கு வடமேற்கே 8 கி. மீ. தொலைவில் இதே பெயருடன் இன்றும் உள்ளது.

## வழுதாவூர்

18ஆம் நூற்றாண்டில் வரையப்பட்டுள்ள கல்வெட்டொன்றில் 'வழுதாவூர் சீர்மை' என்று குறிக்கப் பெற்றுள்ளது.[2] இது, வில்லியனூர்க்கு வடமேற்கே 10 கி. மீ. தொலைவில் உள்ளது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க பேரூராகும். பிரஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் நடைபெற்ற போர்களில் வழுதாவூர் முக்கிய இடமாகக் கருதப் பெற்றது.

வழுதாவூரில் அழகிய கோட்டையொன்று இருந்து அழிந்து விட்டது. ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பில் இவ்வூரைப் பற்றிய பல செய்திகள் இடம் பெற்றுள்ளன.

---

1 கல்வெட்டு எண்: 39

2 கல்வெட்டு எண்: 36

முதலாம் இராசாதி ராச சோழன் காலத்திய திருபுவனைக் கல்வெட்டில் இது வழுதவூர் என்று கூறப் பெற்றுள்ளது. இங்கிருந்த சிவன் கோயிலுக்கு அரைமா நிலம் சொந்தமாக இருந்ததை 'வழுதவூர் மகா தேவர்க்கு நிலம் அரைமாவும்' என்று வரும் அக்கல் வெட்டுத் தொடரால் அறியலாம்.[1]

*விஷ்ணுச் சேரி*

வில்லியனூரிலுள்ள சிதைந்த கல்வெட்டுப் பகுதி யொன்றில், விஷ்ணுச் சேரி என்னும் பெயர் காணப் பெறுகிறது.[2]

விஷ்ணுச்சேரி ஊர்ச்சபையினர் வில்லியனூர்ச் சிவன் கோயிலுக்கு நிலம் வழங்கிய செய்தியைக் கல்வெட்டு கூறுகிறது. இது திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத் தைச் சேர்ந்த சிற்றூர்களில் ஒன்றாகும். திருபுவனையில் உள்ள முதலாம் இராசேந்திர சோழனின் 6ஆவது ஆண்டு (கி. பி. 1018) கல்வெட்டிலும் இவ்வூரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.[3]

திருபுவனைக் கல்வெட்டுகளில் திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த இருபத்தைந்து சேரி கள் குறிக்கப் பெற்றுள்ளமை கருதத்தக்கது.

விஷ்ணுச்சேரி என்பது எந்த ஊர் என்பதை இக் காலத்தில் அறிந்து கொள்ள இயலவில்லை.

---

1 திருபுவனை, கல்வெட்டு எண்: 8
புலவர் சு. குப்புசாமி

2 கல்வெட்டு எண் : 4

3 திருபுவனை கல்வெட்டு எண் : 2
புலவர் சு. குப்புசாமி

## இன்னும் சில ஊர்கள்

மேற்கூறிய ஊர்களேயன்றி வேறு சில ஊர்களின் பெயர்களும் வில்லியனூர்ச் சாசனங்களில் இடம் பெற்றுள்ளன.

இராயவேலூர்
உம்பபுரம்
மேழியனூர்
கழனிவாயில்
காஞ்சிபுரம்
கோட்டூர்
செங்கழுநீர்ப் பள்ளம்
சேந்த கோணம்பட்டு
தத்தனூர்
திருவாய்மூர்
திருமங்கலம்
திருவக்கரை
நந்தி மங்கலம்
நென்மலிப்பாக்கம்[1]
பனங்காடு[2]
புதூர்
பூத்துறை
பூண்டி
பெருமங்கலம்

---

1 நென்மலிப்பாக்கம் என்னும் ஊரை நிருபதுங்கவர்மனின் வாகூர்ச் செப்பேடும் குறிப்பிடுகிறது. Epigraphia Indica vol. XVIII, No 2. & பல்லவனும் பராந்தகனும் (1972), பக். 93. புலவர் சு. குப்புசாமி

2 இக் காலத்தில் இவ்வூர் இதே பெயருடன் வில்லியனூருக்கு வடக்கே 3 கி.மீ தொலைவில் உள்ளது.

பொன்பற்றி[1]
மருதமங்கலம்
மருதமுடையான்பட்டு
வண்ணாரக் கொல்லை
வல்லூர்
விருதராச பயங்கர நல்லூர்

ஆகிய ஊர்கள் அவ்வாறு இடம்பெற்ற ஊர்களாகும்.

இவற்றுள் சில ஊர்களைத் தவிர்த்து பெரும்பான்மை யான ஊர்கள் இக் காலத்தில், எப்பெயருடன் எங்கு உள்ளன என்ற செய்திகளை அறிந்து கொள்ள இயல வில்லை.

1 செஞ்சிக்கு அண்மையில் பொன்பேத்தி என்னும் பெயரு டன் இந்த ஊர் இன்றும் உள்ளது.

# நிலங்களும் அளவைகளும்

வில்லியநல்லூர்க் கல்வெட்டுகள் குறிப்பிடும் நிலங்கள், அவற்றின் பெயர்கள், அளவைகள் உள்ளிட்ட பல செய்திகளை அறிந்து கொள்வது பயனுடையதாகும். ஆதலின், அவை பற்றி இப்பகுதியில் ஆராய்ந்து தரப் படுகின்றன.

## நிலப் பெயர்கள்

நன்செய், புன்செய் என்னும் இருபெரும் பிரிவுகளில் பெரும்பான்மையான நிலங்கள் அடங்கிவிடுகின்றன. ஆயினும், சிற்சில நிலப்பகுதிகள் சிறப்புப் பெயராலும் குறிக்கப் பெற்றுள்ளன.

நன்செய் என்பது நீர்நிலம் என்றும், புன்செய் என்பது கொல்லை என்றும், குறிக்கப் பெற்றுள்ளன. பள்ளமான நிலங்கள் பள்ளம், குழி, குண்டில், பற்று எனவும் பெயர் பெற்றிருந்தன.

அச்சம்பள்ளம்
அரம்பள்ளம்
அரசங்குழி
இடைநின்றான் குண்டில்
மிட்டான் குண்டில்
குற்றேத்தப் பற்று
தோட்டப் பற்று
படைப்பற்று
பள்ளங்குடிப்பற்று

ஆகிய அழகிய பெயர்கள் கல்வெட்டுகளில் காணப் பெறுகின்றன.

## கட்டளை

ஊர்ச் சபைக்கு உரிய பொது நிலங்கள் ஊர்க் கட்டளை, வில்லியனூர்க் கட்டளை என அழைக்கப் பெற்றன. சில இடங்களில் கட்டளை என்பது, நிலத்தின் பொதுவான பெயராகவும் வந்துள்ளது.

## திருத்தும் தூறும்

பயிரேற்றாமல் கிடந்த நிலம் பண்படுத்தப்பட்டு விளை நிலமாக மாறும் பொழுது அது திருத்து என்றும், செடி, கொடிகள் நிறைந்து புதர்கள் மண்டியுள்ள நிலப் பகுதி தூறு என்றும், மரங்கள் நிறைந்த பகுதி **தோப்பு** என்றும் குறிக்கப் பெற்றுள்ளன.

இவற்றுள் குலோத்துங்க சோழ மாராயன் என்னும் அதிகாரி ஒருவன் திருத்திய நிலம், அவன் பெயராலேயே **'குலோத்துங்க சோழ மாராயன் திருத்து'** என்னும் பெயருடன் விளங்கியது.[1]

---

1 கல்வெட்டு எண் 12

சில நிலங்கள் **கடம்பன் காணி, குருவிமூலை, விழியக் கிடைப்பு** எனவும் பெயர் பெற்றிருந்தன.

## நத்தம்

மக்கள் குடியிருப்பதற்குப் பயன்படும் மேட்டு நிலப் பகுதி, பொதுவாக நத்தம் என்னும் பெயருடன் திகழ்ந்தது. இவற்றுள் கோயிலைச் சேர்ந்த நத்தம் **கோயில் நத்தம்** என்றும், ஊரைச் சேர்ந்த நத்தம் **ஊர் நத்தம்** என்றும் கூறப் பெற்றன.

நத்தப் பகுதியின் குடியிருப்புக்கு விதிக்கப்பட்ட வரி, **நத்தம்** என்றே பெயர் பெற்றிருந்தது. அறுவடைக் காலங்களில் பயன்படுத்தப் பெறும் நிலப்பகுதி, 'கட்டு அடித்தார்' களம் என்னும் பெயருடன் திகழ்ந்தது.

## அளவைகள்

இந்நிலங்கள் கண்ணாறு, சதுரம், குழி, காணி, தடி, மா, வேலி, எனப் பிரிக்கப்பட்டிருந்தன.

பாசன வாய்க்கால், **கண்ணாறு** எனப்பட்டது. இரு கண்ணாறுகளுக்கு இடைப்பட்ட பகுதி பல **சதுரங்** களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

முதலாம் கண்ணாறு
இரண்டாம் கண்ணாறு
முதலாம் சதுரம்
இரண்டாம் சதுரம்

என இவை எண்ணிட்டு அடையாளம் காட்டப் பட்டன.

ஒவ்வொரு சதுரமும் மா என்னும் பெயருடைய அளவாகப் பிரிக்கப்பட்டன.

'காணி' அல்லது 'தடி' என்பவை மாவின் உட் பிரிவாகும்.

ஒவ்வொரு காணியும் 'குழி' என்னும் அளவைக் கொண்டன.

இருபதுமா கொண்டது ஒரு 'வேலி'யாகும் இவற்றின் எல்லைகளை வரையறுப்பதற்கு,

நாட்டு அளவு கோல்
18ஆம் அளவு கோல்
பண்டார அளவுகோல்

என்னும் பெருயடைய அளவுகோல்களைப் பயன் படுத்தினர். இவ்வாறு அளந்து கணக்கிடப்பட்ட பின்னர் இந்நிலங்கள் தரவாரியாகப் பகுத்து, அத் தரத் திற்கு ஏற்ப வரிகள் விதிக்கப்பட்டன.

தரமற்ற நிலங்கள் 'தரமிலி' என்று வரி விதிக்கப் பெறாமல் ஒதுக்கப் பெற்றன. இவ்வாறு ஒதுக்கப் பெற்ற நிலம் ஏரியின் உட்பகுதி நிலமாகவே இருந்தது.

### பாசனங்கள்

பாசனங்களில் முக்கிய இடம் வகித்தது ஏரி. ஏரியி லிருந்து வாய்க்கால்கள் வாயிலாகப் பாசனத்துக்கு நீர் சென்றது.

**பரியனேரி**

வில்லியனூர்க் கல்வெட்டுகளில் சிறப்பாகப் **பரியன் ஏரி** என்னும் பெயருடைய ஏரி ஒன்று குறிக்கப்பெறுகின்றது.[1]

வில்லியனூருக்கு வடமேற்கே ஏறத்தாழ 5 கி.மீ. தொலைவில் இக் காலத்தில் 'ஊசுட்டேரி' என்னும் பெயருடன் விளங்கும் பெரிய ஏரியே, இக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்ற 'பரியன் ஏரி' என்பதாகும்.

வில்லியனூர் நிலங்கள் பாசன நீர் பெறுவதற்கு, ஊசுடு ஏரியைத் தவிர வேறு ஏரி எதுவும் இல்லை என்பது கருதத்தக்கது. ஆதலின், பரியன் ஏரி என்பதே இதன் பழம்பெயர் ஆகும்.

பரியனேரியை ஒழுகரை ஏரி என்று கோப்பெருஞ் சிங்கன் காலத்துத் திருவக்கரைக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது.[2]

ஐதராபாத் நிஜாம் பதவிக்குப் போட்டியிட்ட நாசர் ஜங் என்பவர், தமது படையுடன் இவ் ஏரிக்கரையில் வந்து தங்கியதாகக் 'கர்நாடக ராசாக்கள் சரிதம்' என்னும் நூல் கூறுகிறது. அந்நூலில் இது ஊசுத்து ஏரி என்று குறிக்கப் பெற்றுள்ளது.[3]

---

1 கல்வெட்டு எண்கள்: 12, 13 & 33

2 S.I.I., Vol. xii, No. 46

3 கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள், பக்கம் 164, புலவர் சு. குப்புசாமி

பரியன் ஏரி என்றும் ஒழுகரை ஏரி என்றும் அழைக்கப் பெற்ற இப் பழமையான ஏரி, இக்காலத்தில் ஊசுடு ஏரி என்று அழைக்கப் பெறுகிறது. இது மிகப் பிற்காலத்து வழக்கேயாகும்.

பரியன்ஏரியின் தென்கிழக்கு மூலையிலுள்ள நிலப் பகுதிகள், இராசநாராயணச் சம்புவராயன் கல்வெட்டுகளில் 'பரியன்ஏரி எதிர்வாய் வடகூறு' என்னும் பெயருடன் குறிக்கப் பெற்றுள்ளன. இப்பகுதி நிலங்கள், தடி என்னும் அளவால் பிரிக்கப்பட்டு, அவற்றின் ஒரு பகுதி 'மீட்டான் குண்டில்' என்றும், மற்றொரு பகுதி 'இடைநின்றான் குண்டில்' என்றும் அழைக்கப்பெற்றன.

### வாய்க்கால்கள்

பரியனேரியினின்றும் பிரிந்து சென்ற வாய்க்கால்கள் கண்ணாறுகளாகக் கருதப்பட்டன. இத்தகைய வாய்க்கால்கள்,

புன்னை ஊறுகால்
கங்கை கொண்ட சோழ வாய்க்கால்
குலோத்துங்க சோழ வாய்க்கால்

எனப் பெயர் பெற்றிருந்தன.

இரு கரைகளிலும் புன்னை மரங்கள் நிறைந்திருந்த காரணம் பற்றி இவற்றுள் ஒன்று "புன்னை ஊறுகால்" என்று பெயர் பெற்றதாகக் கொள்ளலாம். கங்கை கொண்ட சோழன் என்னும் பெயர், முதலாம் இராசேந்திர சோழனின் சிறப்புப் பெயராகும். கங்கை

கொண்ட சோழன் வாய்க்கால் என்பது அம்மன்னன் பெயரால் குறிக்கப்பெற்ற வாய்க்காலாகும். குலோத் துங்க சோழன் வாய்க்கால் என்பது முதலாம் குலோத் துங்க சோழன் பெயரால் திகழ்ந்த வாய்க்காலாகும்.

## வழிகள்

நிலப் பகுதிகளின் இடையில் சென்ற சில வழிகள் 'சோழ குலசுந்தரி வதி' என்றும், 'ஸ்ரீ தேவவதி' என்றும் பெயர் பெற்றிருந்தன.

# வரிகளும் வகைகளும்

## வரிகளாகப் பெற்றவை

அக் காலத்திய குடிமக்கள் அரசாங்கத்துக்கும் ஊர்ச்சபைக்கும் பல்வேறு வகையான வரிகளைச் செலுத்தி வந்தனர். வில்லியனூர்க் கல்வெட்டுகள் இத் தகைய வரிகளில் சிலவற்றைத் தெளிவாக விளக்கு கின்றன. இவ்வரிகள் நெல்லாகவும், காசாகவும், பொன்னாகவும் வசூலிக்கப் பெற்றன.

குடிமை
ஆயம்
கடமை

எனவரும் பெயர்கள் பொதுவாக வரியைக் குறிக்கும் பொதுப் பெயர்களாகும்.

பெயர்களைக் கொண்டு சிலவகை வரிகளைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. வேறு

சிலவற்றைத் தெளிவாக அறிந்து கொள்ள தக்க சான்று களில்லை. காசாக வசூலிக்கப்பட்ட வரி காசாயம், காசு கடமை எனவும், பொன்னாக வசூலிக்கப்பட்டது பொன்வரி என்றும் கூறப்பட்டன.

## வித விதமான வரிகள்

நிலங்கள் மீது விதிக்கப்பட்ட வரி புரவு வரியாகும்.[1] இதுவே வரிகளில் முக்கிய இடம் பெற்றது.

புஞ்சை நிலங்களுக்கும், நஞ்சை நிலங்களுக்கும் விதிக்கப்பட்ட வரிகளில் ஏற்றத் தாழ்வு உண்டு.

'புஞ்சைக் கடமை' என்னும் பெயர் புன்செய் நில வரியைக் குறிக்கும். கடமை என்பது நிலவரியையும், குடிமை என்பது நிலவரியல்லாத எனைய வரிகளையும் குறிக்கும் சொற்களாகும்.

## தொழில் வரிகள்

ஏரி முதலான நீர் நிலைகளில் மீன் பிடிப்பதற்கு 'ஏரி மீன் விலை' என்னும் வரி வசூலிக்கப்பட்டது. ஓழுகு நீர்ப் பாட்டம் என்பதும் இதுவாகவே இருத்தல் வேண்டும்.

செக்காட்டி எண்ணெய் எடுக்கும் தொழில் மீது செக்குக் கடமை என்னும் வரி விதிக்கப்பட்டது. இது செக்கிறை என்றும் கூறப் பெறுவது உண்டு. தச்சுத் தொழிலின் மீது விதிக்கப்பட்ட வரி, தச்சுத் தேவை என்னும் வரிவாகும்.

---

1 கல்வெட்டு எண்கள் : 10 & 20

நெசவுத் தொழிலுக்குத் தறிக் கடமை (தறிஇறை) என்னும் வரியும், பொன்வேலை செய்வாரிடம் தட்டொலிப்பாட்டம் என்னும் வரியும் விதிக்கப்பட்டன.

### வீட்டு வரி

வீடுகளுக்கும் வரி விதிக்கப்பட்டது. அவ்வாறு விதிக்கும் பொழுது வீட்டின் தன்மை, அளவு, ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டன. இவ் வரியை,

வாசல்வரி
வாசல் வினியோகம்
வாசல் ஒட்டு
மனை வரி

என்னும் பெயர்கள் குறிக்கின்றன.

### பாதுகாப்பு வரி

ஊர், நாடு, ஆகியவற்றின் பாதுகாப்பின் பொருட்டு விதிக்கப்பட்ட வரி முறையே,

ஊர் விநியோகம்
நாட்டு விநியோகம்

எனக் கூறப்பட்டன. இவற்றையே,

தரை வினியோகம்
பாடி காவல்

என்றும் கூறுவதுண்டு.

### கால்நடை வரி

ஆடு, மாடுகளை மேய்க்கும் இடையர்கள் மீது விதிக்கும் வரி இடைவரி ஆகும். ஆடு, மாடுகளுக்கும்

தனித்தனியாக வரிகள் விதிக்கப்பட்டன. அவ்வரி பொதுவாக, வால்வரி என்று குறிக்கப் பெற்றது.

இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகளில் வால் வரியைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு மிகச் சிலவே யாகும். அவற்றுள்ளும் வில்லியனூர்க் கல்வெட்டு மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது.

இரண்டாம் அரியன உடையார் காலத்தில் (கி.பி. 1381) வரையப்பெற்ற கல்வெட்டு ஒன்றில், வால்வரி பற்றிய விளக்கம் கிடைக்கிறது. பசுவுக்கு அரைப் பணமும், எருமைக்கு முக்கால் பணமும், எருத்துக்கும் கிடாவுக்கும் கால் டணமும், ஆட்டுக்கு அரைக்கால் பணமும் வால்வரி விதிக்கப் பெற்றதாக அக் கல்வெட்டு கூறுகிறது.[1] இதே வரி,

ஆட்டு வரி
பசு வரி
நல்லெருது
நற்பசு
நற்கிடா

எனவும் கூறப் பெறுவது உண்டு.

## நிர்வாக வரிகள்

ஆனைச்சாலை
குதிரைப்பந்தி
கணக்கு நியோகம்
சோடி
சந்துவிக்ரகம்

1 கல்வெட்டு எண் 23

முதலான வரிகள் நிர்வாக அலுவல் பொருட்டு விதிக்கப்பட்டவையாகும்.

பிராமணர்களுக்கு உரிய பிரமதேய ஊர்களில் சபையின் நிர்வாகத்திற்காக விதிக்கப்பட்ட வரி 'பிரம்மதேயக் கடமை' எனப்பட்டது.

### மனிதர்கள் மீதும் வரி

சில வகை இனமக்கள் மீதும் வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. அவை, இனவரி, தலைவரி, ஆள்வரி எனக் கூறப் பெறுகின்றன.

மேற்கூறிய வரிகளேயல்லாமல்,

அரிசிக்காணம்
ஆள் தேவை
கடைக் கூற்றிலக்கை
கீற்று வரி
கூற்றிலக்கை
சிகாரியக் கொற்றிலக்கை
போகக் கடமை
போகாண்மை
மேற்கடம்வரி
வலிக் கடைப்பு

முதலான வரிகளின் பெயர்களும், வில்லியனூர்க் கல்வெட்டுகளில் காணப்பெறுகின்றன.

### ஊர்க்கணக்கு

நில அளவுகள், அவற்றின் தரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் விதிக்கப்படும் வரிவகைகள் பற்றிய

கணக்குகள் முறையாக வைக்கப்பட்டன. அச் செயலைச் செய்து வந்த அரசு அலுவலர் 'ஊர்க்கணக்கு' என்று பெயர் பெற்றிருந்தனர்.

சோழர் காலத்தில் 'ஒழுகரை உடையான்' என்பவனும், அரியனை உடையார் காலத்தில் 'ஒழுகரை உடையார்' என்பவரும் ஊர்க் கணக்கர்களாக இருந்துள்ளனர். மேற்காட்டிய வரிகளில் பல இக்காலத்தும் வழக்கிலுள்ளன.

அக்கால ஆட்சி முறைகளை எண்ணினால் மலைப்பும் வியப்பும் முனைப்பாகத் தோன்றுகிறது.

பல நூற்றாண்டுகள் கடந்த பின்பும்கூட அவை மறைந்து போகாமல் நிலைத்து வருவதே நம் முன்னோர் தம் சீரிய சிந்தனைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

# திருக்காமீச்சுரர்த் திருக்கோயில்

### செவிவழிச் செய்தி

முற்காலத்தில் வில்லியனூர்ப் பகுதி காடாக இருந்தது. காட்டுப் பகுதிக்குக் கிழக்கே ஒழுகரை யென்னும் ஊர் உண்டு. அந்த ஊர் மக்கள், செல்வச் செழிப்பு மிக்கவர்கள். அந்த ஊரின் கால்நடைகள் காட்டுக்குச் சென்று மேய்ந்துவரும் பழக்கமுள்ளவை.

ஒழுகரை நிலக்கிழார் ஒருவருக்குச் சொந்தமான கரிய நிறப்பசுவொன்று, அக்காட்டுக்குச் சென்று மேய்வது வழக்கம். மாலையில் திரும்பி வரும்பொழுது அப் பசுவின் மடி பால் இன்றி வற்றிக் காணப்படுவது வழக்கமாக இருந்தது.

வழக்கம்போல் அப்பசு காட்டுக்குச் சென்றது. மாலை நேரம் வந்தவுடன் அது ஒரு புதருக்குள் சென்று

தன் மடியினின்றும் பால் சொரிவதை ஆநிரை மேய்ப்பான் கண்டான். அவ்விடத்தை ஆராய்ந்த போது அங்குச் சிவலிங்கம் ஒன்று இருப்பதைக் கண்டு, ஊர் மக்களுக்குச் செய்தியைப் புலப்படுத்தினான். ஒழுகரை ஊரார் அவ் இறைவனுக்குக் கோயில் எடுப்பித்து வழிபட்டு வந்தனர். அவரே வில்லியனூரில் உள்ள திருக்காமீச்சுரர் ஆவார்.

இது இத்திருக் கோயில் தோற்றம் பற்றி வழங்கி வருகின்ற செவிவழிச் செய்தியாகும்.[1]

## தலபுராணக் கூற்று

புராணக் கதையாகக் கூறப்படுவதையும் இங்கே அறியலாம்.

கமலாபுரி அரசனான தருமபாலச் சோழன் என்னும் அரசனொருவன், இவ் இறைவனை வழிபட்டு, தனக்குற்ற வெண்குட்ட நோயினின்றும் விடுபட்டு, இவ் இறைவனுக்கு ஆலயம் எடுப்பித்து, தேர் இயற்றி, கோயிற் பணியாளரை நியமித்து, ஊர் உண்டாக்கி, சிவப் பணி செய்தான் என்று வில்லைப் புராணத்துத் தருமபாலச் சருக்கம் கூறுகிறது.

இப் புராணத்தில் காமீசம், வில்லமாநகரம் ஆகிய பெயர்கள் வில்லியனூருக்கு உரிய பெயர்களாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

காமீசர்
நரசிங்க நாதர்
வைத்திய நாதர்
நடு அறிவார்

1. Census of India, 1961, Vol. XV Part, VI Page. 68.

முதலான பெயர்கள் இறைவனின் பெயர்களாகக் கூறப்பெற்றுள்ளன.

குயிலம்மை மாலை என்னும் நூல், திருக்காமீச்சுரத்திலுள்ள இறைவியை 'வில்வ வனத்துக் குயிலம்மை' என்று கூறுகிறது வில்லைப் புராணத்தின் காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இயற்றப் பெற்ற புராணம் என்று கருதப்படுகிறது.[1]

## கல்வெட்டுகளில் இறைவன்

சோழர் காலத்திலும், கோப்பெருஞ் சிங்கன் காலத்திலும், பாண்டியர் காலத்திலும், சம்புவராயர் காலத்திலும் இவ் இறைவன் திருக்காமீச்சுரமுடையார் என்றும் திருக்காமீச்சுரமுடைய நாயனார் என்றும் அழைக்கப் பெற்றுள்ளார்.

விசயநகரர் ஆட்சிக் காலங்களில் திருக்காமீச்சுரமுடைய நாயனார், சுவாமி திருக்காமியப்பர், திருக்காமீசுவரமுடைய சுவாமியார் என்னும் பெயர்களாகக் காணப் பெறுகின்றன.

பொதுவாக இங்குள்ள கல்வெட்டுகளில் இறைவன் பெயர் 'திருக்காமீச்சுரர்' என்றும், கோயிலின் பெயர் 'திருக்காமீச்சுரம்' என்றும் அழைக்கப் பெறுவதைக் காண்கிறோம்,

## சந்திகளும் விழாக்களும்

திருக்காமீச்சுரத்தில் நாள் வழிபாடுகளும், திங்கள் வழிபாடுகளும் ஆண்டுப் பெருவிழாக்களும் தடையின்றி

---

1 கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள் (1974) பக்கம் 123. புலவர் சு. கும்புசாமி.

நடைபெற்று வந்தமையை, இங்குள்ள சாசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

நாள்தோறும் நடைபெறுகின்ற சந்திக் காலங்களில் சந்தி விளக்குகள் எரிக்கப்பட்டன.

இறைவன் திருமுன்பு எண்ணற்ற நந்தா விளக்குகள் ஒளியூட்டின. இவ் விளக்குகளுக்கு நெய்யினையே பயன்படுத்தினார்கள்.

## குலசேகரமாவலி வாணராயர் சந்தி

இப் பகுதியில் ஆட்சி செய்து கொண்டிருந்த பராக்கிரம பாண்டியனுக்கு, குலசேகர மாவலி வாணராயர் என்பவர் அம்மான் முறையினர் ஆவார்.

இவர் 'குலசேகரமாவலி வாணராயர்' என்னும் தன்னுடைய பெயரால் இக் கோயிலில் கி.பி. 1841-ஆம் ஆண்டில் சந்தி ஒன்றைத் தோற்றுவித்தார்.

இதற்குத் தேவையான அமுதுபடி, சாத்துப்படி, உள்ளிட்ட தேவைகளுக்கு 26 மாக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரை அளவுள்ள நிலங்களை இக் கோயிலுக்கு இறையிலியாக வழங்கியுள்ளார். இச் செய்தியைப் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டு ஒன்றால் அறிகிறோம்.[1]

இக் கோயிலுக்கு ஆடுகளும், மாடுகளுங்கூட உடைமைகளாக இருந்தன. அறவோர்கள் தம்பெயரால்

---

1 கல்வெட்டு எண் 10

திறுவிய பல்வேறு கட்டளைகளுக்கு இவற்றை வழங்கியுள்ளனர்.[1]

பூசைத் திருப்பணிகள் தாழ்வற நடக்கும் பொருட்டு இரண்டாம் அரியன(ண) உடையார் ஆட்சிக் காலத்தில் சோடி, சூல்வரி, முதலான வரிகள் வாயிலாக வரும் 60 பணம் வரித்தொகை முழுதும் இப் பணிக்குக் கொடையாக வழங்கப் பெற்றுள்ளது. நிலமேயன்றி இவ்வாறு வரிப்பொருளையும் தானமாக வழங்குகின்ற வழக்கமும் அக் காலத்தில் உண்டு என்பதற்கு இங்குள்ள சாவண தேவராயரின் சாசனத்தைச் சான்றாகக் கூறலாம்.[2]

## திருமுழுக்குத் திருநாள்

இரண்டாம் அரியன உடையார் ஆட்சிக் காலத்தில், பங்குனி மாதந்தோறும் திருக்காமீச்சுரமுடைய நாயனாரைக் கடலுக்கு எழுந்தருளச் செய்து திருமுழுக்குத் திருநாள் கொண்டாடினர்.

இவ்விழாவிற்கு வில்லியனூரில் 10 மா அளவுள்ள நிலங்கள் இறையிலி தேவதானமாக வழங்கப்பெற்றன.

இதே திருநாளுக்கு வால்வரியின் மூலம் வரும் பெருந்தொகை முழுவதும் முதற்பொருளாக வழங்கப்பெற்றது. கி.பி. 1379, 1381 ஆகிய ஆண்டுகளில் வரையப் பெற்ற இரண்டாம் அரியன உடையார் காலத்திய கல்வெட்டுகளால் இதனை அறியலாம்.[3]

---

1 கல்வெட்டு எண் 8

2 கல்வெட்டு எண் 25

3 கல்வெட்டு எண் 21 & 23

## ஆண்டுப் பெருவிழா

ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் திருக்காமீச்சுர முடைய நாயானாருக்கு ஆண்டுப் பெருவிழா நடத்தினர். வரிசையாக வரும் எல்லா விழாக்களையும் சுற்றுப் புறங் களில் உள்ள ஒவ்வொரு சிற்றூர் மக்களும் தத்தமது பொறுப்பில் நடத்தி வந்தமையைப் பாரக்கிரம பாண்டி யனின் கல்வெட்டுத் தெளிவுபடுத்துகிறது.

இக்கல்வெட்டின் தொடக்கப் பகுதி முழுவதும் புதிய கட்டடத்தில் மறைந்து விட்டமையால், அதன் எஞ்சிய பகுதியைக் கொண்டு ஆண்டுப் பெருவிழாவைப் பற்றிய கீழ்க்காணும் செய்திகளை அறிந்து கொள்ளலாம்.

ஆண்டு விழாத் தொடக்கமான திருக்கொடித் திருநாளை பிரம்பை என்னும் ஊரைச் சேர்ந்த மக்கள் நடத்தினர்.

இரண்டாந் திருநாளை ஒழுகரையிலிருந்த பனைப் பாங்கிழார்கள் நடத்தினர்.

நான்காம் திருநாளை பாக்கமுடையான்பட்டு என்னும் ஊர் மக்கள் நடத்தினர்.

ஐந்தாம் திருநாளில் திருக்காமீச்சுரமுடையார்க்குத் திருச்சாந்து சார்த்தி ஊரில் எழுந்தருளச் செய்தனர்.

ஏழாந்திருநாளை, பள்ளற்றூர் என்னும் ஊர் மக்கள் செய்தனர்.

எட்டாந் திருநாள் வில்லியனூர் மக்களால் கொண் டாடப் பெற்றது.

இவ்வாறு நடைபெற்ற விழாக்களில் பனைப்பாங் கிழார், பூங்குன்றமுடையார் சாமுதாயம் செய்வார். ஆகியோர் பெரும் பங்கு கொண்டிருந்தனர் என்பதைப் பராக்கிரம பாண்டியன் காலத்துக் கல்வெட்டு (கி. பி. 1335-1352) உணர்த்துகிறது.[1]

## திருத்தேர்

வில்லியனூர்த் தேர்த் திருவிழா இம் மாநிலத் திலேயே பெரும் புகழ் பெற்ற பெருவிழாவாகும். இங் குள்ள திருத்தேர் தென்னிந்தியாவிலுள்ள மிக உயரமான திருத்தேர்களில் ஒன்றாகும்.

பிரஞ்சுக்காரர் ஆளுகையின் போது இத்தேரின் பழமையான அச்சு நீக்கப்பட்டு, இரும்பாலான அச்சு பொருத்தப்பட்டது.[2] இத் திருத்தேரைப்பற்றிக் குறிப் பிடும் கல்வெட்டே இக்கோயிலில் காணப்பெறும் கல் வெட்டுகளில் மிகவும் பழமையானதாகும். அது முதலாம் குலோத்துங்க சோழனின் பத்தாவது ஆட்சி யாண்டில் (கி.பி. 1080) வரையப் பெற்றது.[3]

இது நேரிசை வெண்பா வடிவில் அமைந்த கல் வெட்டுப் பாடலாகும். புதுவை மாநிலத்தில் பதிவு செய்யப் பெற்ற கல்வெட்டுகளில் இது ஒன்றே பாடல் வடிவினது.

---

1 கல்வெட்டு எண் 11

2 இது போன்று இரும்பு அச்சு பொருத்தப்பட்ட தேர் தமிழகத்தில் இல்லை என்று கூறுவர்.

3 கல்வெட்டு எண் 1

திருக்குளத்தின் தென்புறப் படிக் கல்லில் அமைந்துள்ள இப்பாடல், குலோத்துங்க சோழன் முத்துக்கள் பதித்த குதிரைகளைத் திருத்தேருக்கு வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது.

ஆதலின், வில்லியனூர்ச் சிவன் கோயில் திருத்தேர் இன்றைக்கு 900 ஆண்டுகளுக்கும் முற்பட்ட பழமையுடையதாகும். ஆயினும், காலப் போக்கில் இத்திருத்தேரின் பல அமைப்புகள் மாற்றமடைந்து, புதிய உருவத்தைப் பெற்றுள்ளது.

குறிப்பாக இது கி.பி. 1889ஆவது ஆண்டிலும், 1935ஆவது ஆண்டிலும் பழுது பார்க்கப்பட்டமை கருதத் தக்கது.

## வேட்டைத் திருநாள்

இராசநாராயணச் சம்புவராய மன்னன் காலத்திய (கி. பி. 1350) கல்வெட்டொன்றில், இக்கோயிலில் நடைபெற்று வந்த வேட்டைத் திருநாளைப் பற்றிய செய்தி ஒன்று காணப்பெறுகிறது. இவ்விழாவிற்கும் பிற தேவைகளுக்குமாக 12¾ வேலி நிலங்கள் தானமாக வழங்கப் பெற்றன.[1]

## வெளிநாட்டு மணி

வில்லியனூர்ச் சிவன் கோயிலில் உள்ள கண்டாமணி, 1812ஆவது ஆண்டில் பிரான்சு நாட்டிலுள்ள புரோக்ஸ் போர்ன்பரி (Brox Borne Bury) என்னும் ஊரிலிருந்து கொண்டு வரப்பட்டது.

---

1 கல்வெட்டு எண் 14

## அறக்கட்டளைகள்

இக்கோயிலுக்கு அரசர்களாலும், அதிகாரிகளாலும், தனியாராலும், பல்வேறு காலங்களில் நிலம், காசு, உள்ளிட்ட பல கொடைகள் வழங்கப் பெற்றுள்ளன. நிலதானம்பற்றிக் கூறுகின்ற கல்வெட்டுகளில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 13ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி. பி. 1191) மிக மிக முக்கியமான ஒன்றாகும்.[1]

இம்மன்னன் காலத்தில் நாற்பத்தொன்பது வேலி நன்செய் நிலங்களும், இருபது வேலி புன்செய் நிலங்களும் வில்லியனூர்த் திருக்காமீச்சுரமுடையார்க்குச் சொந்தமாக இருந்தமையை இக்கல்வெட்டுப் புலப்படுத்துகிறது.

இவற்றுள் நந்தாவனம், திருக்குளம், திருமடை விளாகம் ஆகியவை ஐந்து வேலியும், கோயிலைச் சேர்ந்த நத்தம், நத்தத்தைச் சேர்ந்த புன்செய் நிலம் ஆகியவை ஐந்து வேலியும் ஆக இவையனைத்தும் 10 வேலி பரப்பளவு கொண்டவை என்பதையும் மேற் கூறிய கல்வெட்டால் அறிந்து கொள்ள முடியும்.

பராக்கிரம பாண்டியனின் 6ஆவது ஆண்டில் (கி.பி. 1341) ஆண்டொன்றுக்கு ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று ஐந்து கலனே தூணிப்பதக்கு நானாழி நெல் வருவாய் தரக்கூடிய, 26 மாக்காணி அரைக்காணி முந்திரிகை கீழரை அளவுள்ள நிலங்கள் இக் கோயிலுக்குச் சொந்தமாக்கப்பட்டன.

---

1 கல்வெட்டு எண் 5 & S. I. I. vol. VII, No. 816

இந் நிலங்கள் வில்லியனூரிலும் பொறையூரிலும் இருந்தன என்று கல்வெட்டின் வாயிலாக அடையாளம் காண்கிறோம்.

மோசு குளத்தூரைச் சேர்ந்த கருப்புழான் அரையன் திருமுண்ட மழகியன் என்று அழைக்கப்பெறும் 'வளவ தரையன்' என்பவனும், மோசுகுளத்தூர் கருப்புழான் அரையன் மணிகண்டன் என்று அழைக்கப்பெறும் பல்லவராயன் என்பவனும் இராச நாராயண சம்புவ ராயன் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த அறவோர்களாவர்.

இவ்விரு அறவோரும் திருக்காமீச்சுரமுடைய நாய னார்க்கு நந்தாவிளக்கு எரிச்சும் பொருட்டுப், 'பரிய னேரி எதிர்வாய் வடகூறு' என்னுமிடத்தில், 'குலோத் துங்க சோழ மாராயன் திருத்து' என்னும் பெயருடைய நிலத்தில் 335 குழி நன்செய் நிலங்களையும், அதே இடத்தில்,

மீட்டான் குண்டில்
இடை நின்றான் குண்டில்

என்னும் பெயருடைய நிலங்களில், 500 குழி நன் செய் நிலங்களையும் விளக்குத் தானமாக வழங்கியுள்ள னர்.

இச் செய்திகளை இராச நாராயணச் சம்புவராயன் காலத்துக் கல்வெட்டுகளால் தெரிந்து கொள்ளலாம்.[1]

பழங்காலத்தில் இக் கோயிலுக்குச் சொந்தமாக இருந்த சில நிலங்களின் அளவுகளைப் புன்செய் 12¾

---

1 கல்வெட்டு எண் 12 & 13.

வேலியென்றும், நன்செய் 9...மா வேலியென்றும் சம்பு வராயனின் இன்னொரு கல்வெட்டு உறுதி செய்கிறது.[1]

வில்லியனூரில் இக்கோயிலுக்கு வழங்கப் பெற்ற 12 மா அளவுள்ள நிலக்கொடைபற்றி, சாளுவமங்கு தேவன் காலத்துக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[2] பங்குனித் திங்களில் திருக்காமீச்சுரமுடையார் அலை கடலில் நீராடும் திருவிழாவுக்கென்று வில்லியனூரில் பண்டார அளவுகோல் என்னும் கோலால் 10 மா அளவுள்ள நிலங்கள் கொடை வழங்கப் பெற்றுள்ளன.

உழந்தையைச் சேர்ந்த வாணியன் அரையன் மழைப் பிள்ளை என்னும் அறவோன், தனியார் ஒருவரிடம் 533 குழி அளவுள்ள நிலங்களை விலைக்கு வாங்கி, அவற்றை விளக்குத் தானமாக இச் சிவன் கோயிலுச்கு வழங்கினான். இச் செய்திகளை இரண்டாம் அரியன உடையார் காலத்துக் கல்வெட்டுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.[3]

வண்ணாரக் கொல்லை, புத்திரான்பட்டு, பிறையூர், மருதமுடையான்பட்டு, வண்ணத்தான்பட்டு, செங்கழு நீர்ப்பள்ளம் முதலான பெயர்களையுடைய ஊர்களும் நிலப்பகுதிகளும் விசயநகர வேந்தர் ஆட்சிக் காலங்களில் வில்லியனூர்ச் சிவன் கோயிலுக்குக் கொடையாக வழங்கப் பெற்றன.

இரண்டாம் விருபாட்ச ராயர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1472) இப் பகுதிக்கு மகா மண்டலேசுவரராக

1 கல்வெட்டு எண் 14

2 கல்வெட்டு எண் 20

3 கல்வெட்டு எண்கள் 21, 22

இருந்த சாளுவ நரசிங்கராயரின் பொருட்டு, வண்ணாரக் கொல்லை என்னும் இடம், விசயராயர் என்னும் அதிகாரியினால் இக் கோயிலுக்குக் கொடையளிக்கப் பெற்றது.[1]

கி.பி. 1582 ஆவது ஆண்டில் சறுவப்பையன் என்னும் அதிகாரி, அச்சுத தேவராயருக்கும், இராமர் பட்டர் ஐயனுக்கும் புண்ணியம் உண்டாக வேண்டுமென்று வண்ணாரக் கொல்லை, புத்திரான்பட்டு, பிறையூர், மருதமுடையான்பட்டு ஆகிய ஊர்களில் கோயிலுக்குச் சொந்தமாக இருந்த நிலங்கள்மீது விதிக்கப்பட்ட வரிகள் அனைத்தையும் நீக்கி இறையிலி தேவதானமாக வழங்கினான்.[2]

அதே மன்னன் காலத்தில் பிழைபொறுத்தார் பிள்ளைக்குப் புண்ணியம் உண்டாக வேண்டுமென்று வண்ணத்தான்பட்டு, செங்கழுநீர்ப் பள்ளம் என்னும் பெயருடைய கோயில் நிலங்கள் இறையிலியாக மாற்றப் பட்டன.[3]

இக்கொடைகள் அனைத்தும் கி.பி. 1550 ஆண்டில் வரையப்பெற்ற சதாசிவ தேவராயர் கல்வெட்டிலும் குறிக்கப் பெற்றுள்ளன.[4]

நாள்தோறும் திருக்காமியப்பருக்குத் திருமஞ்சனம் (அபிஷேகம்) செய்ய இரண்டு குடம் ஆற்றுநீர், இரண்டு திருவிளக்குகள், இரண்டு மாலைகள் உள்ளிட்ட தேவை

---

1 கல்வெட்டு எண் 26

2 கல்வெட்டு எண் 27

3 கல்வெட்டு எண் 28

4 கல்வெட்டு எண் 30

களுக்குப் பரியன் ஏரியில் 400 குழி அளவுள்ள நன்செய் நிலங்கள் வில்லியனூர்ப் பெருமானுக்குக் கொடுக்கப் பட்டன. தாயப்பன் என்பவன் புண்ணியம் அடைய வேண்டி இத்தானம் செய்யப் பெற்றதாக, 17-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று கூறுகிறது.[1]

மேற்கூறப்பட்ட நிலங்களின் பெரும் பகுதிகள் காலப்போக்கில் தனியார் உடைமைகளாக மாறிவிட்டன. ஆதலின், அறவோர்கள் இயற்றுவித்த அறச் செயல்கள், கட்டளைகள், இக்காலத்தில் இங்கு நடைபெறவில்லை.

எஞ்சிய நிலவருவாய்கள் நித்த நிவேதனங்களுக்குக் கூடப் போதுமானவையாக இல்லை. வைகாசி விசாகத்தில் நடைபெறும் ஆண்டுப் பெருவிழாகூட பல்வேறு சாதியினர் தத்தமது பொறுப்பில் நடத்திவருகின்றனர்.

பிரெஞ்சுக்காரர் ஆளுகையின்போது ஆண்டு தோறும் 3000 ரூபாய் இக்கோயிலுக்கென்று வழங்கப் பெற்றது. புதுவை மாநிலம் இந்திய அரசோடு இணைந்த பிறகு இத்தொகையும் ஆண்டுதோறும் குறைந்து கொண்டு வருகிறது. இறுதியில் அத்தொகையும் நிறுத் தப்பட்டுவிடலாம் என்றும் கூறப்பெறுகிறது.

---

1 கல்வெட்டு எண் 33

வில்லியனூர்

# கவினுறு கட்டடக்கலை

## திருக்காமீச்சுரம்

வில்லியனூரில் சிவன் கோயில் 3.6 ஏக்கர் நிலப் பரப்பில், கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. திரு உண்ணாழியும், அர்த்த மண்டபமும் சேர்ந்து 10.8 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டுள்ளன.

உண்ணாழியில் இலிங்க வடிவில் எழுந்தருளியுள்ள திருக்காமீச்சுரமுடைய மகாதேவர், 2 அடி உயர முடையவராய்க் காட்சித் தருகிறார்.

இலிங்கத்தில் அமைந்துள்ள பானம், ஆகமத்தில் விதிக்கப்பட்டவாறு புற்றாகவே உள்ளது.

இதன்மீது சாம்பிராணித் தைலம் பூசுகின்ற வழக்கம் இன்றும் உண்டு.

## உண்ணாழியும் முன்மண்டபமும்

திருக்காமீச்சுரத்தின் உண்ணாழியும், அதன் முன் மண்டபமும் இணைந்த பகுதியே இக்கோயிலின் மூலக் கோயிலாகும்.

இக்கோயிலில் கிடைத்த கல்வெட்டுகளில் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டுகளே பழமையானவை. இவற்றுள் ஒன்று பாடலாகவும், ஏனையவை அம்மன்னனின் மெய்க்கீர்த்திகளை உணர்த்தும் சிதைந்த கல்வெட்டுகளாகவும் காணப் பெறுகின்றன.

இக்கல்வெட்டுகள் அனைத்தும் மூலக் கோயிலை விட்டு இடம் மாறி திருக்குளத்திலும், திருச் சுற்றிலும், திருமடைப் பள்ளியிலுமாகக் காணப் பெறுகின்றன.[1]

## கற்றளியின் காலம்

ஆதலின், முதலாம் குலோத்துங்க சோழன் காலத்துக்கு (கி.பி. 1070 - 1125) முன்பே, இக்கோயில் கற்றளியாக இருந்தமை இனிது புலனாகும். எனவே, இது ஏறத்தாழ தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட பழமையான திருக்கோயிலாகும்.

பிற்காலத்தில் இக்கோயில் பழுதடைந்த காரணத்தால் கோப்பெருஞ் சிங்கனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1251), வீதி விடங்கன் திருச்சிற்றம்பல முடையானான நந்தியராயன் என்பவன், இக்கோயிலை மீண்டும் கருங்கல் திருப்பணி செய்துள்ளான்.[2]

---

1 கல்வெட்டு எண்கள் 1-4

2 கல்வெட்டு எண் 9

இவன் பூங்குன்றத்துக் கோட்டூர் கிழான் என்றும் அழைக்கப் பெற்றான். கோப்பெருஞ் சிங்கனின் ஆட்சிக் காலத்தில் இப்பகுதிக்கு அரசு அதிகாரியாக விளங்கிய வனும் இவனே.

இத் திருப்பணி நடைபெற்ற காலத்தில், மூலக் கோயிலில் அமைந்திருந்த முதலாம் குலோத்துங்க சோழ னின் கல்வெட்டுகள் இடம் பெயர்ந்திருக்க வேண்டும். கொடுங்கையின் கீழும் மேலும் இடையிலுமாக அமைந் திருந்த பூதகண வரிசைகள், யாளி வரிமானம், கூடுகள் ஆகியவற்றின் சில பகுதிகள், திருக்குளத்தின் படிகளாக வும், புதிய கோயில்களின் பகுதிகளாகவும் அமைந்து விட்டன.

எனவே, இடைக்காலச் சோழரின் கட்டடக் கலையை இக் காலத்தில் வில்லியனூர்ச் சிவன் கோயிலில் காண் பது அரிதாகி விட்டது. ஆயினும், பழைய கோயிலைச் சேர்ந்த துவாரபாலகர், துவாரபாலகி ஆகியோரின் அழகிய சிற்பங்கள் கிழக்குக் கோபுரத்தின் வாயிலுக்கு இடம் பெயர்ந்துள்ளன. (படங்களில் காண்க.)

## திருக்குளம்

திருக்காமீச்சுரத்தைச் சார்ந்து, நந்தாவனமும், திருக் குளமும், திருமடை விளாகமும் இடம் பெற்றிருந்தன. இவற்றின் மொத்தப் பரப்பளவு ஐந்து வேலி என்று மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்துக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அன்றியும், கோயிலைச் சார்ந்து மக்கள் குடியிருக்கும் நத்தமும், நத்தத்தைச் சேர்ந்த புன் செய் நிலங்களும் ஐந்து வேலி பரப்பளவு கொண்டவை.[1]

1 கல்வெட்டு எண் 5

இக் கல்வெட்டின் வாயிலாக கோயிலுக்குள் அமைந்துள்ள திருக்குளம், மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திலேயே (கி.பி. 1191) இருந்துள்ளமையை அறிகிறோம். ஆயினும், அக்குளத்தின் படிகள் உள்ளிட்ட பகுதிகள் இடிந்து போன பழைய கோயிலின் கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

குளத்தைச் சுற்றியுள்ள திருச்சுற்று மாளிகையில், கீழ்த்திசைத் திருச்சுற்று மாளிகை, கி.பி. 1765 ஆவது ஆண்டில் மடுகரையைச் சேர்ந்த இராமுரெட்டி என்பவரால் அமைக்கப் பெற்றதாகும்.[1]

## திருச்சுற்றும் மாளிகையும்

முதற்பிரகாரத்தின் வாயில் "சேந்தாண்டான் திருவாசல்" என்று பெயர் பெறும். இதனை அமைத்தவன் 'தத்தனூருடையான்' என்பவனாவான். இச் செய்தியைக் கூறும் கல்வெட்டுகள் வாயில் நிலைக் காலிலும், இடப் பக்கத்துத் திண்ணையிலுமாக அமைந்துள்ளன.[2] இக் கல்வெட்டுகள் 14-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்டவை.

அடுத்து அப் பிரகாரத்தின் திருச்சுற்றில் கி.பி. 1542 ஆவது ஆண்டில் வரையப் பெற்ற அச்சுத தேவ ராயரின் கல்வெட்டும் அமைந்துள்ளது.[3]

வடக்குத் திருச்சுற்று மாளிகையின் மேல் தளத்தில், 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிதைந்த கல்வெட்

---

1 கல்வெட்டு எண் 35

2 கல்வெட்டு எண்கள் 15, 16

3 கல்வெட்டு எண் 19

டொன்று காணப் பெறுகிறது. அது பெண்ணை நதி வாணன் பெயரால் அமைக்கப் பெற்ற திருவாயிலைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

இம்மூன்று கல்வெட்டுகளையும் கருத்திற் கொண்டு இரண்டாம் பிரகாரத்தின் திருச்சுற்று, கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென்றும், அதுவே, 16 ஆம் நூற்றாண்டில் திருச்சுற்று மாளிகையாக மாற்றப்பட்ட தென்றும் கொள்ளலாம்.

திருச்சுற்று மாளிகையைத் தாங்கி நிற்கும் தூண்கள் அனைத்தும் விசயநகரக் கலைப்பாணியை வெளிப் படுத்துகின்றன.

### மகா மண்டபம்

அர்த்த மண்டபத்திற்கு முன்பு அமைந்துள்ள மகா மண்டபத்தின் வாயிலிலும், சுவர்களிலும் 14 ஆம் நூற் றாண்டில் ஆட்சி செலுத்திய இராசநாராயணச் சம்புவ ராயன் காலத்துக் கல்வெட்டுகளும், பாண்டியன் கல் வெட்டுகளும் இடம் பெற்றிருப்பதைக் கொண்டு, இம் மண்டபமும் 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதை யறியலாம்.

### மடைப்பள்ளி

இரண்டாம் பிரகாரத்தில் அமைந்துள்ள திருமடைப் பள்ளியின் வாயில், செங்கதிர்ச் செல்வன் வாணாதராயன் திருவாசல் என்று பெயர் பெற்றிருந்ததை அவ் வாயிலின்

---

1 கல்வெட்டு எண்கள் 10 - 14

நிலைக்காலில் அமைந்துள்ள கல்வெட்டொன்றினால் அறிகிறோம்.[1]

இவ்வாணர்குலத்தவன், கி.பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். இவன் வாணிகன் திருவேகம்பமுடையான் என்றும் அழைக்கப் பெற்றுள்ளான். எனவே, இம் மடைப்பள்ளி 14 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பெற்றதாகும்.

## நாயக்கர் மண்டபம்

கிழக்குக் கோபுரத்திற்கும், முதற் பிரகார வாயிலுக்கும் இடையில் அமைந்துள்ள மண்டபம், கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு எழுந்த நாயக்கர் காலத்ததாகும்.

அம் மண்டபத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள், குதிரை மீது அமர்ந்துள்ள வீரர்களின் அழகிய சிற்பங்களாலும், வீரர்களின் மீது பாய்கின்ற புலிகளாலும், இறைவனின் பல்வேறு உருவங்களாலும், அரசர்களின் சிற்பங்களாலும் அணி செய்யப் பெற்றிருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

## பள்ளியறை

முதற்பிரகாரத்தின் வடக்குப் பக்கம், உண்ணாழிமுன் (அர்த்த) மண்டபத்தின் வெளிச் சுவரை ஒட்டினாற் போல, கிழக்கு நோக்கியவாறு ஓர் அறை அமைந்துள்ளது. அதன் தெற்குச் சுவரின் வெளிப் புறத்தில் கி. பி. 1379, 1532 ஆகிய ஆண்டுகளில் வரையப் பெற்ற இரண்டாம் அரியன(ண) உடையார், அச்சுத

---

1 கல்வெட்டு எண் 17

தேவராயர் ஆகியோரின் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.[1]

அன்றியும் அவ் அறையில் அமைந்துள்ள மேடையின் பீடத்தில், 14ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட கல்வெட்டு ஒன்றும் காணப் பெறுகிறது. அது அம்மேடையின் பெயரை தேவதானக்குறடு என்றும், அதனை அமைத்தவன் சேதிராயன் என்றும் கூறுகின்றது.[2]

எனவே, அவ்வறை கி. பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தென்பதை நன்கு உணரலாம்.

### சுற்றுக் கோயில்கள்

முதல் பிரகாரத்தில் அமைந்துள்ள முத்துக்குமார சுவாமி என்னும் சுப்பிரமணியர் கோயிலும், கனக சபையும் பிற்காலத்துக் கட்டடங்களாகும். கோப் பெருஞ்சிங்கன் 5ஆவது (கி. பி. 1248), 6ஆவது (கி. பி. 1249) ஆண்டுகளைச் சார்ந்த இரண்டு கல்வெட்டுகள், இவ்விரண்டு கோயில்களிலும் தொடர்பின்றிக் காணப்பெறுகின்றன.[3]

கனக சபையின் உள்ளேயுள்ள மேடையின் பீடத்திலும், உள் சுவர்களிலும், சுப்பிரமணியர் கோயிலின் அர்த்த மண்டபத்து பீடங்களிலும் இக்கல்வெட்டுகளின் பகுதிகள் முறை மாறியும், தொடர்பற்றும், இடையிடையே கற்கள் குறைந்தும் காணப் பெறுகின்றன.

---

1 கல்வெட்டு எண்கள் 21, 22 & 27
2 கல்வெட்டு எண் 18
3 கல்வெட்டு எண்கள் 6, 7

இக்கல்வெட்டுகளோடு தொடர்புடைய வேறு சில கற்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன.

எனவே, கோப்பெருஞ்சிங்கன் காலத்திலிருந்த பழுதுற்ற ஒரு கோயிலின் கருங்கற்களைக் கொண்டு இவ்விரண்டு கோயில்களும் பிற்காலத்தில் அமைக்கப் பெற்றனவென்று கொள்ளலாம்.

### வசந்த மண்டபம்

கிழக்குக் கோபுரத்திற்கு முன்னுள்ள வசந்த மண்டபம் கலவை சு. சதாசிவ செட்டியார் அவர்களால் 1887ஆவது ஆண்டில் கட்டப்பட்டதாகும். இக்கால கட்டத்தில் சதாசிவ செட்டியார் அவர்கள், சிவன் கோயிலின் அறங்காவற் குழுவின் தலைவராக இருந்துள்ளார். இம்மண்டபத்தில் விசயநகரர் காலத்துத் தூண்களும் இடம் பெற்றுள்ளன.

### அம்மன் கோயில்

முதல் பிரகாரத்தில் தெற்கு நோக்கியவாறு அம்மன் கோயில் அமைந்துள்ளது. குயிலம்மை என்பது அம்மனின் திருப்பெயர். இக்காலத்தவர் கோகிலாம்பாள் என்ற பெயரால் அழைத்து வருகின்றனர்.

இவ்வம்மன் கோயிலைப் பற்றிய குறிப்பு எதுவும் இங்குள்ள கல்வெட்டுகளில் காணப்பெறவில்லை. அக்கோயிலிலும் கல்வெட்டு ஏதுமில்லை. கட்டட அமைப்பும் மிகப் பிற்காலத்ததாகவே தோன்றுகிறது.

"பக்குவ மாகக் கவிநூறு செய்து பரிசுபெற
முக்கர ணமெதிர் பல்காலும் போட்டு முயன்றிடினும்
அக்கட போவெனும் லோபரைப் பாடி யலுத்துவந்த
குக்கலை யாண்டருள் வில்வ வனத்துக் குயிலம்மையே!"

என்ற குயிலம்மை மாலையில் உள்ள பாடல், இக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவியைப் பற்றிய குறிப்பினைத் தருகிறது. அப்பாடலில் பயின்று வரும் 'அக்கட' என்னும் தெலுங்குச் சொல்லைக் கொண்டு, இது பிற்காலத்துப் பாடல் என்று அறிய முடிகிறது.

## கோபுரங்கள்

திருக்காமீச்சுரத்தின் கிழக்கு வாயிலை ஐந்து நிலைக் கோபுரமும், தெற்கு வாயிலை எழுநிலை இராச கோபுரமும் அலங்கரிக்கின்றன. இவற்றைச் சுதையா லான அழகிய சிற்றுருவச் சிலைகள் அலங்கரிக்கின்றன.

இவற்றுள் கிழக்குக் கோபுரத்தின் பீடத்தில் கி. பி. 1699ஆவது ஆண்டில் வரையப் பெற்ற வேங்கட தேவராயர் கல்வெட்டும், 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வேறொரு கல்வெட்டும் இடம் பெற்றுள்ளன.[1]

தெற்குக் கோபுரத்தில் 18ஆம் நூற்றாண்டில் வரையப்பெற்றுள்ள கல்வெட்டொன்று காணப் பெறு கிறன் து.[2]

## இருதலைப் பறவை

தெற்கு இராச கோபுரத்தின் வடக்குப் பகுதியில் கண்ட பேரண்டப் பறவையின் சிற்பம் ஒன்று அழகுற அமைந்துள்ளது. இதனை இருதலைப்புகள் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

---

1 ஞீகல்வெட்டு எண்கள் 32, 33

2 கல்வெட்டு எண் 36

'ஓருயிர்ப் புள்ளின் இருதலை'

என்று இதனைக் கலித்தொகை (89) குறிப்பிடுகிறது. இப்பறவையுடன் வாள், பன்றி ஆகியவற்றையும் சேர்த்து, விசயநகர வேந்தர்கள் தமது அரசச் சின்னமாகப் பயன்படுத்தினர். வடார்க்காடு மாவட்டம், காவேரிப் பாக்கம் என்னும் ஊரில் இத்தகைய அரசச் சின்னம் கிடைத்தது. அது சென்னை அரும் பொருட் காட்சியகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

இப்பறவையின் தோற்றம் தனதுக் கொண்டு அலகுகளாலும், கால்களாலும் யானைகளைப் பற்றிக்கொண்டு பறப்பதுபோல அமைக்கப் பெறுவது வழக்கம். கற்பனைப் படைப்பான இப்பறவைக்குப் புராணச் செய்திகளோடு தொடர்புண்டு.

விசயநகர வேந்தரின் அரசச் சின்னமான இப்பறவையின் சிற்பம், தெற்கு இராசகோபுரத்தில் அமைக்கப் பெற்றிருப்பதால், இக்கோபுரம் அப்பேரரசின் காலத்தில் - கி. பி. 16ஆம் நூற்றாண்டில் கட்டப் பெற்றது என்று கொள்ளலாம்.

இங்குள்ள இரு கோபுரங்களுமே விசயநகர வேந்தர் ஆட்சிக் காலங்களில், குறிப்பாக 16ஆம் நூற்றாண்டில் எடுப்பிக்கப் பெற்றனவாகக் கொள்ளலாம். பிரஞ்சுக்காரர்கள் இக்கோபுரங்களைப் பகைவர்கள் வருகையைக் கண்காணிக்கும் கண்காணிப்பு நிலையங்களாகப் பயன் படுத்தினர்.

'லயோன்ஸ் லொழியே' என்னும் பெயருடைய பிரஞ்சுக்காரர் புதுச்சேரியில் ஆளுநராக இருந்த

இக் பொழுது, கோயிலின் பழுதுற்ற பல கட்டடங்கள் செப்பனிடப்பட்டன. இதனைக் கிழக்குக் கோபுரத்தின் இடப்பக்கம் அமைந்துள்ள சுப்பிரமணியர்க் கோயிலின் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[1] அவ்வாறு, செப்பனிட்டு முடித்த ஆண்டு கி. பி. 1880 ஆகும்.

1 கல்வெட்டு எண்: 37

# சுவைமிகு செய்திகள்

## கணக்குத் தணிக்கை

இக் காலத்தைப் போலவே முற்காலத்திலும் ஆண்டு தோறும் கோயிற் கணக்குகள் அரசு அதிகாரிகளால் தணிக்கை செய்யப் பெறுவது வழக்கம். எக்காரணம் பற்றியோ மூன்றாம் குலோத்துங்க சோழனின் 37 ஆவது ஆண்டு (கி. பி. 1215) முதல் கோப்பெருஞ்சிங்கனின் 6 ஆவது ஆண்டு [கி. பி. 1249) வரை வில்லியனூர்ச் சிவன் கோயில் கணக்குகள் அரசு அதிகாரிகளால் தணிக்கை செய்யப் பெறாமல் நின்று விட்டன. இதற்கு அரசியல் குழப்பங்கள் காரணமாக இருக்கலாம்.

வில்லியனூர்ப் பகுதி கோப்பெருஞ்சிங்கனின் ஆட்சிக்கு உட்பட்ட பிறகு, விடுபட்டுப்போன வில்லிய னூர்ச் சிவன் கோயில் கணக்குகள் அனைத்தும் அரசு அதிகாரி ஒருவரால் தணிக்கை செய்யப் பெற்றது.

கோப்பெருஞ்சிங்கனின் அரசு அதிகாரியான உடைய பெருமாள் காடுவெட்டிகள் என்பவர் மேற்கூறிய கணக்குகளைத் தணிக்கை செய்தார். கோயிலுக்குச் சொந்தமாக இருந்த காசு, நெல், ஆடு, மாடு ஆகியவை தணிக்கையில் இடம் பெற்றன.

அப்பொழுது 64 பசுக்களும், 2 காளைகளும் இக்கோயிலில் பணியாற்றி வந்த அறுபது வட்டத்து ஆதி சைவரிடமிருந்தமை புலனாயிற்று. எனவே, அரசு அதிகாரி அப்பசுக்களுக்கு ஈடாக கி. பி. 1249 ஆவது ஆண்டு தைமாதம் 21 ஆம் தேதி முதல், நாள்தோறும் இரண்டு நந்தா விளக்குகள் எரித்துவர ஆணையிட்டார். ஆதி சைவர்களும் இவ்வாணையை ஏற்று, நந்தாவிளக்குகள் எரிப்பதாக ஒப்புக் கொண்டு சாசனம் அளித்தனர். இதனை, கோப்பெருஞ் சிங்கனின் கல்வெட்டு ஒன்றினால் அறிகிறோம்.[1]

## கைக்கோளர் புரட்சி

அச்சுததேவராயர் விசயநகரப் பேரரசின் அரசராக வீற்றிருந்த காலத்தில் வில்லியனூர்ப் பகுதிக்குத் திருமலை தேவமகாராசர் அரசப் பிரதிநிதியாக இருந்தார். அக்காலத்தில் இப்பகுதியில் இருந்த கைக்கோளர்கள்,

கண்டியத்தேவன்
காலிங்க ராயன்
பட்டமானங்காத்தான்
உலகெலாம் வென்றான்

---

1 Epigraphia Indica, Vol, xxiv, No. 6.
கல்வெட்டு எண் 8

முதலான விருதுப் பெயர்களைப் புனைந்து கொண்டனர். இவையாவும் கைக்கோளர்க்கே உரிய விருதுகளாகும். அக்கால ஒழுகலாற்றின்படி வேறு இனத்தவர் இவ்விருது களைப் புனைந்து கொள்ளுதல் கூடாது.

கைக் கோளர்களுக்கு உரிய மேற்கூறிய விருதுப் பெயர்களை இவ்வூரில் வாழ்ந்த இலை வாணிகர் களும் புனைந்து கொண்டு உரிமை கொண்டாடத் தொடங்கினர். இச் செயலை அரசு அதிகாரிகள் கவனிக் காமல் விட்டமையால், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு வில்லியனூரில் இருந்த கைக்கோளர்கள் தம்மோடு தேவாங்குச் செட்டிமார்களையும் சேர்த்துக் கொண்டு ஊரைவிட்டு வெளியேறினர்.

இந்நிகழ்ச்சி அரசாங்கத்தின் கவனத்தைக் கவர்ந் தது. திருமலை தேவமகாராசர் தனது பெருந்தரத்து அதிகாரியான விசயராயரை வில்லியனூருக்கு அனுப்பி இந் நிகழ்ச்சியைப்பற்றி விசாரித்து நீதி வழங்க ஆணை யிட்டார்.

விசயராயர் நாட்டுத் தலையாரிகளுடன் வில்லிய னூரில் விசாரணையைத் தொடங்கினார். அப்பொழுது காஞ்சிபுரத்திலுள்ள செப்பேடு கொண்டுவரப்பட்டு, ஒவ்வொரு இனத்தார்க்கும் உரிய விருதுப் பெயர்கள் படித்துப் பார்க்கப்பட்டன.

அச் செப்பேட்டில் மேற்காட்டிய விருதுப்பெயர்கள் அனைத்தும் கைக்கோளர்களுக்கே உரியனவாக உறுதி செய்யப் பெற்றிருந்தமையை அறிந்து, இவ்விருதுகள் கைக்கோளர்க்கே உரிமையுடையன என்று தீர்ப்புக் கூறினார். இச் செய்தியை கி. பி. 1542 ஆவது

ஆண்டில் வரையப்பெற்ற அச்சுத தேவராயர் சாசனத்தால் அறியலாம்.[1]

அக்காலத்திய சமுதாய வரலாற்றுக்குச் சிறந்த சான்றாக அமைந்துள்ள இக்கல்வெட்டின் பெரும் பகுதி, புதிய சுவரால் மறைக்கப் பெற்றுள்ளமை வருந்துதற்கு உரியது.

### சைவமட மடங்கள்

மெய்கண்டார் சந்தானத்தைச் சேர்ந்த திருவக்கரை மெய்ஞ்ஞான மாமுனியின் சைவ மடம் ஒன்றும் வில்லியனூரில் இருந்தமையைப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இம் மடம் திருக்காமீச்சுரத்தின் திருக்குளத்திற்கு வடக்கே அமைந்திருந்தது.

பூண்டி இராம ரெட்டியார், ஒழுகரை முதலியாரான பங்களத்தரையர், வீரய்யரசயர், வில்லவராயர், ஒழுகரை உடையார், ஆகியோர் கி. பி. 15 ஆம் நூற்றாண்டு வாக்கில் இம் மடத்துக்குச் சில நிலங்களைக் கொடையாக வழங்கியுள்ளனர்.

வில்லியனூருக்கு வடமேற்கில் உள்ள குருவி மூலை என்னுமிடத்தில் 700 குழி நன்செய் நிலங்களும், 600 குழி புன்செய் நிலங்களும், மடத்துக்கு வடக்கே 400 குழி நிலங்களும், தொண்டைமாநத்தம் என்னும் ஊரில் அத்திக் கிணறு என்னும் இடத்திற்கு மேற்கே 500 குழி நன்செய் நிலங்களும், 500 குழி புன்செய் நிலங்களும் ஆக 27 காணி அளவுடைய நிலங்கள் இம்மடத்திற்கு வழங்கப்பெற்றக் கொடைகளாகும்.[2]

---

1 கல்வெட்டு எண் 29 - See also A. R. E. 1936-37, Part, II,

2 கல்வெட்டு எண் 89

## நந்திகேசுவரர்

வில்லியனூரில் திருவக்கரை ஆதீனம் என்கின்ற கல்விமடத்துக்கு, திருநாவலூர் நந்திகேசுவரர் என்பவர் 8 ஆவது பட்டத்தில் இருந்தமையை 16 ஆம் நூற்றாண்டில் வரையப் பெற்ற கல்வி மடத்துக் கல்வெட்டு ஒன்றினால் அறிகிறோம்.[1] இத்திருநாவலூர் நந்திகேசுவரர் இந்த ஆதீனகர்த்தரின் சிஷ்யர் என்று இக் கல்வெட்டுக் குறிப்பிடுவது உளங்கொளத் தக்கது.

வில்லியனூர்க் கல்விமடத்தை நிறுவிய திருவக்கரை மெய்ஞ்ஞான மாமுனியின் பேரில், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த மகாவித்துவான் சபாபதி முதலியார் அவர்கள் "கல்வி மடம் மெய்ஞ்ஞான மாமுனியின் பேரில் பஞ்ச ரத்தினம்" என்னும் பெயருடைய நூல் ஒன்றை இயற்றினார். அந்நூலில் பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரியப் பாவால் அமைந்த ஐந்து பாடல்கள் உள்ளன. 1899 ஆம் ஆண்டில் குயிலம்மை மாலை என்னும் நூலுடன் இந் நூலும் இணைத்து வெளியிடப்பெற்றது.

"திருமருவு கல்லாலி னிழலமர்ந் தொருநால்வர்
 சிந்தனை மயக்கறுத்தும்
சேர்ந்தொரு குருந்தினிழல் வாதவூரர்க்குண்மை
 தெரியுமா றருள்புரிந்தும்
கருணையொடு விடையேறி வந்துகா ழிக்குரிசில்
 காணுமா தனையளித்துங்
ககனர்தொழு நல்லூரில் வாகீசர் முடியினிற்
 கான்மலர்கள் சூட்டியாண்டும்
பெருமைமிகு துறையூரி னாவலூ ரர்க்குறும்
 பேச்சற்ற நிலையளித்தும்

---

1 கல்வெட்டு எண் 40

பேதமற நிறைகின்ற முதல்வனே யருண்மிகும்
பெற்றியா லின்றுமெய்மை
தெருளிலடி யேம்பொருட் டினில் வந்த தெனஉனைத்
தேர்ந்தனம் வக்கரையினிற்
சீலமுட னேமருவு மெய்ஞ்ஞான மாமுனித்
தேசிக சிகாரத்தினமே!"

என்பது அந்நூலின் முதற்பாடல். இந்நூல் முழுவதும் இவ்வாறே திருவக்கரை மெய்ஞ்ஞான மாமுனியின் சிறப்பு விரிவாகக் கூறப் பெறுகிறது.

வில்லியனூரில் அமைந்துள்ள திருவக்கரை மெய்ஞ்ஞான மாமுனியின் மடம் பொருளாதார நிலையில் மேம்பட்ட மடமல்ல. இதே நிலையில் காஞ்சிபுரத்திலும் ஒரு மடம் உண்டு. அது ஞானப்பிரகாசர் மடம் என்று பெயர் பெறும். திருவாவடுதுறை ஆதீனமோ செல்வச் செழிப்புள்ள ஆதீனம். எனவே, இம்மூன்று மடங்களின் நிலைகள்பற்றிச் சிவஞான முனிவரின் மாணாக்கரான கச்சியப்பர் என்பவர்,

"கல்வி மடத்தார்க்கும் காஞ்சி புரத்தார்க்கும்
பல்லில்லை வாழைப் பழந்தின்ன - நல்ல
திருவா வடுதுறை யார்தேங்காய் மட்டை
உருவாது தின்பார் உளர்."

என்று பாடியதாகக் கூறுவர்.

## குருமூகூர்த்தக் கோயில்

வில்லியனூர் திருவக்கரை ஆதீனத்து மடாதிபதிகளின் குருமூகூர்த்தக் கோயில்கள்,[1] புதுவை மேழிவான்

1 சமாதிக் கோயில்

கோத்திரத்தைச் சேர்ந்த சுப்பராய முதலியார் குமாரர் அருணாசல முதலியார் என்பவராலும், இராயவேலூர் வேங்கடசாமி முதலியாரின் மனைவியார் அனந்தம்மாள் என்பவராலும் திருப்பணி செய்யப் பெற்றுள்ளன.[1]

## சத்திரங்கள்

இக்காலத்தில் வில்லியனூரில் அனந்தம்மாள் சத்திரம், ஆயிர வைசியர் சத்திரம், வாணியர் சத்திரம், ஆரிய வைசியர் சத்திரம், கம்மாளர் சத்திரம், வன்னியர் சத்திரம், நாவிதர் சத்திரம் உள்ளிட்ட பல சாதியினர் சத்திரங்கள் உள்ளன. புதுவையிலுள்ள அம்பலத்தாடய்யர் மடம் ஒன்றும் இருந்தது. தற்பொழுது அது காய்கறிக்கடை (மார்கெட்) ஆக இருக்கிறது. இவை யெல்லாம் ஒரு காலத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வந்த அறநிலையங்களாகும்.

## இராமப் பரதேசி

தென்னிந்திய இரயில்வே கம்பெனியார் வில்லியனூரை ஒட்டி இருப்புப்பாதை அமைக்கும் பொருட்டு நிலத்தை அகழ்ந்த பொழுது நிலத்தடியில் சமாதி நிலையில் ஒரு மகானின் திருமேனியைக் கண்டனர்.

வில்லியனூரின் வடகிழக்குப் பகுதியில் பிரம்பை என்னும் ஊருக்குப் பிரிந்து செல்லும் பாதைக்கு அண்மையில், தாயாரம்மாள் என்பவருக்குச் சொந்தமான நிலத்தில் அந்திருமேனியைக் கொண்டு வந்து முன்பிருந்த நிலையிலேயே அடக்கம் செய்து, 'இராமப் பரதேசி' என்று திருநாமமிட்டு அங்குச் சமாதிக்

---

1 கல்வெட்டு எண்கள் 41 & 43

கோயில் ஒன்று எடுப்பித்தனர். இக்கோயில் கி. பி. 1868இல் (சகம் 1791) அமைக்கப்பட்டதென்று அங்குள்ள சாசனமொன்றால் அறியலாம்.[1]

இதுகாறும் கூறிய செய்திகளைக் கொண்டு வில்லியனூர் அதன் பெயர்க் காரணம், முற்காலத்திய அமைவிடம், கிடைத்துள்ள கல்வெட்டுகள், ஆகியவைபற்றி ஒருவாறு அறிந்து கொள்கிறோம்.

இந்நூல் ஒரு குறிப்பிட்ட ஊரைப் பற்றிய வரலாறாக இருப்பினும், இங்குக் கிடைத்த கல்வெட்டுகள் ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளாக விளங்குபவை. அக் கல்வெட்டுகளை இந்நூலின் வாயிலாக வரலாற்று உலகிற்கும், ஆராய்ச்சியில் வல்ல அறிஞர்க்கும் படைக்கின்றேன்.

1 கல்வெட்டு எண் 42

# இரண்டாம் பகுதி

# கல்வெட்டு பகுதி

# வில்லியநல்லூர்த் திருக்காமீச்சுரம் கல்வெட்டுகள்

இப்பகுதியில் உள்ள 44கல்வெட்டுகளில், 5, ஆவது 26 ஆவது ஆகிய இரண்டு கல்வெட்டுகளின் வாசகங்களைத் தவிர, மற்ற கல்வெட்டுகளின் வாசகங்கள் இதுவரை வெளி வராதவை. பொதுவாகத் தமிழ் எழுத்துகளால் வரையப் பெற்றுள்ள இக்கல்வெட்டுகளின் இடையிடையே கிரந்த எழுத்துகள் கலந்து வந்துள்ளன.

## 1

### திருக்குளத்தின் தெற்குப் படித்துறை
### குலோத்துங்க சோழன் I
### சகம் 1002 [கி. பி. 1080]

1 ஸ்வஸ்திஸ்ரீ உ ஒன்பது நூற்றாண்டினுடனே
சகர யாண்டொன்

2 பதிற்றுப்பத்தின் மேலோரிரண்டிற்றன்
பெயராலானிய[ல்]

3 முத்தமைத்தான் குலோத்துங்கன் மானபரர் தென்னொழு

4 கை வைப்பு உ ।

---

1 ஸ்வஸ்திஸ்ரீ உ
ஒன்பதுநூற் றாண்டி னுடனே சகரயாண்
டொன்பதிற்றுப் பத்தின்மே லோரிரண்டிற்—
றன்பெயரா
லானியல் முத்தமைத் தான்குலோத் துங்கன
மானபரர் தென்னொழுகை வைப்பு

என்று நேரிசை வெண்பா வடிவில் அமைய வேண்டிய இக்கல்வெட்டுப் பாடல், உரைநடையாக மேற்கண்டவாறு வரையப் பெற்றுள்ளது.

சகம் 992 என்றும், 1002 என்றும் இருவகையாகப் பொருள் கொள்ளுமாறு, இக் கல்வெட்டின் வாசகம் அமைந்துள்ளது. இவ்விரண்டனுள் சகம் 1002 (கி.பி. 1080) என்பதே பொருத்தமாக உள்ளது.

## 2

### திருக்குளத்தின் வடக்குச் சுற்று மண்டபம்
### குலோத்துங்க சோழன் I
### ஆண்டு 5 [கி. பி. 1110]

1 லமகள் ணிலவ மலர்மகள் புணர உரிமையில் சிற
2 த்தி வீரஸிம்ஹாஸநத்து உலகுடையா ளொடும்
3 டு 40 த்தாவது கங்கை கொண்ட சோழவள நாட்
4 [ெ] காள்ளப் பெறுவராக விட்டவ் விழியக் கிடைப்பு.[1]

## 3

### மடைப்பள்ளி - குலோத்துங்க சோழன் I
### [கி. பி. 1070-1125]

1 இருகுவடனையதந் தோளும்
2 ந்நாள் திருமாலாகி கேழலாகி யா
3 தந்கழல் தராதிபர் பணியச் செங்
4 குட்டி தாமோதரபட்டநும் சீராம
5 (எரி)க்கக் கடவோமாகக் கொண்
6 மாகவும் இக்கோயில் தி
7 க் குட்டி தாமோதரபட்ட[2]

---

1 இக்கல்வெட்டின் பிற பகுதிகள் கிடைக்கவில்லை.
2 இக்கல்வெட்டின் பிற பகுதிகள் கிடைக்கவில்லை.

## 4

### மேற்குத் திருச்சுற்றுவாயில்
### கி.பி. 12ஆம் நூற்றாண்டு.

1 வார் திருநாமத்தால் சிலாலேகை செ

2 க முதற்க் கண்ணாற்று ஏழாஞ் சாத்த[1]

3 (ள்)ள இவ்வூ ருகச்சன் மாதேவன் கொ

4 (ளே)ாம் ஸ்ரீவிஷ்(ணு)ச் சேரி ஸபையோ[ாம்][2]

1 சதுரத்து என்று இருக்க வேண்டும்.

2 இக்கல்வெட்டின் பிற பகுதிகள் கிடைக்கவில்லை.

## 5

### அர்த்த மண்டபத்தின் வடக்குச் சுவர்
### குலோத்துங்க சோழன் III - ஆண்டு: 13
### [கி. பி. 1119] S. I .I. vol. VII, No. 816.

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவநச்சக்ரவத்திகள் கோனேரி மேல் கொண்டான் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 13வது இரா[ஜ] ரா[ஜ] வளநாட்டு மாத்தூர் நாட்டு ஒழுகறையான குலோத்துங்க சோழ நல்லூர் பிடா

2 கை வில்லியநல்லூர் வேறு பிறிந்த திருநீற்றுச் சோழ நல்லூர் உடையார் திருக்காமீசுரமுடையார்க்கு பண்டுடையானும் பழங்காணியாளரும் தவிர்த்து நந்தவனத்துக்கும் திருக்குளத்துக்கும் திருமடை விளாகத்துக்கும் சதிரம் நான்மா வரைப்படி இட்ட நிலம் ஐய்

3 வேலியும் கோயிலுக்குச் சேந்த நத்தமும் நத்தத்துக் குச் சேந்த கொல்லையும் நிலம் ஐய் வேலியும் திருமுகப்படி நீக்கித்து திருமுகப்படி தேவதாநம் நீக்கினபடிக்கு புரவரியார் எழுத்திட்ட உள்வரிப்படி இரா[ஜ] ரா[ஜ] வளநாட்டு மாத்தூர் நாட்டு ஒழு கறையாந குலோ

4 த்துங்க சோழ நல்லூர் பிடாகை வில்லியநல்லூர் உடை யார் திருக்காமீசுரமுடைய நாயநார்க்கு வேண்டு நிமந்தங்களுக்கு இறுப்பதாக ஒழுகறையான குலோத் துங்க சோழ நல்லூர் வேறு பிறிந்த திருநீற்றுச் சோழ நல்லூர் பழம்பேர் தவித்துத் தேவதாந இறையி

5 லி இடுகிற நிலத்துக்கு இத்தேவர்க்கு திருமடை விளாகமும் திருக்குளமும் திருநந்தவநமும் இத்தேவர் கோயிலுக்குச் சேந்த நத்தமும் நத்தத்தைச் சேந்த கொல்லை நிலத்து பண்டுடையாரும் பழம்பேரும்-

இறைக் கட்டுக் குடலாய் வருகிற படியும் தவித்துத் தேவதாந இறையிலி இட்டு நீ

6 ங்கல்க்கு உடலாக நிற்கிற நிலத்துக்கு ஊர்க் கணக்கு ஒழுகறை உடையான் கணக்கின்படி நிலமாய்ப் பசான முதல் தேவதான இறையிலியாக வேறு பிறிந்த திருநீற்றுச் சோழ நல்லூர் தரம் பெற்ற நீர்நிலம் நாற்பத்து ஒன்பதிற்று வேலியும் கொல்லை நிலம்

7 நூற்று இருபத்து ஒன்றே நாலுமாக்காணி அரைக்காணி யும் இத்நிலத்து எல்லையில் அகப்பட்ட வதி வாய்க் கால்களும் சதிர அறுதி கண்ணாறுகளாலும் ஏரி உள்[1] அகப்பட்டதரமிலிகளாலும் நிலம் இருபதிற்று வேலி யும் ஆக நிலம் நூற்றுத் தொண்ணூறே நாலுமாக்கா

8 ணி அரைக்காணியினால் நில ஒரி மாயிடை மூன்னூற்று ஒருபத்து ஆறரையே மூன்று மாக்காணி அரைக் காணியும் பழப்பேரும் இறைக்கட்டும் தவிர்த்து இ[ட்]ட கொல்லை நிலம் ஐவேலிக்கு நில ஒரிமாடை மூன்றே

9 ற நாலுமா அரைக்காணி நில ஒரிமாடை நூற்று இருபத்து ஒன்று நீக்கி நிலம் நூற்று எண்பத்து ஏழே மூன்று மாக் காணிக்கு நாடுவார்மாடை முன்னூற்று ஒருபத்து இரண்டு அரைக்கு அளவின்படி 2,500 ள இன்நெல்லு இரண்டாயிரத்து ஐஞ்ஞூற்றுக் கலமும் யாண்டு 13 வது

10 பசான முதல் தேவதான இறையிலி இட்டமைக்க எழுதினான் திருமந்திர ஓலை குலோத்துங்க சோழ மூவேந்த வேளான் மலைகினிய நின்றான் நாள் 221.

---

1 ஏரிஉள் - என்பது முன்பதிப்பில் இல்லை.

# 6

## நடராசர் சுற்றுக் கோயிலுக்குள் இருக்கும் மேடையின் குமுதப்படை
## கோப்பெருஞ் சிங்கன் II
## ஆண்டு 5 [கி. பி. 1248]
## *199 of 1936-37*
## I குமுதப்படை

1 ஸ்வஸ்திஸ்ரீ : உ சகல புவனச் சக்க [ரவத்திஅ] வனி ஆளப் பிறந்[தான்] ஸ்ரீ கோப்பெருஞ்சிங் [கதேவர்க்] கு யாண்டு 5வது ரி[ஷபநா] யற்று பூறுவ பக்ஷத்து பஞ்[சமி]யும் புதங்கிழமையும் [பெற்ற அஸ்த]த்தி நாள் ஒழுகறையாந குலோத்துங்க சோழ நல்லூர்ப் பள்ளத்றூரவரோம் நிலவிலைப் பிரமாண இசை [வுத் தீட்டு] பெருமாள் பிள்ளையான சோழ கோனாற்கு நா[ங்கள் விற்]றுக்குடுத்த நிலமாவது கழநி வாயலுடையார்க் கடம்பன் காணியான பாகத்தில் நிலத்துக்கு அசலிட்டு அசலுக்கு இறு...............

2 [உழந்தை வாணிகன் அரையன் சக்கரக்கை]ய்யனாந இராசேந்திர சோழக் கனகரா[யனும் இவ்வி]ரு வோம் நிலவி[லை பி]ரமாண இசைவு தீட்டு [பெரும]ான் பிள்ளையான சோழகோனார்க்கு நாங்கள் விற்றுக் கு[டு]த்த விளை நிலமும் நத்த[மும்] இன்னிலம் ஆறுமாவும் உட்பட இவற்கு நாங்கள் விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மில் இசைந்த விலைப் பொருள் அன்றாடு நற்காசு 8000 இக் காசு எண்ணா யிரமும் ஆவணக்களியே காட்டு......செலவறக் கொண்டு விற்று விலைப் பிரமாண இசைவு தீட்டுக்

குடுத்தோம் பெருமாள் பிள்ளையான சோழ கோனாற்குப் பள்ள......

3 திருவுடை ஆட்டப் புன்னை ஊறு காலு கழனிவாய லுடையார்ப் பிள்ளைக் கடம்பன் காணியாய்... அசலிறுத்து எங்கள் காணி ஆன விளை நிலம் 16ஆக நிலம் பதினாறுமா இன்னிலம் பதி[னாறு மாவும்] பொருள்ச்சி.........மேனோக்கின மரமும் கீழ் நோக்கி கிணறும் உளப்பட மற்றும் எப்பேற்பட்ட உரிமைகளும் உட்பட...முழுவதும் விலைக்கறவிற்று பொருளறக் கொண்டு விற்று வி[லைப் பிரம]ாண இசைவு தீட்டுக் குடுத்தோம் பெருமாள்ப் பிள்ளை யான சோழ கோனாற்கு பள்ளறூரவ ரோம் இன் னிலத்துக்கு இவர் வேணுமென்.........

4 மேல் கரைக்கு மேற்கு அருளாளப் பெருமாள் திருவுடை ஆ[ட்டம]ாக விட்ட கீழ் மேல் கோல் 3...இதன் மேற்கு கோல் நூறினால் குழிபதிநாயிரத்தினால் நிலம் இருபதுமாவும் ஆக விளை நிலம் பெருமாள்... இவர்கள் வேண்ட இப்பிரமாண இசைவு தீட்டு எழுதிநேன் [ஆ்ழி]யூர் நந்திமங்கலங்கிழான்...ற்றா நேன் இவை...என் எழுத்து என்றும் இப்படிக்கு மட்டை பாக்கத்து வேட்டந்தை வேளான் செந் தாமரை[ரக்க] ண்ணநான திருமங்கை வேளான் செந்தாமரை[ரக்க] ண்ணநான திருமங்கை விழுப் பரையன் எழுத்து என்றும் இப்படிக்கு இவை ஏரி......

5 தாங்கள் விற்றுக் குடுத்து கொள்வதாக எம்மில் [இசைந்த விலைப்] பொருள் அன்றாடு [நற்] காசு 28000 இக் காசு இ[ருபத்தெ] ண்ணாயிரமும் ஆவணக்களியே காட்டேற்றி கிழிகைச் சிவ்வறக் கொண்டு விற்று

விலைப் பிரமாணம்...சிறியான் மழைக் கண்ணதேன் எழுத்து இப்படிக்கு இவை திருவாய்மூர்க் குறுக்கை வெளிமான் அதிகை நாயகன் எழுத்து இப்படிக்கு இவை களை [யூர்] திருமங்கலங்கிழான் பெருமான் சூரியதேவன் எழுத்து இப்படிக்கு இவை ஒழுகறைப் பனைப்பாக்கிழான் வேளான் திருவீராமீஸ்வரமுடை

## II குமுதப்படை

1 தான் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவற்கு யாண்டு 5வது... கிழமையும்

2 கல்லைமடமுடையா...க்கத்துப் பள்ளத்துக்கு வடக்கும் மேல்...கடல(ாடு திருவீதிக் ?) கு மேற்கு நில ஆ......

3 க்காசு எண்ணாயிரமுமே ஆவுதாகவும் இது பொருமா வறுதி...கவும்...லது வேறு பொரு......

4 மாகில் இப்பிரமாண இசைவுத் தீட்டே பிரமாணமா வுதாக...விலைப் பிரமாண இசைவு தீட்டுக்...

5 க்க இவை வேட்டந்தை வேளான் அருளாளப் பெரு மான் எழுத்து இவைக...ஞர் குமாரமுழான்......

## III படி

1 இதுவே பொரு[ளு]மாவறுதிப் பொருள்ச் சில வோலை

2 க்கற விற்றுப் பொருளறக் கொண்டு விற்று விலைப்பி

3 சேந்திர சோழக் கநகராயன் எழுத்து இப்படிக்கு

4 ன்றும் இப்படிக்கு இவை உழந்தை வாணிகன்

5 ன் அரையன் மழைக் கண்ணநேன் இப்படி

## IV மேற்கு - தெற்குச் சுவர்கள்
### தனித் தனியே உள்ள மூன்று கற்கள்

1 ஸ்ரீ: திருமுகப்படி சோழகோனாற்கு நினைப்பு ஒழுகறைப் பற்றில் மட்டை பாக்கத்தில் தர[ம்]...

2 குற்றேத்தப்பற்று ஆரியன் பற்று நிலம் ஆறுமாவும் மட்டை பாக்கத்துப் பள்ளம் குடிப்பற்று நில...

3 கு ஆறாவது அற்ப்பசி மாத முதல் இட்டோம் இன்னிலத்துக்கு வேலி ஐங்கல நெல்லு இறு...

4 களும் தேவை குடிமைகளும் தவிருவதாகவும் பிராமணற்கு குடி இருக்க இட்ட நத்தம் நி...

5 பண்ணுவதே இவை கோப்பெருஞ்சிங்க தேவன் எழுத்து இவை குருகுலர...[1]

---

1 இக்கல்வெட்டில் கோப்பெருஞ்சிங்கனின் 5ஆவது ஆட்சி ஆட்டைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டு களின் வாசகங்கள் கலந்து வருகின்றன பிற் காலத்தில் கற்கள் இடம் மாறிவிட்டன. இடை யிடையே சில கற்களைக் காணவில்லை. ஆதலின், வாசகங்கள் தொடர்பற்று விட்டன. எனவே, ஒரே கால கட்டத்தைச் சார்ந்த இவ்விரண்டு கல்வெட்டு வாசகங்களை இனங்கண்டு பிரித்தறிய இயல வில்லை.

# 7

## முதற்பிரகாரம் - சுப்பிரமணியர் கோயில் வடக்கு, தெற்குச் சுவர்களின் பீடங்கள்
## கோப்பெருஞ்சிங்கன் II ஆண்டு: 6
## [கி.பி. 1249]

1 வைத்த அகரம் அவனி ஆளப் பிறந்தான் சதுப்பேதிமங் கலத்துக்கு இப்பற்றில் தாம் காணிகளைக் கொ[ாண்டு செலவ]றுதிப் பொருள்ச் சில ஓலை காட்டக் கடவு தல்லா............நிலத்தும் நத்தத்தும் மேநோக்கின [மரமும் கீழ்நோக்]கிந கிணறும் மற்றும் எப்பேற் பட்ட பிராத்திகளும் உட்பட இவர் வேணுமென்ற இவர்கே பிரமாணம் பண்ணிக் குடுக்கக் கடவோ மாகவும்...

2 ம் இருமாவரையும் படைப்பற்று நிலம் பதினைம்மாவரை யும் ஆக நிலம் இருபத்து நாலு மாவும் இவ்வக... (பெருமா)ள்ப் பிள்ளை ஆன சோழ கோனாற்கு உழந்தை வ[ாணிகன் அ]ரையன் சக்கரக் கைய்ய னாந குலோ[த்துங்க சோழ]க்கநகராயனும் உழந்தை வாணிகன் அரையன் சக்கரக்கைய்ய நான இராசேந் திர சோழக்கநகராயனும் இவ் விருவோம் இப்படிக்கு இவை உழ[ந்தை]......

3 த்து நீக்கி நின்றது இறையிலி ஆகவும் இன்னிலத்துக்கு வெட்டி ஆயம் பாடிகாவல் உள்ளிட்ட அனை... ங்கொண்டா நெழுத்து இப்படிக்கு இவை உழந்[தை வாணிக]ன் அரையன் அழகிய மணவாளப் பெ[ருமாள் எழுத்து] இப்படிக்கு இவை உழந்தை வாணிகன் அரையன் சிவபுரத்தரைசன் எழுத்து

இப்படி அறிவேன் மருதத்துடையான் அஞ்ச லென்றாந் அனபா...

4 லம் இருபதுமாவும் இறையிலி ஆகவும் இட்டோம் இன்னாள் முதல் இன்னிலம் அனுபவிப்பார்...இப்படி அறிவேன்... அனபாயநாந அகநாட்டு சூழவேந்த வேளாநேன் இப்படி அறிவேந் தண்டக நாடுடையா நேன் இப்படி அறிவேன் உழந்தை வாணிகன் மழை...

5 ...கண...ன் எழுத்து இவை காடுவெட்டி எழுத்து...யன் பூத நாயகநேன் இப்படிக்கு இவை உழந்தை வாணிகன் அரையன்...ன் எழுத்து.[1]

1 இக் கல்வெட்டின் தொடக்கப்பகுதி காணப்பெற வில்லை. கற்கள் இடம் மாறியுள்ளன. இடையிடையே சில கற்கள் இல்லை. இது 6 ஆவது கல்வெட்டோடு தொடர்புடையதாகவும் இருக்கலாம்.

# 8

## அர்த்த மண்டபத்தின் தெற்குச் சுவர்
## [பள்ளியறை - உள்பக்க வடக்குச் சுவர்]
## கோப்பெருஞ் சிங்கன் II-ஆண்டு : 6
## [கி.பி. 1249] 186 of 1936-37
## Epigraphia Indica, Vol. xxiv, No. 6.

1 ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ அவனி ஆளப் பிறந்தார் கோப்பெருஞ்சிங்க தேவற்கு யாண்டு 6 ஆ

2 றாவது ஒழுகறையான குலோத்துங்க சோழநல்லூர் மேல்பிடாகை வில்லியநல்லூர் உடையார் திருக்காமீசுரமுடைய நாயனார் கோஇ

3 ல் ஆதிசண்டேசுர தேவற்க்கும் சீமாகேசுரற்கும் தேவர் கன்மி கோயிற் கணக்கினுக்கும் இன்னாயனார் கோயில் முப்பது வட்டத்துக்காணி உடைய சிவப்பிராம்ண

4 ரோம் தீட்டுக்குடுத்த பரிசாவது இன்னாயனார் கோயில் திரிபுவன வீர தேவற்க்கு முப்பத்தேழாவது முதல் அழகிய சீயர் கோப்பெருஞ் சிங்க தேவற்க்கு பதினொன்றாவ

5 து வரை இகோயில் நீக்கி நி[ன்ற]உ காசும் நெல்லும் ஆடும் மாடும் ஆறாவது தைய் மாதத்து உடையார் பெருமங்கலமுடையார் உடைய வெ

6 பருமானான காடுவெட்டிகள் கணக்கு கேட்டு எங்கள் பக்கல் நின்ற பசு ஐம்பத்தொன்பது மரங்கள் பேரில் நீக்கி

7 நிலையான காசில் கொண்டுவிட்ட பசு ஐஞ்சும் இஷபம் இரண்டும் ஆக பசு அறுபத்து நாலும் இஷப[ம்] இரண்

8 டும் கை கொண்டு ஆறாவது தை மாதம் இருபத்தொன்றா[ந்] தியதி முதல் நாள்ளொன்றுக்கு இரண்டு திருநுந்தா விளக்கு எ

9 ரிக்க கடவோமாகவும் எரிக்குமிடத்து இடுக்காடுங்காணி உடைய முப்பது வட்ட[த்]து சிவப் பிராமண ரோம்[1] இடுகாடு வலபம் க.

10 டத்து வாசல் வ[ை]ர ந[ட]ப்பது கடவார் சந்திராதித்தவரை இதிருநுந்தா விளக்கு இரண்டும் எரிக்க கடவோமாக ச[ம்]மதி[த்]தோம்

11 இக் கோ[யி]ல் முப்பது வட்டத்து சிவப்பிராமணர் ரோம்

1 சிவப்பிராமணர் என்பது ஆதிசைவரைக் குறிக்கும். ஆதிசைவர் இக் காலத்தில் குருக்கள் என்று கூறப் பெறுகின்றனர்.

# ௯

## ஷெ சுவர் - கோப்பெருஞ் சிங்கன் II
## ஆண்டு : 8 [கி.பி. 1251]
## 185 of 1936 - 37

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சகலபுவனச் சக்கரவத்திகள் அவனி ஆளப்
பிறந்தான்

2 சி கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு எட்டாவது
உடை

3 யார் திருக்காமீசுரமுடையார் திருக் கோவிலும் திருமண்ட

4 பமும் கல்லால் திருப்பணி செய்வித்தான் பூங்குன்றத்துக்

5 கோட்டூர் கிழான் வீதிவிடங்கன் திருச்சிற்றம்பல

6 முடையானான நந்தியராயன்.

# 10

மகா மண்டபத்தின் தெற்குச் சுவர்
பராக்கிரம பாண்டியன் - ஆண்டு : 6
[கி.பி. 1341] 189 of 1936 - 37

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவன சக்கவத்தி கோநேரின்மை கொண்டான் ஸ்ரீ பராக்ரம பாண்டிய தேவக்கு யாண்டு 6வது ஜயங்கொண்ட சோழ

2 மண்டலத்து மாத்தூர் நாட்டு ஒழுகறையான குலோத் துங்க சோழநல்லூர் பிடாகை வில்லியநல்லூர் உடையார்

3 திருக்காமீசுரமுடையார்க்கு அம்மான் குலசேகர மஹா பலி வாணராயர் தம்பேரால் கட்டின சந்திக்கும் அமு

4 துபடி சாத்துப்படி உள்ளிட்டு [ வே]வண்டு ம் நித்த நிமந் தங்களுக்கு முதலடங்கல் இறையிலி தேவதான்னம்

5 மாகவும் புறையூர்ப் புகழ்ந்தை அரையன் திருவேகம்ப முடையானான நுளம்பாதராயன் உள்ளிட்டார்

6 காணியில் விட்ட சுத்தவல்லி வீதிக்கு மேற்கு கங்கை கொண்ட சோழ வாய்க்காலுக்கு தெற்கு வில்லி

7 யநல்லூர் முதற்கண்ணாற்று முதற் சதிரத்து நிலம் எட்டுமாவும் இரண்டாஞ் சதிரத்து நிலம் மூன்றுமா

8 வின் கீழரையே அரைக்காலும் இரண்டாங் கண்ணாற்று ஐஞ்சாஞ் சதிரத்து வடமேற்கடைய நிலம் ஒருமாவ

9 ரை முந்திரிகைக் கீழரையே மூன்றுமாவும் கங்கை கொண்ட சோழ வாய்க்காலுக்கு வடக்கு கூட்டம் ஆறாங்கண்

10 ணாற்று ஐஞ்சாம் சதிரத்து தெற்கடையவும் வடகிழக் கடையவும் நில ம் நாலுமாவரைக் காணி முந்திரிகை கீழ் மு

11 க்காலும் சோழகுல சுந்தரி வதிக்கு மேற்க்[கும்] குலோத்துங்க சோழ வாய்க்காலுக்கு வடக்கு பிறையூர் மூந்றாங் கண்ணா

12 ற்று மூன்றாம் சதிரத்து நிலம் முக்காணியும் இரண் டாங் கண்ணுற்று இரண்டாஞ் சதிரத்து நிலம் அரை மாவும் மூன்ருங் கண்ணா

13 ற்று மூன்ரும் சதிரத்து நிலம் நாலுமா அரை[க்காணி] முந்திரிகை கீழரையும் சீதேவ வதிக்குக் கிழக்கு குலோத்துங்க சோழவாய்

14 க்காலுக்கு தெற்கு அச்சம் பள்ளம் இரண்டாங் கண்ணாற்று முதற் சதிரத்து அரசங்குழியும் கரையும் சாற்றுத் தெங்கும்

15 நிலங் கலந்த வாற்றல் நத்தம் நிலம் அரைமாவும் இரண்டாஞ் சதிரத்து தெற்கடைந்த தடி பலவினால் தூ[று]வுட்பட நிலம் மூன்று

16 மாவரைக் காணியும் ஆக இந்த நிலத்துக்கு வுட்பட்ட தூறும் குளமும் மேடும் உட்பட நிலம் இருபத்தாறு மாக்காணி அரைக்கா

17 ணி முந்திரிகைக் கிழரைக்கும்............

18 ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று ஐந்து கலதே தூணிப் பதக்கு நானாழியும் காசு கடமைக்குப் பொன் பனி ரண்டு அரை

19 காலும் காணம் முப்பத்து ஐங்கலதே தூணிப் பதக்கும் ஆக இந்நிலத்துக்கு இப்படியால் வந்த ஆறாவது ஐப்பசி

20 மாதம் முதல் இறையிலும் புரவிலும் கழித்து இப்பற்றில் நிச்சயிப்பான முதலிலே இந்நிலம் இருபத்தாறு மாக்காணி அரைக்கா

21 ணி முந்திரிகைக் கீழரைக்கும் இம்முதல் நீங்கலாக வரும் காசு கடமைக்கும் பொன்வரி காணம் எடுத்துக் காட்டும் பச்சை......

22 ...தேயக் கடமை புஞ்சைக் கடமை கூற்றிலக்கை கடைக் கூட்டிலக்

23 கை தரை [விநியோகம்] வாசல் வினியோகம் சந்து விக்கிரமம்...கீற்றுவரி திருமுகச்ச....ட்டம் தறிஇறை செக்கி

24 றை தட்டொலி பாட்டம் நாட்டு வினியோகம் ஊர் வினியோகம் இனவரி தலைவரி ஆள்வரி மணைவரி வெட்டி ஆள்வே

25 தவை தச்சுத் தேவை ஆனைச்சாலை குதிரை பந்தி ஆட்டுவரி புரவரி இடைவரி எ...பசுவரி மற்றும் எப்பேர்பட்ட அனைத்தா

26 யங்களும் இழந்து இந்நாயனார்க்கு முதலடங்கலும் இறையிலியாகச் சொல்லி வரியிலார் கணக்கிலும் கழிக்கச் சொன்

27 னோம் இப்படிக்கு ஸந்த்ராதித்ய வரை செல்லுவதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டுவித்து இந்நிலங்களுக்கு நான்கெல்

28 லை களிலும் திருச்சூல ஸ்தாபனமும் பண்ணிவித்துக் கொள்க இவை பொன்பற்றி உடையான் எழுத்து இவை பல்லவராயன் எ

29 ழுத்து

## 11

### ஷெ சுவர், பராக்கிரம பாண்டியன்
### [கி.பி. 1335 - 1352] - 187 of 1936 - 37

1 ......க்கரவத்திகள் ஸ்ரீபராக்கிரம பாண்டிய தேவர்க்கு யாண்டு...

2 ...திருக்காமீசுரமுடைய நாயனார் திருவைகாசித் திரு நாள் அன்

3 ...ரும் இடத்து திருக்கொடித் திருநாள் பிரம்பை ஊரவரும் திருக்

4 ...ரும் இரண்டாந்திருநாள் ஒழுகறைப் பனைப்பாக் கிழார்களும் மூன்

5 ...ரிக்கரும் நாலாந்திருநாள் பாக்கமுடையான் பட்டு ஊரவரும் ஐஞ்சாந்

6 ...ஊரவர் நாயனாக்கு திருச்சாந்தும் சார்த்தி ஊரில் எழுந்தருளி விக்கவு ஆ

7 ...ஏழாந்திருநாள் பள்ளத்து ஊரவரும் எட்டாந்திருநாள் வில்லிய நல்லூர்

8 ......சூர் உள்ள ஊரவரும் திருவெழுச்சி பூங்குன்றமுடையார்களும்

9 ...லும் சாமுதாயம் செய்வார்களும் முதலியார் தலை வரும் ஆடி அருளவும் திரு

10 ...து ஊரவரும் தீர்த்த திருநாளும் போகமும் மநத மங்கலமுடையான்

11 ...கைக்கோளரும் முதலியார்க்கும் நாயகர்க்கும் திருச் சாந்து செட்டிகளும்

12 ...எழுந்தருளும் இடத்து நாட்டில் அவனி சுந்தரச் திருக்காவணமும் இட்டு...தாடவு

13 ...இப்படி சந்திராதித்தவரையுஞ் செல்லவும் பார்ப்பது உ இப்படிக்கு இவை அவனி

14 ...த்து இவை பங்களத்தரையர் எழுத்து இவை வீரையர் எழுத்து இவை

15 ...லவரையர் எழுத்து உ இவை வில்லவராயர் எழுத்து இவை

16 ...மீனவதரையர் எழுத்து இவை கானக னாடுடையார் எழுத்து இவை

17 ...இவை குருகுலராயர் எழுத்து இவை நரதுங்கராயர் எழுத்து இவை பல்

18 ...லவரையர் எழுத்து உ இவை மழவராயர் எழுத்து இவை ன்னாடுடையார் எழுத்து

19 ...இவை மீனு குலத்தரையர் எழுத்து உ இவை மனுதுங்க வேளான் எழுத்து

20 ...இவை வளவகோனார் எழுத்து உ இவை காங்கேய ராயர் எழுத்து இவை

21 ...யர் எழுத்து உ இவை சோழவிச்சாதிரி மூவேந்த வேளார் எழுத்து இவை

22 எழுத்து உ இவை காவிதி திருவேகம்பமுடையர் எழுத்து உ இவை நித்தவினோ

23 ...மதுராந்தகப் பல்லவரையர் எழுத்து இவை நரதுங்க பல்லவரையர் எழுத்து

24 ...பாண்டியதரையர் எழுத்து இவை இருமடியதரையர் எழுத்து உ

25 ...எழுத்து இவை செயதர மூவேந்த வேளான் எழுத்து இவை பாண்டிய

26 ...யராயர் எழுத்து இவை மாக[ரல்] நாட்டு மூவேந்த வேளார்

27 ...யர் எழுத்து உ இவை வாணவதரையர் எழுத்து உ இவை கனகராயர் எழுத்து உ

28 ...ழுத்து இவை வரகுணராயர் எழுத்து உ இவை கண்ட ராதித்தப் பல்லவ

29 ...டிகள் எழுத்து இவை சிங்களராயர் எழுத்து உ இவை வயிராதராயர் எழுத்து

30 ...இவை ஜெயங்கொண்ட சோழ மூவேந்த வேளார் எழுத்து இவை ஊர்க் கணக்கு

31 ...இப்படி திருவிள்ள மானம் இதுக்கு கல்வெட்டினேன் இவை அரிஊர் தச்சரில்

32 ...வாரிய ஆசாரியன் எழுத்துஸ்ரீ மஹே [ஸ்வரரக்ஷை][1]

---

1 இக் கல்வெட்டின் தொடக்கப் பகுதி முழுதும் பிற்காலத்திய சுவரால் மறைக்கப் பெற்றுள்ளது.

# 12

## ஷெ சுவர் - இராச நாராயணச் சம்புவராயன்
## ஆண்டு : 3 [கி.பி. 1348]
## 190 of 1986 - 87

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சகலலோக சக்கரவத்தி இராசநாரா[ய] ணன் சம்புவராயற்கு யாண்டு மோசுகுள 3

2 த்தூற் கருப்புழான் அரையன் திருமுண்டமழகியனான வளவதரையனேன் உடையார்

3 திருக்காமீசுரமுடைய நாயனாற்குக் குடுத்த திருனுந்தா விளக்கு ஒன்றுக்கு பறியனேரி எதிர்வாய் வடகூற்றி

4 ல் குலோத்துங்க சோழ ம[ா]ராயன் திருத்தில் தெற் கடைய தடி மூன்றுனால் குழி 335 திருனுந்தா விளக்கு ஒன்று

5 க்கும் திருநாமத்துக் காணியாகக் குடுத்தேன் உடையா [ர்] திருக்காமீசுரமுடைய நாயனாற்த வளவதரைய னேன் இவைமே

6 ாசுகுளத்தூர் கருப்புழான் அரையன் திருமுண்டமழகி யான் வளவதரையன் எழுத்து இப்படி அறிவேன் மணிகண்டன் பல்லவராயனேன்.[1]

---

1 கல்வெட்டு எண் 13இல் காணப்பெறும் பெயர்களையும், செய்தியையும் எழுத்தமைதியையும் கருத்திற்கொண்டு, இதன் காலம் சகம் 1273 [கி.பி. 1351] என்று முடிவு செய்யப்பெற்றது.

## 13

### மகாமண்டபத்து வாயிலின் நிலைக்கால்
### [இராசநாராயணச் சம்புவராயன்]
### சகம்- 1273 [கி.பி. 1351]
### 188 of 1936-37

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸகரவர்ஷம் 1273ல் மேல் கரவருஷம் மேஷ
2 குளத்தூற் கருப்புழான் அரையன் மணிகண்டனான பல்லவராயன்
3 திருநுந்தா விளக்குக்குக் குடுத்த பறியன் ஏரி எதிர் வாய் வடகூற்றி
4 ல் மீட்டான் குண்டிலும் இடை நின்றான் குண்டிலும் தடி இரண்டினால்
5 குழி 500 ரு
6 ம் திருவிள
7 க்கு ஒன்று
8 க்கும் திரு
9 நாமத்துக்
10 காணியா
11 கக்குடுத்தே
12 ன் உடையார்
13 திருக்காமீசு
14 ரம் உடைய
15 நாயிநார்க்

16 கு [இப்படி] இை

17 வ பல்லவ

18 ராயன் எழு

19 த்து திருமுண்

20 டமழகியா

21 ன் வள[வ]

22 தரையன்

23 எழுத்து [1]

1 கல்வெட்டு எண் 12இல் காணப் பெறும் பெயர்களையும் செய்தியையும் எழுத்தமைதியையும் கருத்திற் கொண்டு, இக் கல்வெட்டு இராச நாராயணச் சம்புவராயன் காலத்த தாக முடிவு செய்யப் பெற்றது.

# 14

## மேற்படி மண்டபத்துக் கிழக்குச் சுவர்
## இராச நாராயணச் சம்புவராயன் - ஆண்டு: 10
## [கி.பி.1350] 192 of 1936 - 37

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸகல லோகச் சக்ரவத்தி இராசநார
யண

2 ன் சம்பூவ ராயர்க்கு யாண்டு 10 வது ஒழுகறைப்
பற்றில் விஸ்வி

3 ய நல்லூரில் உடையார் திருக்காமச்சுரமுடை
[ய நாய] னார் கோ

4 யிலில் தானத்தார்க்கு இவூர்கள் நன்செய் புன்செய்
தோட்டப்பற்று ப

5 யிற்க் கலனை வாசல் வரி உட்ப்படப் பத்தாவது ஆடி
மாதம் முதல் கடமை

6 ஆயம் ஸ்திர முற்றவப் பெறுவதயிது உள்ளிட்ட பல
நெல்லாயங்களும் பொன்வரி காத்தி

7 கைக்கு இடும்... [பணம் வால் வினியோ]க கணக்கர்
ஆசு பொது

8 க்கள் போகாண்மை வாசல் ஒட் [மை நாட்டுவரி மக]
டு முகம் பாரவை ஊர்

9 க் கணக்கர் னியோகம் சந்து விக்ர [பாரால் வாசல்
வினி] கம் ஊர்க் கணக்கர் தட்

10 (ட)ார் பேரால் 2க்கு இடும் பணம் மு[ளசிவாசி வழி
நடை]ன் இடும் பணம் இனவரி மே

11 ற் கடம் வரி எடுத்த... அரிசிக் காணம் விருந்துப்
பட அரிசி காணம் நல்எருது நற்

12 க் கிடாக் கீற்றுவரி விலிக்கு அடைப்பு மற்றும் இப்
பற்றில் கொள்ளும் பல வரிகளும்

13 பல உபாதிகளும் உட்ப்பட இன்னாயநார்க்கு பழய
திருநாமத்துக் காணி ஆன நிலத்து

14 க்குத் தானத் தாரில் பொற் கோயில் நம்பியும் பிள்ளி
ழுதலி ப்ரமாராயனும் இட்ட முறி

15 ப்படிக்கு இன்னாயநார் திருமடை விளாகமும் காசாய
வற்க்கமும் உட்ப்பட முதல

16 டங்க இறையிலி ஆகவிட்ட இலூரில் பழம் கல்
வெட்டுப் படி நிலத்தில் பல இடத்திலு

17 ம் விட்ட நிலம் பத்து அரையே அரைமாவும் திரு
வேட்டைக்கு எழுந்தருளும் முழுதும் வில்லவன்
தோப்பும் புன்செ

18 சய்நிலம் ஒன்பதே ஆறு மாவும் கட்டு அடித்தாகலா
விட்ட நிலம் அரையே நான்மாவரையும்

19 புறையூரில் விட்ட நிலம் ஒன்றும் அரம்பள்ளம் நிலம்
அரையும் ஆக நாட்டு அளவுகோல்

---

1 கட்டு அடித்தார் களம் - என்று இருக்கலாம்.

20 நிலம் பன்திரண்டு முக்கால் வேலியும் நன்செய் நிலம் ஒன்பதே... மாவேலியும்

21 சந்திராதித்த வரையும் செல்லக்காடவது இப்படிக்குக் கல்லிலும் செம்பிலு

22 ம் வெட்டிக் கொள்ளும்படி சொல்லி விட்டோம் இன்னாள் முதல் இப்படி

23 செய்வதே இவை செயதியராயன் எழுத்து 10வது ஐற்ப்பசி மாதம் பதின்எட்டா

24 ந்தியதி எதி(ர்) அடை(வு) இட்டது.[1]

---

1 7, 8, 9 ஆவது வரிகளில், அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்கள் பொருத்தமாக இல்லை. இவ் வரிகளைக் கொண்ட கல் தனியாக இருத்தலின் இது பிற்காலத்தில் இடமாற்றம் அடைந்த கல்லாகும்.

## 15

### முதற் பிரகாரத்து வாயிலின் நிலைக்கால்
### கி.பி. 14ஆம் நூற்றாண்டு எழுத்துகள்
### 200 of 1936 - 37

1 ஸ்வஸ்திஸ்ரீ இ

2 து தத்தனூரு

3 டையான்

4 சேந்தாண்

5 டான் திருவாசல்

## 16

### முதற் பிரகாரத்து வாயிலின் இடப்பக்கத் திண்ணை
### கி. பி 14ஆம் நூற்றாண்டு எழுத்துகள்

1 ஸ்வஸ்திஸ்ரீ இது தத்தனூரு

2 டையான் சேந்தாண்

3 டான் திருவாசல் உ

# 17

## மடைப்பள்ளி நிலைக்கால்
## கி.பி. 14ஆம் நூற்றாண்டு

8 விருதராச பய

2 ங்கர நல்

3 லூர் வாணிக

4 ன் திருவேக

5 ம்பமுடை

6 யான் செங்

7 கதிற் செல்வ

8 ன் வாணாதரா

9 யன் திருவா

10 சல்

## 18

### பள்ளியறையுள் அமைந்த மேடையின் பீடம்
### கி. பி. 14ஆம் நூற்றாண்டு எழுத்துகள்

1 தேவதானக் குறடு நென்மலிப்பாங்கிழா(ர்) எழு

2 ம்போது அய்யாண்டு செவிபாடச் சேதியரா

3 யன் திருப்பணி

## 19

### முதலாம் பிரகாரம், வடக்குத் திருச்சுற்று
### மாளிகையின் விதானம்
### கி. பி. 14 ஆம் நூற்றாண்டு

1 ன்பிடாகை நாணாதேசியில் மனங்காட்டு

2 மொக்கன் அழகியான் மகன் ஆவுடையான்

3 பெரிய நாட்டுப் பணங்காட்டு மொக்கன் உ

4 டையார் பெண்ணை நெதிவாணர் திருவா

5 சல் முகவணை என் தன்மம் உ நா

6 ணாதேசில் தாணஹு எரில்[?] தெய் தெய்வ

7 நாயர்பட்டன் நல்லானேன் உ

## 20

## மகாமண்டபத்துத் தெற்குச் சுவர்
## சாளுவ மங்கு தேவன் - சகம் 1292
## [கி. பி. 1370] 191 of 1936 - 37

1 ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலீஸ்வர மேதினி மீசுர
கண்டக் கட்டாரி சாளுவ சம்புவராய ஸ்தாப
நாசாரிய த்ரிவ[ன]ராய ஸ்தாப

2 நாசார்ய த்ரிபுவன இராயகண்டர் கூளி தக்ஷிண
சுரத்தரா[ன] ஸாளுவ...மங்குதேவ மகாராஜர்
ஒழுகரைப் பற்று வில்லிய

3 நல்லூர் உடையார் திருக்காமீஸ்வரமுடைய நாய
னார்க்கு இவூர்க் கட்டளையில் ஸாதாரண
வருஷம் முதலு

4 க்கு பதின் எட்டா அளவு கோலால் விட்ட 12மா
இன்னிலம் பன்னிரண்டு மாவும் இக்கட்டளையில்
முன்பு இன்னாயனார்

5 திருநாமத்துக் காணி மரியாதி ஸந்த் ராதித்த வரையும்
ஸர்வ்வமான்ய இறையிலியாக விட்ட அளவுக்கு
இம்மரியாதி தாழ்வற நட

6 த்திக் கொள்ளவும்

## 21

### பள்ளியறைத் தெற்குச் சுவர்
### அரியண உடையார் II - சகம் 1301
### (கி.பி. 1379) 183 of 1936 - 37

1 ஸ்வஸ்திஸ்ரீ இராயன் அரியண உடையாற்க்கு செல்லா நின்ற சகாத்தம் ஆயிரத்து முன்னூற்று ஒன்றின் மேல் சொல்லா நின்ற

2 ஸித்தார்த்தி வருஷம் ஆடி மாத முதலுக்கு உடையார் திருக்காமீசுரமுடைய நாயனார் திருப்பங்குநி திருநாள் திருவிலாச் செயிது திருக்கடலி

3 லே தீத்தம் ஆசாதிக்க வில்லியநல்லூரில் கட்டளை யிட்ட பண்டார அளவு கோல்லால் விட்ட ரு 17 இந்நிலம் பத்துமாவும் உடை

4 யா[ர்] திருமுன்பே விண்ணப்பஞ் செய்து கடிதத் தில்லும் எழுதுவித்து நாட்டுக்கு எழுதின பட்டை யத்திலும் கிழித்துவிட்ட அளவுக்கு இன்னிலம்

5 பத்துமாவும் இவ்வூற் கட்டளையிலே தங்களுக்கு ஆம் என்ற ருலத்திலே முதல் அடங்க இறையிலி ஆக விட்ட அளவுக்கு இந்ருலம்

6 சந்திராதித்த வரையும் நடக்க கல்லிலும் செம்பிலும் வெட்டி கொள்ளவும் யிப்படிக்கு இவை பணிஆல் ஊற்கணக்கு ஒழுகறை உடையா[ர்] எழுத்து உ

## 22

### மேற்படி சுவர் - அரியண உடையார் II.
### சகம் 1301 (கி.பி. 1379)
### 184 of 1936 - 37

1 சுபம் சகாத்தம் 1301 மேல் இராயன் அரியண உடை யாக்கு செல்லா நின்ற ஸித்தாத்தி வருஷம் காத்திகை மாதம் 23 உ நாயனார் திருக்காமீசுரமு டைய நாயனாற்கு உழந்தை வா

2 ணியன் மழைப்பிள்ளை ஆன தென்னாட்டரையன் திருநுந்தா விளக்கு(க்கு) விட்ட ருலம் ஆவது வில்லிய நல்லூற் கட்டளையில் பெத்த...பெரு மங்கல முடையார் உம்பபுற பழ(ங்)குடியர்

3 ஊ(ர்) பட்டன் பக்கல் கொண்டு திருக்கையில் உதகம் பண்ணி குடுந்த பொல்லாத திவானவ என்று பேர்ருடைய குழி 500(33) இக்குழி ஐநூற்று முப்பத்து மூன்றுக்கும் திருநுந்தா விளக்கு ஒன்று இவிளக்கு ஒன்று

4 சந்திராதித்த வரை விளக்கு எரிய கொண்டு குடுத் தேன் நாயனார் திருக்காமீசுரமுடைய நாயனார்க்கு உழந்தை வாணியன் அரையன் மழைப் பிள்ளை ஆன தென்னாட்டரையன் என்னும்......

# 23

## மகாமண்டபத்துக் கிழக்குச் சுவரின் குமுதப்படை - அரியண உடையார் II சகம் 1303 [கி.பி. 1381] 194 of 1936-37

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸகர வர்ஷம் 1303ல் மேல் அரியண உடையா[ர்]க்குச் செல்லா நின்ற துன்மதி வருஷம் மாசி மாதம் முதலுக்கு ஒழுகறையார் திருக்காமீசுர முடைய நாயனார்க்கு திருப்பங்குனி திருநாள் உடையார் உபையம் திருக்கடலிலே தீர்த்தம் ஆ[ட]க் கட்டின இதுக்கு தங்கள்

2 உபையம் ஆகத் தாங்கள் சீபாதந்தாங்கக் கடவர்கள் ஆகவும் தங்கள் வாசலுக்கு வாசல் பணமு மற்றும் வாசலை நோக்கி வன்னியர் (கொ)ள்ளக் கடவது அல்ல ஆகவும் தங்கள் மாட்டுக்கு வால் வரிக்கு பசுவுக்கு அரைப்பணமும் எருமைக்கு முக்கால்ப் பணமும்

3 எருத்துக்கும் க கிடாவுக்கும் சு கால்ப்பணமும் ஆட்டுக்கு அரைக்கால்ப் பணமும் ஆக இவ் வகைப்படி ஆண்டு ஒன்றுக்கு கட்டுக்கவும் இது ஒழிந்து வால்வரியை நோக்க இடு முதல் தங்கள் முட்டுக்குக் கொள்ளக்கடவது அல்லது ஆகவும் இம்மரியாதி[1]

---

1 இக்கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

## 24

### மேற்படி கிழக்குச் சுவர்
### சாவன தேவ மகாராசா - சகம்
### (1309 - 1387) 195 of 1936 - 37

1 ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வர மேதினி மீசுர கண்ட கட்டாரி சாளுவ...

2 இராய கண்டர் ஸம்பூ(வ) ராயஸ் தாபநாசாரிய தக்ஷிண சுரத்தரண விபான இராய பக்ஷி

3 சாளுவ சாவனதேவ மகாராஜா வில்லியநல்லூர் ஸ்தானியர்க்கு அருளிச் செய்து அருளிநபடி

4 உடையார் திருக்காமீஸ்வரமுடைய நாயனார்க்கு வில்லிய நல்லூரில் திருநாமத்துக் காணி

5 ஸர்வ்வமான்ய இறையிலி முக்கூறு நீக்கி நின்ற ஒரு கூறு நாற்பார் கெல்லை உள்ள நன்செய் புன்செய்

6 நத்தம் வாசல்வரி வால்வரி ஏரிமீன்விலை ஒழுக்கு நீர்பாட்டம் மாவடை மரவடை

7 செக்குகடமை போக கடமை தறிக்கடமை மற்றும் எப்பேர்பட்ட (கடமை)களும்

8 உட்பட்டது ஸந்த்ராதித்தவரையும் ஸர்வ்வமான்ய இறையிலி ஆக ப்ரபவ வர்ஷம் ஆடிமாதம் முதலுக்கு

9 கல்லிலு செம்பிலு வெட்டிக் கொள்ளவும்

## 25

### மேற்படி சுவர்-சாவனதேவ மகாராசர்
### ஆட்சி ஆண்டு - இல்லை
### (சகம் 1321 - கி. பி 1399) 196 of 1936-37

1 பிரமாதிச வருஷம் புரட்டாதி மாதம் 10 உ தியதி ஸ்ரீமன் மகாமண்

2 டலீசுர மேதினி மீசுர கண்டக் கட்டாரி சாளுவ திருவன் இ

3 ராயகண்டர் கூளி சம்புவராய ஸ்தாபநாச் சாரிய தெக்ஷிண சுரத்திர

4 ணுவிபாட இராய பக்ஷி சாளுவ சாவண தேவ மகாராசா ஒழுகறை

5 ப்பற்று வில்லிய நல்லூர் நாயனார் திருக்காமீசுர முடைய நாயனார்க்

6 கு ஸர்வ்வ மானியம் இறையிலி ஆகக் குடுத்தபடி இவ்வருஷம் ஆடி மாத முதலு.

7 க்கு சோடி சூல்வரி ஸ்ரீகாரியக் கொற்றிலக்கை இறை வயிற்றுக்குக் கொள்ளு

8 ம்ˇ 60 இப் பண அறுபதும் ஸர்வ்வ மானியம் ஆகக் கொண்டு பூசை திருப்ப

9 ணியுந் தாழ்வற நடத்தி கொள்ளவும் இப்படிக்கு திருவாசலிலே கல்லு வெட்டிக்

10 கொள்ளவும் இப்படிக்கு இதுவே ஸர்வ்வ மானியம் ஆகக் கொண்டு வேண்டு குடியும்

11 ஏற்றுவித்துக் கொண்டுச் சத்தி(ய)திலே இருக்கவும்

## 26

### அர்த்தமண்டபத்து வடக்குச் சுவர்
### விருபாட்சராசர் II
### சகம் 1334 (கி.பி. 1472)
### 188 of 1902 - S. I. I, Vol. VII No. 815. & Epigraphia Indica- Vol. VII, Page 79.

1 ஸ்வஸ்திஶ்ரீ ஶ்ரீமந் மஹா மண்டலீஸ்வரந் ஹரியராய விபாடந பாஷைக்குத்த

2 ப்புவராயர் கண்ட (து) கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதாது பூர்வ்வ தக்ஷிண பச்சிம உத்தர

3 சதுசமுத்திராதிபதி கெச வேட்டை கண்டருளிய ஶ்ரீ வீரப் பிறதாப தேவ (யி) ராயமாக இராயர் குமாரர் விருப்பாக் கிஷ

4 இராயற்குச் செல்லா நின்ற சகாத்தம் 1394 மேல் செல்லா நின்ற நந்தன வருஷத்து வச்ஸிக நாயற்று பூறுவ

5 பக்கத்து தெசமியும் ஆதித்திய வாரமும் பெற்ற திருவோணத்து நாள் ஶ்ரீமந் மகாமண்டலேசுரன் மேதினி மீசு (ர) கண்ட

6 கட்டாரி சாளுவ நரசிங்க இராய உடையார் தந்ம மாக அனுக்கர் கிழார் களப்பாள (ற்) செங்கதிற் செல்வச்

ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மாத்தூர் நாட்டு
ஒழுகறைப் பற்று வில்லியநல்லூர் நாயனார்

8 திருக்காமீசுரமுடைய நாயனார்க்கு இன்னாட்டு இப் பற்றில் உலகுய்ய வந்த சோழநல்லூரான வண்ணாரக்

9 கொல்லை இன்னாயனார்க்கு திருநாமத்துக் காணி ஆதிசண்டேஸ்வர விலை ஆக விசையராயர் கைய்யில் கொண்ட

10 சாதனப்படிக்கு இன்னாயனார்க்கு சறுவமான்னியம் முதலடங்க இறையிலியாக விட்ட விளக்கு சந்திரா தித்த வரையும் திருநாமத்துக் காணி முதலடங்க இறையிலியாக நடக்க கிடவதாகவும் இந்த திரு நாமத்துக் கா

11 ணி முதலடங்க இறை (யிலியாகக் கொ) ண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும் இவை...கிழான் செங்கதிற் செல்வன் எழுத்து உ

# 27

## பள்ளியறைத் தெற்குச் சுவர் அச்சுத தேவராயர் சகம் 1454 (கி. பி. 1532) - 182 of 1936 - 37

1 ஸ்வஸ்திஸ்ரீமந் மஹா மண்டலேசுரன் பா

2 ஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவராயர் க

3 ண்டன கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு

4 கொடாதான் துலுக்கத்தள விபாடன் கெசவேட்

5 டை கண்டருளின ஸ்ரீவீரப்பிறதாப அச்சுந்த

6 தேவமஹாராயர் பிறிதிவிராச்சியம் பண்ணி

7 அருளாநின்ற ஸகாத்தம் 1454 மேல்ப்

8 செல்லாநின்ற நன்தன வருஷம் காத்திகை மாத

9 ம் 8ய அக கத பூற்வ பக்ஷத்து திருவே(ா)ணமும் பெற்

10 ற சோமவாரத்து நா(ள்) செயங்கொண்ட சோழ மண்ட

11 லத்து மாத்தூர் நாடான ஒழுகறைப்பற்று வில்லிய

12 நல்லூர் நயினார் திருக்காமீசுாமுடைய நயினார் திருனா

13 மத்துக் காணியான வில்லியநல்லூர் வண்ணாரக்கொ

14 ல்லை புத்திர்ரான் பட்டுப் பிறையூர் மருதமுடை யான் ப

15 ட்டு இந்த திருனாமத்துக் காணியான தேவ
மண்டலத்

16 துக்கு அரைமனைக்குச் சோடி இருபது பொன்
கெ(ர)ண்டு

17 வருகையில் அச்சுந்தய தேவமஹாராயற்கும் ராம

18 ர் பட்டரய்யனுக்கும் புண்ணியமாக வேணுமெ

19 ன்று சறுவப்பையயன் சோடி இருபது பொன்னும்

20 கழித்து சறுவ மானியம் பண்ணிக் குடுத்தோம் ச

21 ந்திறாதித்த வரையும் இம்மதிகாரி[1] நடத்தக் கடவத

22 ாகவும் இதுக்கு யானதாருவன்[2] அகுதம் பண்ணி

23 னதே-மாகில் கெங்கைக் கரையிலே காரா

24 ம் பசுவைக் கொன்ற பாவத்திலும் பிறுமாத்தியா[3]

25 தோஷத்திலும் தன்னுடைய மாதா பிதா குருவு (க்கு)

26 இரண்டு நினைத்த பாவத்திலும் போகக் கடவ

27 தாகவும் இப்படிக்கு சறுவப்பயன் எழுத்து.

---

1 இம்மரியாதி - என்று இருத்தல் வேண்டும்

2 யாதொருவன் - என்று இருத்தல் வேண்டும்

3 பிரம்ஹத்தி தோஷம் என்று இருக்க வேண்டும். பிராமணரைக் குறிக்கும் - கல்வெட்டு எண் 38இலும் இவ்வாறே கொள்க.

## 28

### மேற்படி சுவர்
### அச்சுத தேவராயர்
### சகம் 1459 (28-5-1536)
### 181 of 1936-37

1 சுபத்தி ஸ்ரீமன் மகாமண்டலேசுர சிறிவீரவச்சு

2 தைய தேவ மகா இராயர் பிறுதிவி இராச்சியம் பண்

3 ணி அருளாநின்ற சகாற்த்தம் 1459 இதின்மேல்

4 செல்லா நின்ற தும்முகி வருஷம் இசபநாயற்று பூறுவ

5 பக்ஷித்து அஸ்தமும் பெற்ற ஆதிவாரத்துநாள் செய

6 ங்கொண்ட சோழமண்டலத்து புதூர் இளங்கோ

7 டத்து தொண்டை மண்டலத்து மாத்தூர் நாட்டு ஒழு

8 கறைப் பற்று வில்லிய நல்லூர் நயினார் திருக்காமீ

9 சுரமுடைய நயினார்க்கு திருநாமத்துக் காணிக்கும்

10 பிழை பொறுத்தா (ர்) பிள்ளைக்கு புண்ணியமாகவும் (க?)

11 (ண?)மா கணக்கப்பிள்ளையிக்கு நாயினார் வாவுக்கும் முன்

12 பே வரும் தேவதானமாக விட்ட வண்ணத்தான் பட்டும் செ

13 ங் கழுநீர் பள்ளமும் சறுவமானியமாக விட்ட

14 து இது சந்திராதித்த வரையும் நடக்க கடவதாக

15 வும் இதுக்கு யாதொருத்தந் அகுதம் பண்ணினவ

16 ன் கெங்கை கரையிலே காராம் பசுவைக் கொன்ற

17 பாவத்திலும் பிறுமாத்தியா தோஷத்திலும் தன்னி

18 டமாதா பிதா குருவுக்கு இரண்டு நினைத்த பாவத்திலும் போ

19 க க (ட)வதாகவும் இவை பிழை பொறுத்தார் பின்னை

20 எழுத்து இவை வண்ணத்தான் பட்டு கருநாகையர் எழுத்து

## 29

### இரண்டாம் பிரகாரத்துக் கிழக்குச் சுவர் வாயிலின் வடக்குப் பக்கம் - அச்சுத தேவராயர் சகம் 146(4) (கி. பி. 1542) 201 of 1936-37

1 ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலீஸ்வர அரியராய விபாட...
2 வேட்டை கண்டருளிய ஸ்ரீ வீர பிறதாப அச்சு'...
3 பண்ணி அருளா நின்ற சகாத்(த)ம் 1460...
4 சோபகிர்த்து சித்திரை மாதம் இருபத்தி ஓ [1]...
5 கைக் கோளர் விருது இலை வாணிகர்...
6 தங்கள் விருது என்ற இ ......காத்து ...
7 கை (கோளர்) விருது குமுதப் படையில்...
8 கல்வெட்டு வித்துப் போக...
9 யிக் கோளரும் தேவாங்கரும் ஊர் வீட்டுப் வீறப்...
10 பட்டுப் போகையில் ..................(திரு)
11 மலை தேவ மகாராசர் சீர் காரியத்துற்கு கற்தரான
12 விஜயராயரும் நாட்டுத் தலையாரிரும்......லந்திமு...
13 விசாரித்து காஞ்சிபுரத்து செப்பேட்டுபடியே
14 கொள்ள வித்து கண்டியை தேவன் காலிங் (கராயன் பட்ட)
15 மானம் காத்தான் உலகெ (லாம் வென்றான் ......
16 முதீர்த்து ஆமென்று இருந்"......
17 பர் குமுதப் படையில்' [2]........

---

1. ஆண்டறிக்கையில் சித்தரை 5 என்று உள்ளது.
2. இக்கல்வெட்டின் பெரும்பகுதி புதிய கட்டடத்தில் மறைந்துள்ளது.

# 30

## மகா மண்டபத்துக் கிழக்குச் சுவர்
## சதாசிவ தேவமகாராயர்
## சகம் 1472 (கி. பி. 1550) 193 of 1936 - 37

1 ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹா மண்டலேஸ்வர ராஜாதிராஜ
ராஜபரமேஸ்வரன் வீரப்ரதாப ஸதாஸிவ
மஹாராயர் ப்ரிதிவிராச் (ய, ம் ப(ண்)ணி
அருளா நின்ற ஸகாத்தம் 1472 மேல்
செல்லா நின்ற சாதாரண வருஷம்

2 தை மாதம் 9 (பௌ) ம வாரம் மஹா மண்டலேசுரன்
நாராயண தியாக சமுத்திர இம்மடி தோரா
அத்த சிந்தய தேவ மகாராசாவின் (மகனார்)
விம்ம தேவ மகாராசாவும் கோவிந்த தேவ
மகாராசாவும் நயினார்

3 திருக்காமீசுர நயினாற்கு வில்லிய நல்லூர்
வண்ணாரக் கொல்லை புத்துழாந்பட்டு
பிறையூர் வண்ணக்கந்பட்டு மருதமங்கல
முடை

4 'பாந்பட்டு இந்த க்ராமங்களும் ஆதித்தவாரம்
வுள்ளிட்ட காணிக்கையும் ... ...வியும் ஸர்வ்

- வமானியமாக நடக்கயில்......இதில் சோமமுகம்......

6 கை நல்லெருது நற்பசு பொதுவில் இவூர் சிலவு
வேண்'... ...

7. நடக்கயில் அதிகாரிக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டாளு......

8. இடக்......டுக்கு மாதம் ஒன்றுக்கு பங்குக்கு ஒரு ஆளுக்கு பிற ......

9 இதுக்குமேல் ஒரு காசும் வாங்க கடவோமல்லவோ...

10 ன்று சறுவ மாநியமாக விட்டோம் இந்தப்படிக்கு நயினார்

11 திருக்காமீசுர நாயினார் சீபாதத்னாதாணையே தப்ப கடவர் அல்

12 லவாகவும் இதுக்

13 கு தப்பிநவன் கெ

14 ங்கை கரையிலே

15 ல கா(ராம்பசு)

16 வையும் கொன்

17 று பிதாவையும் கெ

18 ான்ற மாதாவை கெ...

19 மனம் பண்ணின

20 பாவத்தே போகக

21 டவராகவும் இவை

22 வி(ம்) மராசாவின் எழுத்

23 து இவை கோவிந்தரா

24 சர் எழுத்து

## 31

### மகா மண்டபத்து வடக்குச்சுவர்
### ஸ்ரீரங்கதேவர் சகம் 1497 (கி.பி.1575)
### 198 of 1936—37

1 ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலீஸ்வர... தெஷைந அரிய ராய விபாடந பர்ஷைக்கு தப்புவராயர் கண்டன கண்டநாடு

2 கொண்டு கொண்டநாடு குடாதான் துலக்கர் தள விபாடன கஜபதி தத்தரம்ஸ வயிரி எம்மண்டல முங் கொண்ட இரா(சா)தி ராய இராச

3 பரமேஸ்வரந் சீரங்க தேவ மகாராயர் பிரிதிராச்சியம் பண்ணியருளா நின்ற சகாத்தம் 1497 எல்மேல் செல்லா நின்றயுக சங்கி வஷரம்

4 தையி மாஸ 23 உ பஞ்சமியும் ஹஸ்தம் பெற்ற ப்ரகஸ்பதி வாரத்து நாள் ஜெயங்கொண்ட சோழ மண்டலம் திருமுனைப் பாடி மாத்தூர்

5 நாட்டு ஒழுகறைப்பற்று... சந்திரகிரி ராச்சியத்தில் படை வீடு உசாவடியான வில்லிய நல்லூரில் சுவாமி

6 திருக்காமியப்பர்... நாட்டவரும் கூடிக் கண்மாளனு... பண்ணி பாடை பரிவட்டம்[1]

---

1 இக்கல்வெட்டின் இறுதிப்பகுதி புதிய கட்டடத்தால் மறைக்கப்பட்டுள்ளது.

## 32

### கிழக்குக் கோபுரத்தின் கிழக்குச் சுவர் &
### விநாயகர் கோயிலின் உட்புறம்
### வேங்கடதேவராயர் சகம் 1521 (கி.பி. 1699)

1 சகாப்தம் 1521 ஹு மேல் செல்லா நின்ற விகாரி
வரு...சாறுவரி வருஷம் ஆடி மீ மூன்...

2 மன்ராசாதிராச ராசபரமேஸ்வர வீரபிறதாப வேங்கட
...பிறுதிவி ராசியம் பண்ணு கயி...

3 ஒழுகறைப் பற்றில் பூந்துறையில் சேந்த கோணம்
பட்டு... திருக்காமினல்லூர் திருகாமிய...

4 ஞைகப்... சூரன் சோணாகல...க க் ரர் புண்ணியம்...
சந்திராதிது வரையும் நட...

5 மிருகு யாதா...மாதா பிதாவை காராம் பசுவை[1]...

---

1 இக்கல்வெட்டின் முதல் இடை இறுதிப் பகுதிகள்
புதிய கட்டடங்களால் மறைக்கப் பெற்றுள்ளன.

# 33

## கிழக்குக் கோபுர வாயிலின் உட்புறத்து வடக்குச் சுவர் - கி.பி 17-ஆம் நூற்றாண்டு எழுத்துகள். 202 of 1936 — 37

1 விளம்பி ஹு காற்திகை பு 30உ சுவாமியார் திருக்கா மீசுரமுடைய சுவாமியாற்

2 கு பாவோதி தாயப்பனிட புண்ணியமாக பரிய னேரியில் அவரிடமானபடி நன்சை குழி 400 ருக்கு கட்டளைக்

3 கு நாள் 1க்கு திருவிளக்கு உ மாலை உ ஆற்று திருமஞ்சனக் குடம் உ இந்தபடிக்கு சந்திராதித்த வரை

4 நடக்க கடைவராகவும் யிந்த புண்ணியம் நடத்தின பேற்க்கு பிற (ந்)

5 தார் வணாசுலத்தில்[1] ஆதி வாரத்தில் அருணை உதைய காலத்தில் முழு

6 கின பலன் பெற்று மேன்மேலும் அதிக சம்பத்து உண்டாயி நடக்க

7 கடைவராகவும் யிந்தப் படிக்கு கொ[2]

---

1 வர்ணாசுரம் - என்று இருக்க வேண்டும். இது காசியைக் குறிக்கும்.

2 இக் கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

## 34

### மகா மண்டபம் - வடக்குச் சுவர்
### 17-ஆம் நூற்றாண்டு. தெலுங்கு
### 197 of 1936 - 37

1 காளயுக்தி நாம சம்வத்சரம்

2 கார்த்திக பகுல அஷ்டமி

3 நூதலு பத்ம நாபய்யதி

4 சம்சிதா ஸ்ரீ சேவா

## 35

### திருக்குளத்துக் கிழக்குச் சுற்று மண்டபம்
### சகம் 1687 (கி.பி. 1765) 205 of 1936 - 37

1 சாலிவாகன சகாப்த்தம்

2 1687 ஹும் மேல்

3 செல்லா நின்ற பார்த்திப ஹும்

4 ஆடி மீ 5 உ மடுக்குறை ராமு செ

5 ரட்டியார் கட்டி வைத்த மண்டபம்

# 36

## தெற்குக் கோபுரத்து உட்பக்கம் கிழக்குச் சுவர்
## கி. பி. 18ஆம் நூற்றாண்டு எழுத்துகள்
## 203 of 1936 - 37

1 சிவஞான தேசிகர் வாக்குப்படிக்கு
2 கர ஷ்டு த்துக்கு செல்லும் நந்
3 தன ஷீ ஆடி புல உ வழுதா வூ(ர்) சீ
4 மை கிணாசாரிக்கம் திருக்காமியீசு(ர)
5 ப்பர் சுவாமியாருக்கு முந்நாள் பிஷ்
6 ஷாபதிராயர் திருவிளக்குக்கு தாரை
7 வாத்த தன்மம் துலக்க திவானத்தில்
8 வழுதா வூர் சீமை நாட்டார் சகல
9 மான பேரும் ராயோசி பண்(டி) தெருக்கு
10 சொல்லி பூறுவாபூறுவம் நடந்தபடி
11 சாமியாருக்கு கட்டளை யிட்டார்கள் வி
12 ந்த தன்மதுக்கு யாதாமொருவர் அ
13 குதம் பண்ணினால் காராம் பசுவை
14 கொன்ற தோஷத்திலும் மாதா பி
15 தாவைக் கொன்ற தோஷத்திலே பே
16 ாகக் கடவராகவும் உ கெங்கைக் க
17 ரையிலே காராம் பசுவை கொன்ற
18 தோஷத்திலே போகக் கடவாராகவும்

## 37

### வசந்த மண்டபத்துச் சுப்பிரமணியர்க்கோயில்
### கி.பி. 1880. தமிழ் & பிரஞ்சு

1 வில்வ நல்லூர்
2 கலியுகாதி 4982 ஸூம்
3 புதுவைக்கி
4 குவர்நேராய் வந்திருந்த
5 ம-ஸ்ரீ-ஸ்ரீ முசியே
6 லெயொன்ஸ் லொழியே துரை
7 அவர்கள் துரைத்தினத்தில்
8 பூர்விக கட்டிடங்களை பழுதுபார்த்து
9 பலப்படுத்தும்படி யேர் பாடாய்
10 முதலிந்த போபுரவேலை
11 துவக்கி தீர்ப்பாச்சுது

Villenour

1 Restaure Comme
2 Monument Historique
3 Sous L'administration
4 De M. Leonce Laugier
5 Offlcie de Lalegion Dhonneur
6 Et de L'instruc(t)ion Publique
7 Gouverneur Civil
8 De L'inde Francaise
9 1880
10 விக்கிரம ஸூ
11 உக்ரமூர்த்தி. ஆ.

## 38

### மேற்படி மண்டபம் விநாயகர் கோயில்
### கி. பி. 1887. தமிழ், தெலுங்கு & பிரஞ்சு

ஹூ

1 இந்த வசந்த மண்டபம்

2 புதுவை ம. ள. ள கலவை

3 சுப்பராய செட்டியார்

4 குமாரரும்

5 பரிசு பட்டணத்து அக்காதெமி

6 என்னும் சாஸ்திர சங்கத்தின்

7 ஒப்பிசியே என்னும் பட்டம்

8 பெற்றவரும் முனிப்பாலித்தே

9 மாம்பரும் இந்த தேவஸ்தானத்து

10 தர்மகர்த்தருமாகிய ம-ள-ள-

11 கலவை சதாசிவ செட்டியார்

12 அவர்களால் கட்டப்பட்ட

13 திருப்பணி தருமம்

14 சர்வசித்து ஹூ சித்திரை மீ 4. உ

## தெலுங்கு

1 ஈ வசந்த மண்டபமு

2 புதுச்சேரி மா ளா. ளா. கலவி சுப்பராய செட்டிகாரி

3 குமாருடு

4 மா. ளா. ளா. கலவி சுப்ராய செட்டிகாரி வல்ல

5 சேயபடின தர்மமு

6 சர்வஜித்து சம்வஸ்ர மு சைத்திர நெல

7 4 தேதி

## பிரஞ்சு

1 Ceportique

2 Aete Construit Par Les Soins

3 DE M. Calve Sadassiva Chettiar

4 Conseiller Municipal

5 ET Officier D'acad'emie

6 A Pondichery

7 LE 15 Avril 1887

உ. மாணிக்க ஆசாரி

# 39

## கல்வி மடத்துக்கு வெளியே நடப்பட்டுள்ள கற்பலகை

## கி. பி. 15ஆம் நூற்றாண்டு எழுத்து

## 207 of (1936 - 37)

1 ஸ்வஸ்தி ஸ்ரீமந் மெய் ...சந்ததி ...

2 புரம் ஞானதேசிகர் புனித மெஞ்ஞான

3 மாமுனிக்கு திருக்குளத்தின் வடக்கு

4 மடத்துக்கு அதிகாரம் ஒட்டப் பூண்

5 டி ராம இரட்டியாரும் ஒழுகறை

6 முதலியார் பங்கனத்தரையர் வி

7 ரையரராயர் வன்னியாரும் தானத்தா

8 ரும் வில்லவராயரும் ஒழுகறை உ

9 டையாரும் குருவி மூலையில் விட்ட

10 நஞ்சை குழி 700 ரும் புஞ்சைக் குழி

11 600 மடத்துக்கு வடக்காக விட்ட

12 குழி 400 ரும் தொண்டை மாநத்த

13 த்தில் ஊரவரும் அதிகாரம் ரெ

14 ட்டியாரும் அத்திக்கிணற்றுக்கு

15 மேற்கில் விட்ட நஞ்சை குழி 500 பு

16 ஞ்சை குழி 500 ஆக இந்நிலமெ

17 ல்லாம் சறுவ மானியமாக சந்திரா

18 தித்தவரை நடக்க கடைவுதாக

19 வும் இதுக்கு அகுதம் ப

20 ண்ணினவர்கள் பஞ்ச

21 மாபாதகம் சிவத்துரோ

22 கம் குருத்துரோகம் ப

23 ண்ணின பாவத்திலே

24 போக கடை வராகவும்

## 40

### கல்வி மடத்துச் சந்திரமௌலீசுவரர்க் கோயிலின் வாயில்

### 16ஆம் நூற்றாண்டு

### 206 of 1936-37

1 மெய்கண்ட கணத்தின் எட்டாஞ்...

2 சிஷ்யர் திருவக்கரை மெஞ்ஞான மாமுனியின் கல்மடம்

3 யிந்த ஆதீநத்துக்கு கற்தரான சிஷ்யர் திருநாவலூர் நந்திகேஸ்வரர்

## 41

### கல்விமடம்-சமாதிக் கோயில்
### சகம் 4040 (?)

1 கலியுக சிகார்த்தம் 4040

2 விகாரி ஸு வைகாசி மீ 20 உ

3 திருவக்கரை ஆதீனம் கல்விமடாதி

4 பதி குருமுகுற்த கோவில் திருப்பணி

5 செய்வித்த தற்மகற்தா புதுவை

6 வல்லூர் மேழிவான்[1] கோத்திரம்

7 தரகு சுப்புராய முதலியார் குமா

8 ரன் அருணாசல முதலியார்

9 தருமம்

10 சுபமஸ்து - சிவமயம்.[2]

---

1 மேழி-ஏர். மேழிவான் கோத்திரம்-பலராமர்-கோத்திரம் "மேழி வலன் உயர்த்த வெள்ளை நகரமும்" வெற்றிதரும் கலப்பைப் படையினை ஏந்திய பலராமனுடைய கோயிலும்" என்று மேழி பலராமனுக்குரிய படையாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. 14 : 9

2 இக்கல்வெட்டு 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதில் குறிக்கப்பெற்றுள்ள சகர யாண்டு பிழைபட உள்ளது.

# 42

## இராமபரதேசி சமாதி
## சகம் 1791 (கி. பி. 1868)
## தமிழ் - ஆங்கிலம்

1 ஓம்

2 மகாத்துமா

3  றாமபரதேசி

4 சுவாமியார்

5 சமாதி

6 சாலிவாஹன சகாப்தம் 1791

7 TOMB OF

8 RAMAPARADAS

9 AN HERMIT

10 1868

## 43

## கல்வி மடம்

## சகம் 1794 (கி.பி.1871)

1 கல்வி மடம்

2 சிவமயம்

3 வில்வநல்லூர் மெஞ்ஞான மாமுனி தேசிகரவர்கள்

4 குருமுகுர்த்தம் சதா சேவை

5 இராய வேலூர் துளுவ வேளாள மரபு

6 வெங்கிடசாமி முதலியாரவர்கள் கட்டளை

7 ப்படி ஷெயார் பத்தினி அனந்தம்மாள்

8 செய்த திருப்பணி சாலிவாகன சகம்

8 1794 ஹ செல்லும் பிறசோத்தி வருடம் 1794

## 44

# அனந்தம்மாள் சத்திரம்
## சகம் 174 (கி.பி. 1871)

1 சாலிவாகன சகாப்தம் 1794

2 பிரசோத்பத்தி ஹு

3 இராயவேலூர் கங்கை குலம் துளுவ வேளாள மரபு

4 வெங்கிடசாமி முதலியாரவர்கள் பத்தினி

5 அனந்தம்மா அவர்களுடைய தருமசத்திரம்

6 இந்தம்மா மேழியனூர்—தாதப்பிள்ளை குமாரத்தி

7 இது விஷயமாய் நாளது 1871ம் ஆ

8 மேமாதம் 19உ சர்க்காரில் பதிவாயிருக்கிற

9 தருமசாதனப் படிக்கியெல்லாம்

10 ஒழுங்காய் எப்பொழுதும் குறை

11 வில்லாமல் நடந்து வரவேண்டுவது

குறிப்பு :

# எடுத்தாண்ட நூல்கள்

## தமிழ்


1 ஆனந்தரங்கப் பிள்ளை தினப்படி சேதிக்குறிப்பு

2 கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள் (1974)
புலவர் சு. குப்புசாமி

3 கலித்தொகை

4 சிலப்பதிகாரம்

5 தனிப்பாடல் திரட்டு

6 திருபுவனை — புலவர் சு. குப்புசாமி

7 பஞ்சரத்தினம் — (1899)
காஞ்சிபுரம் சபாபதி முதலியார்

8 பல்லவனும் பராந்தகனும் (1972)
புலவர் சு. குப்புசாமி

9 புறநானூறு

10 வரலாற்று வடிவங்கள் (1976)
புலவர் சு. குப்புசாமி

11 வில்லைப் புராணம் — வீரராகவகவி

12 வில்வநல்லூர் குயிலம்மை மாலை (1899)
காஞ்சிபுரம் சபாபதி முதலியார்

## ஆங்கிலம்


13 A Forgotton Empire — R. Sewell

14 A History of Gingee and its Rulers (1942)
C. S. Srinivasachari M.A.,

15 Annual Reports on South Indian Epigraphy

16 Census of India — 1961

17 Epigraphia Indica, Vols

18 History of South India from 900 A.D. to 1565 A. D. (1977) Dr. A. Krishnaswami

19 History of Vijayanagar Empire up to 1565 A. D.
Dr. A. Krishnaswami

20 Political Geography of the Chola Country (1973)
Y. Subbarayalu

21 South Indian Inscriptions, Vols.

# அரும் பெயர்ப் பட்டியல்

அகத்தீச்சுரம் 76
அகரம் 68, 69
அச்சம்பள்ளம் 82
அச்சுத தேவராயர் 53, 54, 57
72, 73, 74, 106, 111, 113
122
அண்ணாநாடு 61
அத்திக்கிணறு 78, 122
அபிராமேச்சுரம் 63, 64, 71
அம்மங்காதேவி 43
அரசங்குழி 82
அரசச் சின்னம் 117
அரசூர் நாடு 61
அரம்பள்ளம் 82
அரிலூர் 67, 68
அரிசிக் காணம் 93
அரியரன் I 49, 50
அரியன உடையார் 11
50, 69, 92, 99, 105, 113
அருகூர் மகாதேவர் 68
அருணாசலக் கவிராயர் 40
அருணாசலம் 40
அருணாசல முதலியார் 125
அரையன் மழைப்பிள்ளை
105
அலாவுதீன் சிக்கந்தர்ஷா 50
அவனி அளப்பிறந்தான்
சதுர்வேதி மங்கலம் 69
அவியனூர் நாடு 61
அனந்தம்மாள் 125
அனந்தீச்சுரம் 76
ஆங்கிலேயர் 37, 78
ஆர்க்காட்டு நவாபு 58, 74
ஆலந்தூர்க்காரர் 69, 70
ஆள்வரி 93
ஆள் தேவை 93
ஆற்றூர்க்கூற்றம் 61
ஆனந்தரங்கப் பிள்ளை
நாட்குறிப்பு 42 78
ஆனைச்சாலை 92
இடையாற்று நாடு 61
இடைவரி 91
இம்மடி தோராத்த சித்தைய
தேவர் 58
இராகோஜி பண்டிதர் 58
இராசகம்பீர ராச்சியம் 48
இராச நாராயணச் சம்புவ
ராயன் 47, 48 49, 73, 76,
87, 102, 104, 112

இராசராச சோழன் 61,64,65, 68, 71
இராசராச சோழன் III 46
இராசராச நரேந்திரன் 43
இராசராச வளநாடு 60,61,62
இராசாதிராச சோழன் I 76, 79
இராசேந்திர சோழன் I 43, 79, 87
இராயவேலூர் 80
இராம அப்பூதயம் 49
இராமதேவன் 50
இராமப் பரதேசி 125
இராமபட்டர் 105
இராமராயர் 54
இராமன் 55
இராமு ரெட்டி 77, 111, 122
இருதலைப் பறவை 116
இரும்பை 63
இலை வாணிகர் 121
இனவரி 93
இஸ்மாயில் அடில்ஷா 53
உடைக்காட்டு நாடு 62
உடையபெருமாள் காடு வெட்டிகள் 57, 120
உதய மார்த்தாண்டவர்மன் 53
உம்பபுரம் 80
உமாபதி முதலியார் 41
உலகெலாம் வென்றான் 120
உழுந்தை 69, 70, 105
உளுந்தூர்ப்பேட்டை 45, 69
ஊசுட்டேரி 86
ஊர்க்கட்டளை 83
ஊர்க்கணக்கு 94
ஊர்நத்தம் 84
ஊர் விநியோகம் 91
எட்டூர் நரசிம்மாச்சாரியார் 52
ஏகாம்பரநாதச் சம்புவராயன் 48
ஏமப்பேரூர் நாடு 61
ஏரிமீன் விலை 90
ஐதராபாத்து நிஜாம் 86
ஒழுகரை 57, 63, 66, 67, 70, 71, 72, 75, 86, 87, 94, 95, 96, 100, 122
ஒழுகு நீர்ப்பாட்டம் 90
ஒழுக்கை வடகரை 71
ஓயிண்டேரி 70
ஓலாந்தே 69
ஓய்மா நாடு 48
ஔரங்காபாத் 74
கங்கை கொண்ட சோழபுரம் 45
கங்கை கொண்ட சோழ வாய்க்கால் 87
கச்சியப்பர் 124
கடம்பன்காணி 84
கடமை 89
கடைக் கூற்றிலக்கை 93
கண்டாமணி 102
கண்டியத்தேவன் 120
கண்ணாறு 84
கணக்கு நியோகம் 92
கமலாபுரி 96
கயற்பாக்கை நாடு 61
கல்தச்சர் 68
கல்விமடம் 123
கலிங்க நாடு 52
கலியாணபுரம் 49
கழனி வாயில் 80
கஜபதி 52
காசாயம் 90
காஞ்சிபுரம் 35, 38, 48, 80, 121, 123, 124
காணி 84
காமீசம் 65, 96

காமீசர் 96
காலிங்கராயர் 120
காவேரிப்பாக்கம் 117
கிருஷ்ணதேவராயர் 53
கீழ்க்கொன்றை நாடு 61
கீழாமூர் நாடு 61
கீற்றுவரி 93
குடிமை 89
குண்டா 49
குண்டில் 83, 87, 104
குத்தி 54
குதிரைப் பந்தி 92
குமார கம்பணர் 48, 49
குயிலம்மை 41, 42, 115, 116
குயிலம்மை மாலை 41, 42,97 123
குருசாமிக் குருக்கள் 40
குருமுகூர்த்தக் கோயில் 124
குருவி மூலை 84, 122
குலசேகர மாவலி வாணராயர் சந்தி 98
குலோத்துங்க சோழநல்லூர் 63, 67, 71
குலோத்துங்க சோழ மாராயன் திருத்து 83, 104,
குலோத்துங்க சோழ மூவேந்த வேளான் 57
குலோத்துங்க சோழ வாய்க் கால் 87
குலோத்துங்க சோழன் I 43, 44, 66, 88, 101, 102, 109, 110, 111
குலோத்துங்க சோழன் II
குலோத்துங்க சோழன் III 45, 46, 56, 57, 60, 71, 103 110, 110, 119
குவளைய நாடு 62
குற்றேத்தப் பற்று 83
குறுக்கைக்கூற்றம் 62
குன்றத்தூர் நாடு 62
கூடப்பாக்கம் 69
கூடல் இலாடைப்பாடி நாடு 62
கூற்றம் 59
கூற்றிலக்கை 93
கைக்கோளர் 120, 121
கொடித் திருநாள் 73, 100
கோகிலாம்பாள் 42, 115
கோட்டுர் 80
கோட்டூர் கிழான் 110
கோட்டை மேடு 38
கோப்பெருஞ் சிங்கன் 36, 45, 46, 57, 65, 68, 71, 75, 77, 86, 97, 109, 110, 114, 115, 119, 120
கோயில் நத்தம் 84
கோவர்த்தனக் கிரமவித்தன் 64
கோவிந்ததேவ மகாராசர் 58
சதாசிவ செட்டியார் 115
சதாசிவராயர் 54, 55, 58, 72, 74, 106
சதுர்வேதி மங்கலம் 60, 64, 65, 67, 79
சதுரம் 8
சந்திரகிரி [செஞ்சி] 55
சந்திரசேகரர் இரட்டை மணி மாலை 41
சந்தி விளக்கு 98
சந்து விக்ரகம் 92
சபாபதி முதலியார் 123
சம்புவராயர் 36, 47, 65, 97
சம்புவராய ஸ்தாபனாச் சாரியன் 50

சறுவப் பையன் 57, 106
சாமுதாயம் செய்வார் 101
சாரம் 39
சாவனதேவர் 21, 99
சாளுவ அப்பூதயம் 49
சாளுவ நரசிம்மர் 52 106
சாளுவ மங்கு 49, 105
சாளுவ வீர நரசிம்ம நாயக்கர் 53
சிங்கார முதலியார் 41
சிம்மராசர் 58
சிவஞான முனிவர் 124
சீகாரியக் கொற்றிலக்கை 93
சூல்வரி 99
செக்கிறை 90
செக்குக் கடமை 90
செங்கதிர்ச் செல்வன் 112
செங்கழுநீர்ப் பள்ளம் 80, 105, 106
செங்குன்ற நாடு 61
செஞ்சி 55, 81
செயங்கொண்ட மண்டலம் 60, 61
சேதிராயன் 114
சேந்தகோணம்பட்டு 80
சேந்தமங்கலம் 45, 46
சேந்தாண்டான் திருவாசல் 111
சைவமடம் 36, 38, 122
சோடி 92, 99
சோழகுல சுந்தரிவதி 88
சோழகோனார் 75
ஞான தேசிகர் மடம் 78
ஞானப்பிரகாசர் மடம் 124
தச்சுத்தேவை 90
தட்டொலிப்பாட்டம் 91
தடி 84
தத்தனூர் 80, 111
தம்பியாண்டி முதலியார் 40
தரமிலி 85
தருமபாலச் சோழன் 96
தரை விநியோகம் 91
தலைக்கோட்டைப் போர் 55
தலைவரி 93
தறிக்கடமை 91
தாண்டவராய தம்பிரான் 41
தாயாரம்மாள் 125
திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலம் 79
திரிபுவனராய ஸ்தாபனாச்சாரியன் 50
திருக்காமிநல்லூர் 67
திருக்காமீச்சுரமுடையார் 97
திருக்காளத்தி 53
திருக்காமியப்பர் 97
திருத்தேர் 101
திருநாவலூர் 123
திருநீற்றுச் சோழ நல்லூர் 66, 67
திருபுவனை 68, 76, 79
திருமங்கலம் 80
திருமந்திர ஓலை 56
திருமலை 54
திருமலைராயர் 55, 58, 120, 121
திருமுழுக்குத் திருநாள் 99
திருவக்கரை 80, 86, 122, 123, 124
திருவக்கரை மெஞ்ஞான மாமுனி 38, 41
திருவாண்டார்க் கோயில் 70
திருவாமாத்தூர் 63, 64, 65, 71
திருவாவடுதுறை ஆதீனம் 41, 124
திருவாய்மூர் 80

திருவிதாங்கூர் 53
திருவெண்ணெய் நல்லூர் நாடு 62
திருவிளக்கு 106
திருவேகம்பமுடையான் 113
திருவேட்டைத் திருநாள் 102
திருவையாறு 51
தில்லை மேஸ்திரி 38
துய்ப்ளே 42
தேவதானக்குறடு 114
தேவதானம் 60
தேவராயர் 51
தேவாங்குச் செட்டியார் 121
தோட்டப் பற்று 83
தொண்டை மண்டலம் 61
தொண்டைமா நத்தம் 77, 78
நடுவரிவார் 96
நந்தாவனம் 103, 110
நந்தாவிளக்கு 96, 98, 104, 120
நந்திகேசுவரர் 123
நந்திமங்கலம் 80
நந்தியராயன் 109
நரசிங்கநாதர் 96
நல்லியக்கோடன் 48
நல்லூர் 50
நாசர்ஜங் 86
நாட்டு அளவுகோல் 85
நாட்டுத் தலையாரி 121
நாட்டு விநியோகம் 91
நாடு 59, 60
நென்மலிப்பாக்கம் 80
பங்களத் தரையர் 122
பங்குனி 99, 105
பஞ்சரத்தினம் 41, 123
பட்டமானங் காத்தான் 120
பட்டான் பாக்கை நாடு 62
படைப்பற்று 83
படைவீடு 48
பண்டார அளவு கோல் 85, 105
பதினெட்டாம் அளவு கோல் 85
பரமக்கு தும்பிச்சி நாயக்கர் 53
பராக்கிரம பாண்டியன் 47, 67, 68, 71, 72, 73, 75, 77, 98, 100, 101, 103
பரியன் ஏரி 76, 86, 87, 104, 107
பல்லவராயன் 76, 104
பள்ளங்குடிப்பற்று 83
பள்ளற்றூர் 75, 100
பனங்காடு 80
பனைப்பாங்கிழார் 72, 100
பனையூர் நாடு 62
பாக்கமுடையான்பட்டு 73, 100
பாடிகாவல் 91
பாதூர் நாடு 62
பாமினி சுல்தான் 49, 52, 55
பிரஞ்சுக்காரர் 37, 38, 58, 78 101, 107, 117
பிரஞ்சுக்காரர் கோட்டை 38
பிரதாப தேவராயர் 51
பிரபன்னாமிர்தம் 51
பிரம்பை 73, 74, 100, 125
பிரம்மதேயக் கடமை 93
பிரம்மதேயம் 60
பிழை பொறுத்தார் பிள்ளை 106
பிறையூர் 72, 73, 104, 105
புக்க உடையார் 51
புக்கன் I 49, 50, 51
புஞ்சைப் புகலூர் 51
புத்துழான்பட்டு 72, 105

புதூர் 80
புய்சி 74
புரவுவரி 56, 90
புரவுவரியார் 56
புரோக்ஸ் போன்பரி 102
புவனேகவீரன் 52
புன்னை ஊறுகால் 87
பூங்குன்றம் 63, 77, 101, 110
பூத்துறை 80
பூண்டி 80, 122
பெண்ணை நதிவாணன் 112
பெண்ணை நதிவாணன் திரு
வாசல் 112
பெத்தேராயன் 52
பெருமங்கலம் 57, 80
பெருவெள்ளேரி 63
பெனுகொண்டா 55
பொன்பற்றி 81
பொன்வரி 90
போகக்கடமை 93
போகாண்மை 93
போசள வீர நரசிம்மன் 46
மட்டைப்பாக்கம் 68, 69
மடம் 36, 38, 39
மடுகரை 77, 111
மண்டலம் 59, 60
மணிகண்டன் 104
மதுரை 45
மருதமங்கலம் 81
மருதமுடையான் பட்டு
81, 105
மல்லதேவி 50
மனைவரி 91
மா 84
மாத்தூர் நாடு 60, 62, 63
முகம்மது III 52
முத்தரையர் பாளையம் 75
முத்துக்குமாரசாமி 114
முசாபர்ஜங் 74
முல்பாகல் 48
மெய்குன்றா வளநாடு 62
மெய்ஞ்ஞான மாமுனி
41, 122, 123, 124
மேலூர் நாடு 62
மேழியனூர் 80
மேழிவான் கோத்திரம் 124
மேற்கடம்வரி 93
மோசுகுளத்தூர் 76, 77, 104
மோக்ஷகுளம் 77
ஏங்கராயர் 54
ரேய்ச்சூர் 53
லயோன்ஸ் லொழியே 117
வண்ணத்தான்பட்டு
74, 105, 106
வண்ணாரக் கொல்லை
81, 105, 106
வம்பப்பட்டு 74
வரதாச்சாரியார். கோ 40
வல்லூர் 81
வலிக்கடைப்பு 93
வழுதாவூர் 58, 78, 79
வளநாடு 59, 60
வளவதரையன் 76, 104
வாசல் ஒட்டு 91
வாசல்வரி 91
வாசல் விநியோகம் 91
வாணர் தலைவன் 52, 113
வாணாதராயன் திருவாசல்
112
வால்வரி 92, 99
விசயபுரி சுல்தான் 53
விசயராயர் 39, 57, 53, 106
121
விடேல் விடுகுச் சதுர்வேதி
மங்கலம் 64, 65, 67

விரிஞ்சிபுரம் 48
விருதராச பயங்கர நல்லூர் 81
விருப்பண்ண உடையார் 51
விருபாட்சராயர் II
51, 52, 53, 57, 105
வில்லபுரி 65
வில்லவராயர் 122
வில்லியநல்லூர்க் கட்டளை
83
வில்லியர்கள் 66
வில்லியனூர்க் கோட்டை 38
வில்லியனூர் வாயில் 37
வில்லியாதன் 66
வில்லைப் புராணம்
39, 40, 65, 96, 97
வில்லை முத்துக்குமாரர்
பிள்ளைத் தமிழ் 40
வில்வ நல்லூர் 65
வில்வமா நகர் 65, 96
விழியக்கிடைப்பு 84
விஷ்ணுச்சேரி 79
வீதிவிடங்கன் சிற்றம்பல
முடையான் 109
வீரய்யராயர் 122
வீரராகவ கவி 39
வீராவதார வளநாடு 62
வேங்கடசாமி முதலியார்
125
வேங்கடதேவராயர்
55, 56, 67, 116
வேங்கடாத்திரி 54
வேலி 84, 85
வைகாசி 72, 73, 100, 107
வைத்தியநாதர் 96
ஜூலியன் வேன்ஸான் 39
ஸ்ரீசைலம் 50, 51
ஸ்ரீதேவவதி 88
ஸ்ரீரங்கதேவர் 55, 56
ஸ்ரீரங்கப்பட்டினம் 55
ஸ்ரீராம 52
ஸ்ரீவல்லபன் 53
ஸ்ரீவிருபாட்ச 52



இந்நூலாசிரியர்

**புலவர் ந. வேங்கடேசன்**

புதுவை வில்லியனூர்